ChildFund Sri Lanka

Child Development Fund

# வலயக்கல்வி அலுவலகம் திருகோணமலை

# தரம்-11 மாணவர்களுக்கான COVID-19 விடுமுறைக்காலப் பயிற்சிக் கையேடு

- தமிழ் மொழியும் இலக்கியமும்
- வரலாறு

அனுசரணை

சிறுவர் நிதியமும்(C.F) சிறுவர் அபிவிருத்தி நிதியமும்(C.D.F)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vipulananda College SCHOOL LIBRARY RESOURCE CENTRE TRINCOMALEE 24/8/2020



## தரம் - 11 தமிழ்மொழியும் இலக்கியமும் பயிற்சி – 01

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) "கொங்கர்க்கு அமராபதி யளித்த **கோ**வே" இங்கு **கோ** என்பது,
(1) அரண் (2) இந்திரன் (3) அரசன் (4) ஆசான்

02) "**நித்தில**ப் புன்னகை சுடர் வீசிட" இங்கு **நித்திலம்** என்பது,
(1) மாலை (2) விழி (3) முத்து (4) பல்

03) "ஏதிலார் ஆரத் **தமர்** பசிப்பர்" இங்கு **தமர்** என்பதன் எதிர்க்கருத்து,
(1) உறவினர் (2) பிறர் (3) பகைவர் (4) உற்றார்

04) "அடக்கமுடையார் **அறிவில**ரென்றெண்ணி" இங்கு **அறிவிலர்** என்பதன் எதிர்க்கருத்து,
(1) சான்றோர் (2) அறிவுடையோர் (3) புத்திசாலி (4) மேதை

05) "மெய்**வீரர்** பெயர்ந்ததுவும் நலமாயிற்று" இங்கு **வீரன்** என்பதன் எதிர்ப்பாற் சொல்,
(1) வீரி (2) வீராங்கனை (3) வீரச்சி (4) வீரப்பெண்

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06) பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு,
(1) அலவன் - பெடை (2) குண்டு - வடவை
(3) கலை - மந்தி (4) போத்து - பிணா

07) வண்டு, கொடை, மது, அருள் எனும் பொருள்களைத் தரும் சொல்,
(1) சுரும்பு (2) அளி (3) ஈகை (4) கருணை

08) நாட்டின் தற்போதைய சூழலில் Whatsapp பாவனை அதிகரித்துள்ளது. Whatsapp என்பதற்கு நிகராக தமிழில் வழங்கும் கலைச் சொல்,
(1) பண்பலை (2) அருகலை (3) காயலை (4) புலனம்

09) குழந்தைப் பருவத்தை குறிக்கப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்,
(1) ஒட்டிய வயிறும் உயர்ந்த கண்ணும்
(2) துள்ளித் திரிகின்ற பள்ளிக் காலம்
(3) குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
(4) உள்ளத்தைக் கொள்ளை கொண்டு

10) அருணாக்கயிறு என்பதன் திருந்திய வடிவம்,
(1) அறணா கயிறு (2) அரைக் கயிறு (3) அறு கயிறு (4) அரைஞாண் கயிறு

11) ஆயுள் முழுவதும் பிரமச்சரிய விரதம் காத்து வாழ்வோனைக் குறிக்கும் சொல்,
(1) குரிசில் (2) துறவி (3) சிரஞ்சீவி (4) நைட்டிகன்

12) உலக நடையறிந்து ஒழுகுதல்,
(1) ஒப்புரவு (2) ஓம்படை (3) ஓலக்கம் (4) ஒத்துப்போதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) "வாய்மூத்தல்" என்ற மரபுத் தொடரின் பொருள்,
(1) பிழையாய்ப் பேசுதல் (2) உரத்துப் பேசுதல்
(3) அடக்கமின்றிப் பேசுதல் (4) பேசத் தொடங்குதல்

14) கலைத்துறை பற்றிய செய்திகளை அகர வரிசைப்படுத்தி தொகுத்துத் தரும் நூல்,
(1) அகராதி (2) நிகண்டு (3) கலைக் களஞ்சியம் (4) அணிந்துரை

15) முக்கிய கருத்தை நிறைவேற்றத் தவறுதல் எனும் கருத்தைத் தரும் உவமைத் தொடர்,
(1) கலியாண சந்தடியில் தாலி கட்ட மறந்தது போல
(2) உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல
(3) யானை முன் பூனை போல
(4) சிங்கத்தின் காட்டை சிறு நரி வளைத்தாற் போல

16) "அலை மோதும் போதே தலை முழுகு" எனும் பழமொழி தரும் பொருள்,
(1) கண்டிப்பின் அவசியம்
(2) சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது
(3) அனுபவ அறிவின் சிறப்பு
(4) சிறு குற்றமும் தவிர்

17) "சின்னஞ் சிறிய குருவி" இதில் வந்த சின்னஞ்சிறிய என்பது,
(1) அடுக்குத் தொடர் (2) இரட்டைக் கிளவி
(3) அடுக்கிடுக்குத் தொடர் (4) இணைமொழி

18) பின்வரும் சொற்களுள் மங்கலமாக அமையும் சொல்,
(1) வாய்க்கால் (2) நல்ல பாம்பு (3) சோணாடு (4) பறி

19) இராட்சசம், சாத்வீகம், தாமசம் என்பன,
(1) மும்மலம் (2) முக்குணம் (3) முக்குற்றம் (4) முத்தொழில்

20) சிறுவன் சீருஞ் சிறப்புமாக வாழ்ந்தான் என்பதற்கு எதிர்ப்பொருளாக அமையும் இன்னொரு இணைமொழி,
(1) கூனிக்குறுகி (2) கலகல (3) வாடிவதங்கி (4) ஆடிப்பாடி

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

21) "சொன்மலரை பண்பென்னும் நாரிற் றொடுத்தினிய நன்மணமாம் பண்பு நனி கமழ" இதில் வந்த உரிச் சொல்,
(1) மலர் (2) பண்பு (3) நனி (4) மணம்

22) "கூனலிளம் பிறை" என்பது,
(1) தொழிற்பெயர் (2) சினைப் பெயர் (3) பண்புப் பெயர் (4) பொருட் பெயர்

23) "ப" என்ற எழுத்து உச்சரிப்பில் வேறுபடும் சொல்,
(1) நாம்பன் (2) ஆம்பல் (3) கோபம் (4) சம்பல்

24) தோட்டந்துரவு என்பது,
(1) உம்மைத் தொகை (2) உவமைத் தொகை (3) வேற்றுமைத் தொகை (4) பண்புத் தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25) செத்தான், கண்டான் ஆகிய வினைச்சொற்களின் பகுதிகளை சரியாகக் கொண்ட தொகுதி,
(1) செத்து, கண் (2) செத்து, கண்டு (3) செத்து, காண் (4) சா, காண்

26) பன்மை விகுதி பெற்று வரக்கூடிய சொல்,
(1) தென்றல் (2) நீர் (3) மலை (4) வெய்யில்

27) பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயர்,
(1) குருவிக் குஞ்சு (2) குட்டி வீடு (3) பாக்கியசாலி (4) ஆட்டநாயகன்

28) உயிர்முன் உயிர் வந்து புணர்வதற்கு எடுத்துக்காட்டு,
(1) மரவேர் (2) பலாப்பழம் (3) வாழையிலை (4) நீராகாரம்

29) பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும். இதில் இல் உருபின் பொருள்,
(1) காரணம் (2) நீங்கல் (3) இடம் (4) உடைமை

30) கடும் மழை பொழிந்தது. கிணறுகள் நிரம்பவில்லை. இவ்விரு வாக்கியங்களையும் இணைக்க பொருத்தமான இணைப்பிடைச் சொல்,
(1) இருப்பினும் (2) ஏனென்றால் (3) ஆதலால் (4) ஆகவே

31) அரசாங்க சேவை நியமங்கள் பற்றிய பொதுவிதிகள் ........................ பிரசுரிக்கப்படும்.
(1) சுற்றுநிருபத்தில் (2) வர்த்தமானியில் (3) கையேட்டில் (4) விண்ணப்பப்படிவத்தில்

32) இலங்கை சுதந்திரமடைந்து ஏறத்தாழ ஏழு ................. ஆகின்றன.
(1) தசாப்தங்கள் (2) சதாப்தங்கள் (3) சகாப்தங்கள் (4) வற்சரங்கள்

33) சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை நீக்கி .................... செய்ய வேண்டியது நம் எல்லோரதும் கடமையாகும்.
(1) சிரமதானம் (2) சீர்திருத்தம் (3) சீர்படுதல் (4) முன்னேற்றம்

34) ஜனாதிபதி தேர்தலுக்குரிய ..................... தாக்கல் செய்வதற்கான முடிவுத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.
(1) பதிவு (2) விண்ணப்பம் (3) வேட்புமனு (4) விஞ்ஞாபனம்

35) நாட்டில் அச்சிட்டு வெளியிடப்பெற்ற நூல்கள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் முதலான வற்றின் பிரதிகள் தேசிய ........................... பேணப்பட்டு வருகின்றன.
(1) சுவடிகள் கூடத்தில் (2) கலைக்கூடத்தில் (3) நூதனசாலையில் (4) நூலகத்தில்

- கீழே தரப்பட்ட பாடலை அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

படித்தறியா மிக ஏழைக் கிழவ னேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்
துடித்தெழுந்து தன் மெலிந்த தோளைக் கொட்டி
தொளை மிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை

இப்பொழுதே இக்கணமே என்றார்த்து
அடித்துரைத்து ஆவேசம் கொள்வா னென்றால்
அப்பாட்டின் பெருமை சொல்ல யாரோ வல்லார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36) இப்பாடலில் கவிஞர் கூறும் பிரதான கருத்து,
(1) பாரதியின் பாடற் சிறப்பு (2) பாரதியின் பாட்டின் அணிச்சிறப்பு
(3) மக்களின் அடிமை வாழ்வு நீங்குதல் பற்றியது (4) முதியோரின் வறுமை பற்றியது

37) பின்வரும் கூற்றுக்களுள் ஏழைக் கிழவனோடு பொருந்திச் செல்லாத கூற்று எது?
(1) ஏழைக் கிழவன் படிப்பறிவற்றவன்.
(2) ஏழைக் கிழவன் மெலிந்த தோள்களையுடையவன்.
(3) ஏழைக் கிழவன் பாட்டிசைக்கக் கூடியவன்.
(4) ஏழைக் கிழவன் தொளை மிகுந்த கந்தலுடை அணிந்தவர்.

38) துடித்தெழுதல், தோள் கொட்டுதல் கந்தலுடை சுருக்கிக் கட்டுதல், அடித்துரைத்தல் என்ற தொடர்கள் மூலம் உணர்த்தப்படுவது என்ன?
(1) ஏழ்மை (2) ஆவேசம் (3) பெருமை (4) பெருமிதம்

39) மக்கள் எத்தகைய வாழ்வு வாழ வேண்டுமென பாரதி விரும்பினான்?
(1) ஏழ்மையற்ற வாழ்வு (2) சுதந்திர வாழ்வு
(3) நேர்மையான வாழ்வு (4) அச்சமற்ற வாழ்வு

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு பொருத்தமான வைப்புமுறையை தெரிவு செய்க.
(அ) அன்றியும் சரஸ்வதி மகாலயம் எனும் நூல் நிலையமும் ஸ்தாபிக்கப்பட்டது.
(ஆ) இத்தகைய காரணங்களால் தமிழ்மொழி அக்காலத்தில் சிறப்புற்றோங்கியது.
(இ) ஈழத்து தமிழரசுக் காலத்தில் தமிழ்மொழி பல துறைகளிலும் உயர்ந்த நிலையில் இருந்தது.
(ஈ) தமிழ் நூல்களை ஒருங்குசேர்த்து அங்கு பேணிக்காத்து வந்தனர்.
(உ) தட்சண கைலாச புராணம், இரகுவம்சம் என்பன இக்காலத்தில்தான் ஆக்கப்பெற்றன.
(1) இ, உ, அ, ஈ, ஆ (2) ஈ, இ, உ, அ, ஆ
(3) இ, உ, அ, ஆ, ஈ (4) இ, உ, ஆ, ஈ, அ

## தரம் – 11 தமிழ்மொழியும் இலக்கியமும் பயிற்சி – 02

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) "பெரிது இனிது பேதையார் கேண்மை ....." இங்கு **கேண்மை** என்பது,
(1) பகைமை (2) நன்மை (3) நட்பு (4) தீமை

02) "கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம் ....." இங்கு **கதி** என்பது,
(1) நிர்க்கதி (2) வீடுபேறு (3) வேகம் (4) உறுதி

03) "நரகம் புகினும் எள்ளேன் ......" இங்கு **நரகம்** என்பதன் எதிர்க்கருத்து,
(1) நரகலோகம் (2) மரணம் (3) சொர்ணம் (4) சொர்க்கம்

04) "மூன்றுலகு மீன்றானை முன்னீன்றானைப் பெற்றதால் ......" இங்கு **மூன்றுலகு** என்ற சொற்றொடரால் குறிப்பிடப்படுவன முறையே,
(1) மண், விண், பாதாளம் (2) பரலோகம், சிவலோகம், எமலோகம்
(3) மண், விண், நடு (4) சொர்க்கம், நரகம், பாதாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05) "அரவுயர்த்தோனுடன் மறுகுது ஆடி ........." இங்கு அரவு என்பதனுள் அடங்காதது எது?
(1) பணி (2) கட்செவி (3) பாம்பு (4) அரகம்

06) சிறுவர்கள் Cartoon நிகழ்வுகளில் ஆர்வம் காட்டுகின்றனர். இங்கு Cartoon என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான கலைச்சொல்,
(1) கேலிச் சித்திரம் (2) நிழல் சித்திரம் (3) கதைச் சித்திரம் (4) அசையும் சித்திரம்

07) பாட்டு, புலவன், குரங்கு ஆகிய சொற்கள் குறிக்கும் ஒரு சொல்,
(1) கவிஞன் (2) கவி (3) இசைஞன் (4) இசை

08) பிறருக்கு கொடுத்து மகிழ்வதால் ஏற்படும் இன்பம்,
(1) பேரின்பம் (2) இகபர இன்பம் (3) ஈத்துவக்கும் இன்பம் (4) உவகை

09) அலை, அழை, அளை என்பன முறையே தரும் பொருள்,
(1) கூப்பிடு, திரை, புற்று (2) கூப்பிடு, புற்று, திரை
(3) புற்று, திரை, கூப்பிடு (4) திரை, கூப்பிடு, புற்று

10) யானை பிளிறும் என்பது போல தேவாங்கு,
(1) அலப்பும் (2) அழும் (3) கதறும் (4) ஓலமிடும்

11) கண் வளர்தல் என்னும் மரபுத்தொடர் தரும் பொருள்,
(1) அறிவு உண்டாதல் (2) இறத்தல் (3) நித்திரை செய்தல் (4) கண்ணோடுதல்

12) காயம்பட்ட இடத்திலிருந்து குருதி குபீர் குபீர் எனப் பாய்ந்தது. இதில் குபீர் குபீர் என்பது,
(1) அடுக்குமொழி (2) அடுக்குத் தொடர் (3) இணைமொழி (4) இரட்டைக் கிளவி

13) இயல்பு வழக்காக அமைந்த சொல்,
(1) புறநகர் (2) கோயில் (3) பாண்டிநாடு (4) நன்னிலம்

14) போர்த்துக்கேய மொழிச்சொல்லாக அமைவது,
(1) அன்னாசி, கதிரை (2) அன்னாசி, துப்பாக்கி (3) கதிரை, தளபாடம் (4) கதிரை, கோப்பி

15) பின்வருவனவற்றுள் எழுத்துப் போலியாக அமைந்த சொல்
(1) தேசம் (2) மையல் (3) நேயம் (4) சாம்பல்

16) "ஆலையில்லா ஊருக்கு இலுப்பம்பூ சர்க்கரை" எனும் பழமொழி உணர்த்தும் கருத்து,
(1) உத்தம நட்பு (2) அற்பனுக்கு மதிப்பு (3) வஞ்சகம் (4) அறியாமை

17) பின்வருவனவற்றுள் ஓசை நயத்துடன் அமைந்துள்ள இணைமொழி,
(1) ஒளிப்பு மறைப்பு (2) கல்வி கேள்வி (3) ஏறக்குறைய (4) பச்சைப்பசேல்

18) "இப்படியிருக்கலாம்" எனக் கொள்ளப்படுவது,
(1) எடுகோள் (2) கருதுகோள் (3) திசைகோள் (4) உபகோள்

19) பின்வருவனவற்றுள் பொதுமொழிச் சொல்லாக அமைவது,
(1) தாமரை (2) அன்னம் (3) பொய்கை (4) மீன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) அச்சத்தை உணர்த்தும் ஒலிக்குறிப்புச் சொல்லாக அமைவது,
(1) விருட்டென (2) துணுக்கென (3) திடுமென (4) பளீரென

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

21) பின்வருவனவற்றுள் உயிர் மெய்க்குறில் எழுத்துக்களை மட்டும் கொண்ட சொல்,
(1) காவலன் (2) சிங்கம் (3) பகவதி (4) சுறா

22) அறுசுவை உணவு உண்டேன். "அறுசுவை" என்பது,
(1) பண்புத் தொகை (2) உவமைத் தொகை (3) உம்மைத் தொகை (4) வினைத் தொகை

23) பகாப்பதமாக அமையும் சொல்,
(1) ஓடல் (2) ஓட்டம் (3) கவிஞன் (4) அரவம்

24) நான் கற்பித்தேன். இங்கு "கற்பித்தேன்" என்பது,
(1) செய்வினை (2) பிறவினை (3) ஏவல் வினை (4) துணை வினை

25) கூட்டுப் பெயருக்கு உதாரணமாக அமைவது,
(1) பச்சையரிசி (2) தாய் (3) ஒத்திகை (4) அரண்

26) பின்வருவனவற்றுள் தொழிற்பெயர் அல்லாதது,
(1) படித்தல் (2) ஓட்டம் (3) வட்டம் (4) ஓடாமை

27) பின்வருவனவற்றுள் ஆக்க வினையடை,
(1) நேற்று (2) அங்கே (3) விரைவாக (4) காலையில்

28) "ப" என்ற எழுத்து உச்சரிப்பில் வேறுபடும் சொல்,
(1) நாம்பன் (2) ஆம்பல் (3) கோபம் (4) சம்பல்

- பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியை தெரிவு செய்க.

29) (1) ஏவல் வினை - நட, வா, ஓடுங்கள்
(2) வியங்கோள் வினை - இரங்குக, ஒழிக, வாழிய
(3) குறிப்பு வினை - நல்லவன், கரியன், பெரியன்
(4) வினையெச்சம் - விரைந்து, பாடிய, படித்து

30) (1) மாற்றுப் பெயர் - நான், தான், அவன்
(2) ஆக்கப் பெயர் - முயற்சி, படிப்பு, உயர்வு
(3) தொழிற் பெயர் - படித்தல், நடித்தல், பறிமுதல்
(4) கூட்டுப் பெயர் - பச்சையரிசி, நீரேரி, கணையாழி

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31) கொரோனா தொற்றிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்க ...................... பயிற்சி வழங்கப்பட்டது.
(1) கைகுலுக்கும் (2) கை கழுவும் (3) கை துடைக்கும் (4) கை மாற்றும்

32) தேர்தல் வாக்களிப்பில் .................. முறையும் உள்ளது.
(1) தொலைதூர வாக்களிப்பு (2) அஞ்சல் வாக்களிப்பு
(3) விடுமுறை வாக்களிப்பு (4) ஓய்வுநேர வாக்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33) வணிகத்துறையிலே சில பொருட்களின் விலையேற்றத்திற்குக் காரணம் அப்பொருட்கள் மீதான .................. எனக்கூறின் மிகையாகாது,

(1) பாதீடு (2) பணப்பெருக்கம் (3) ஏகபோகம் (4) அங்காடி

34) இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் .............. வழங்கப் பட்டுள்ளது.

(1) மானியம் (2) ஓய்வூதியம் (3) காப்பீடு (4) நிவாரணம்

35) தான் பிறந்த நாட்டை நேசிப்பவன் .................. எனப்படுவான்,

(1) அபிமானி (2) பற்றாளன் (3) நேசன் (4) தேசாபிமானி

- கீழே தரப்பட்ட பாடலை அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

சாதிமத பேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம் பின்னர்
ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
பேத சுயமரியாதை உலகு எனப் பேர் வைப்போம்
ஈதே காண்! சமூகமே யாம் சொன்ன வழியில்
ஏறு நீ ஏறு நீ ஏறே

36) கவிஞர் சிருஷ்டிக்க விரும்பும் உலகிற்கு அவர் வைக்க விரும்பும் பெயர் யாது?

(1) பேதமிலா உலகு (2) புதிய உலகு (3) அறிவுலகு (4) சுயமரியாதையான உலகு

37) தாம் வாழ்ந்த காலத்து உலகிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியவை எனக் கவிஞரால் கருதப் படாதவை,

(1) சாதி மதபேதங்கள் (2) மூட வழக்கங்கள் (3) துரும்புகள் (4) சண்டைகள்

38) இப்பாடலைக் கவிஞர் எத்தகைய உணர்வோடு பாடியுள்ளார்?

(1) இரக்கம் (2) ஆவேசம் (3) துன்பம் (4) பரிகாசம்

39) "சண்டை யுலகிதனை ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்" இதில் உவமானமாக வந்துள்ளது?

(1) ஊதையினில் துரும்பு (2) சண்டை உலகு (3) போல (4) அலைக்கழித்தல்

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு பொருத்தமான வைப்புமுறையை தெரிவு செய்க.

(அ) தொலைமடல் மிகத் துரிதமானதும் நவீனமானதுமான செய்திப் பரிமாற்றச் சாதனமாகும்.
(ஆ) அதைத் தொடர்ந்து தூர இடங்களில் தொலைபன்னிகள் மூலம் செய்திகள் பதியப்பட்டன.
(இ) டெலிபோன் என்னும் தொலைபேசி தந்தி முறைக்கு அடுத்தமுறையாக அறிமுகப்படுத்தப் பட்டது.
(ஈ) தொலைத்தொடர்பு வளர்ச்சியின் ஆரம்பம் டெலிகிராம் என்னும் தந்தி முறையாகும்.
(உ) இன்று தொலை அச்சு, தொலை மடல் என்பன பாவனையில் உள்ளன.

(1) ஈ, இ, ஆ, உ, அ (2) இ, அ, ஆ, உ, ஈ
(3) இ, உ, ஆ, அ, ஈ (4) ஈ, இ, உ, ஆ, அ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 11 தமிழ்மொழியும் இலக்கியமும் பயிற்சி – 03

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) "பிணக்கறுக்கும் மூத்தோர் இல்லா ........" இங்கு **பிணக்கு** என்பது,
(1) கணக்கு (2) முரண்பாடு (3) பிரச்சினை (4) அறிவுரை

02) "சீனத்து செப்பே என்ற சிங்காரப்பூ நிலவே" என்பதில் வரும் **சிங்காரம்** என்பது,
(1) அழகு (2) பிரகாசம் (3) ஆடம்பரம் (4) அன்பு

03) "பதி இழந்தனம் பாலனை இழந்தனம் பாலன்" இங்கு **பாலன்** என்பதன் எதிர்ப்பதம்,
(1) மூத்தோர் (2) இளையோர் (3) விருத்தன் (4) சிறுவன்

04) "நடுக்குற் றிருமிடை மிடைந்த சிலசொற் பெருமுதாளரேமாகிய வெமக்கே" இங்கு **முதாளர்** என்பதன் எதிர்க்கருத்து,
(1) இளையவர் (2) முதியவர் (3) பெரியவர் (4) நோயாளர்

05) "தச்சன் செய்த சிறுமாவையம்" இங்கு **தச்சன்** என்பதன் எதிர்ப்பாற் சொல்,
(1) தச்சிச்சி (2) தச்சி (3) தச்சினி (4) தச்சை

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06) பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு,
(1) அறிஞர் - அவை (2) புல் - கற்றை
(3) முத்து - மாலை (4) சேனை – திரள்

07) கைத்தொலைபேசியின் வைபிரேற்றர் (Vibrator) பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. Vibrator என்பது,
(1) எண்மானம் (2) இறுவட்டு (3) அதிரி (4) சத்தம்

08) களபம், குஞ்சரம், தும்பி என்பவற்றைக் குறிக்கும் வேறு ஒரு சொல்,
(1) குதிரை (2) யானை (3) சிங்கம் (4) நாய்

09) மேகம், ஆபரணம், அழகு என்னும் பொருள் தரக்கூடிய ஒரு சொல்,
(1) அணி (2) வடிவம் (3) கார் (4) மஞ்சு

10) புகையிலை அடுக்கப்பட்டிருப்பது சிப்பம் போல வைக்கோல் அடுக்கப்பட்டிருப்பது,
(1) பாடம் (2) போர் (3) அடுக்கு (4) குவியல்

11) உதவி செய்தல் என்னும் மரபுத்தொடரின் கருத்து,
(1) தலை தடவுதல் (2) தோள் கொடுத்தல் (3) தட்டிக் கொடுத்தல் (4) கை நீட்டுதல்

12) பின்வருவனவற்றுள் இணைமொழி அல்லாதது,
(1) பென்னம் பெரிய (2) சூதுவாது (3) தோட்டந்துரவு (4) இன்னார் இனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) தனக்கே உடமையாக முழுப் பொருளையும் அபகரித்தல்,
(1) ஏகபோகம் (2) சுரண்டல் (3) சர்வாதிகாரம் (4) தனியுரிமை

14) கடா — மறி போல குண்டு,
(1) பெட்டை (2) பெடை (3) பிணா (4) வடவை

15) உண்மையை வெளிப்படையாக பேசுபவர்கள் அதிகமான எதிர்ப்புகளுக்கு ஆளாவார்கள் என்பதை விளக்கும் பழமொழி,
(1) பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்.
(2) வினை விதைப்பவன் வினை அறுப்பான்.
(3) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்
(4) யதார்த்த வாதி வெகுசன விரோதி

16) காலத்தே பயிர் செய் என்ற பழமொழியின் கருத்து,
(1) பயிரிடுவதற்கென்று காலம் வரையறுக்கப்பட்டுள்ளது.
(2) உரிய காலத்தில் எதுவும் செய்துவிட வேண்டும்.
(3) பருவ காலங்கள் பயிர்ச் செய்கைக்கு உகந்தவை.
(4) காலந்தவறிப் பயிர் செய்தால் விளைச்சல் குறையும்.

17) "ஆண்டி முதல் அரசன் வரை தைத்திருநாளைக் கொண்டாடி மகிழ்வார்" இங்கு "ஆண்டி முதல் அரசன் வரை" என்ற அருஞ்சொற்றொடரின் பொருள்,
(1) ஏழை முதல் பணக்காரன் வரை
(2) ஏழை முதல் பிச்சைக்காரன் வரை
(3) இளையோர் முதல் முதியோர் வரை
(4) வறியவர் முதல் முதியவர் வரை

18) ஆனைவாயிற் கரும்பு போல என்ற உவமைத் தொடர் உணர்த்துவது,
(1) பயனற்ற செயல் (2) இனிப்பான செயல்
(3) முழுமையான செயல் (4) சின்னாபின்னமடைதல்

19) பின்வருவனவற்றுள் குறிப்பு வினைப் பகுபதம்,
(1) பொன்னன் (2) சிரித்தான் (3) நடந்தான் (4) பாடினான்

20) முதன்முதலாக எழுதப்படும் கவிதை,
(1) கன்னிக் கவிதை (2) மரபுக் கவிதை (3) புதுக் கவிதை (4) ஒத்திகை

21) இரண்டு கண்களும் சிவந்தது என்பது,
(1) எண் வழு (2) திணை வழு (3) கால வழு (4) மரபு வழு

22) ககரம் h என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்,
(1) தங்கம் (2) சுகம் (3) கதவு (4) தீங்கு

23) பின்வருவனவற்றுள் வினைப் பகுபதமாக அமையும் சொல்,
(1) பெரியன் (2) அறிஞன் (3) கூத்தன் (4) ஓடினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) பின்வருவனவற்றில் ஆக்க வினையடை,
(1) நேற்று (2) அங்கே (3) வேகமாக (4) காலையில்

25) பள்ளி மாணவர்கள் வெள்ளாடை அணிந்து பட்டாம்பூச்சி போல் பாடசாலைக்குப் பறந்தனர். இங்கு வெள்ளாடை என்பது,
(1) வேற்றுமைத் தொகை (2) உவமைத் தொகை
(3) வினைத் தொகை (4) பண்புத் தொகை

26) தங்கத்தால் செய்த காப்பு என்பது,
(1) 5ம் வேற்றுமை ஆக்கப்பொருள் (2) 3ம் வேற்றுமை மூலப்பொருள்
(3) 3ம் வேற்றுமை கலப்புப் பொருள் (4) 3ம் வேற்றுமை அடைமொழிப்பொருள்

27) ஓட்டப் போட்டியில் மிகவேகமாக ஓடியதனால் வெற்றி பெற்றான். இங்கு மிக வேகமாக என்பது,
(1) வினைத்தொடர் (2) பெயர்த்தொடர்
(3) வினையடைத் தொடர் (4) பெயரடைத் தொடர்

28) இயல்புப் புணர்ச்சி இடம்பெற்றமைந்தது,
(1) மூவிடம் (2) சோறுண்டான்
(3) வேலெறிந்தான் (4) சோற்றுருண்டை

- பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியை தெரிவு செய்க.

29) (1) சினைப் பெயர் - கை, பூ, கிளை
(2) இடப் பெயர் - கோபாலபுரம், சந்தை, நிலாவெளி
(3) காலப் பெயர் - வாரம், கார்த்திகை, நேரம்
(4) குணப்பெயர் - இனிப்பு, வட்டம், மரப்பலகை

30) (1) மூன்றாம் வேற்றுமை - கருவி, கருத்தா, உடன் நிகழ்ச்சி
(2) நான்காம் வேற்றுமை - பகை, நட்பு, கொடை
(3) ஐந்தாம் வேற்றுமை - எல்லை, ஏது, நீங்கல்
(4) ஆறாம் வேற்றுமை - உடைமை, தற்கிழமை, எழுவாய்

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31) வெளிநாட்டு முதலீட்டால் நாட்டு மக்கள் …………………… பெற்றுள்ளனர்.
(1) வரி (2) வட்டி (3) இலாபம் (4) வேலைவாய்ப்பு

32) இன்றைய காலகட்டத்தில் அரசாங்கம் பெருவாரியான பொருட்களுக்கு ………. விதித்துள்ளது.
(1) வட்டி (2) பிணைமுறி (3) இலாபம் (4) தீர்வை

33) இலங்கை மத்திய வங்கி அமெரிக்கா டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் ……………….. விகிதத்தை அறிவித்துள்ளது.
(1) செலாவணி (2) பிணைமுறி (3) நாணயமாற்று (4) வரி

34) இலங்கையை இறுதியாக ஆண்ட சங்கிலி அரசனின் ஆடைகளும், வாளும் ………………….. வைக்கப்பட்டுள்ளன.
(1) கலாபவனத்தில் (2) நூதனசாலையில்
(3) சுவடிகள் காப்பகத்தில் (4) காட்சிக் கூடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35) ஊருக்குள் புகுந்து அழிவுசெய்யும் காட்டு யானைகளை விரட்டும் பணியில் இராணுவமும் வனவிலங்குத் திணைக்களமும் இணைந்து,

(1) ஈடுபடுகிறார்கள் (2) ஈடுபடுகின்றன
(3) ஈடுபடுகின்றது (4) ஈடுபட்டு வருகின்றார்கள்

36) நாம் நேர்மையாக நடந்துகொள்வோமாயின் எவ்வித துன்பங்களும் எம்மை …………

(1) அணுகாது (2) அணுக முடியாது (3) அணுக மாட்டாது (4) அணுகா

- கீழே தரப்பட்ட பாடலை அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

படுக்கும் மெத்தையில் பஞ்சை இழுக்கிறாய்
பாதவிரல்நகம் பல்லால் கடிக்கிறாய்
அடுக்கும் கறியை அலக்கழிக்கிறாய்
அல்லும் எல்லும் இந்தப் பொல்லாங்கு செய்கிறாய்

37) இக்கவிதையில் எல் என்பது எதனைக் குறிக்கிறது?

(1) இரவு (2) நிசி (3) கங்குல் (4) பகல்

38) விரல் நகம் என்பது எவ்வகைத் தொகை,

(1) வேற்றுமைத் தொகை (2) பண்புத் தொகை
(3) வினைத் தொகை (4) உம்மைத் தொகை

39) அல்லும் எல்லும் என்பது,

(1) இரட்டைமொழி (2) இணைமொழி (3) அடுக்குமொழி (4) அடுக்கிடுக்கு மொழி

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு பொருத்தமான வைப்புமுறையை தெரிவு செய்க.

(அ) இன்றைய உலகில் தனிமனிதனாக எவனும் வாழ்ந்துவிடமுடியாது.
(ஆ) ஒன்றுகூடி வாழ்வதே உயர்ந்த வாழ்வாகும்.
(இ) இவ்வாறு வாழக் கூட்டுறவு மனப்பான்மை அடிப்படையானதாகும்.
(ஈ) மனிதன் தன் தேவைகளைப்பெற ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது.
(உ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது முதுமொழி.

(1) உ, அ, ஈ, ஆ, இ, (2) ஆ, இ, அ, உ, ஈ
(3) ஆ, அ, ஈ, உ, இ (4) உ, அ, இ, ஈ, ஆ

## தரம் - 11 தமிழ்மொழியும் இலக்கியமும் பயிற்சி – 04

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) "தண்டேன் நுகரா மண்டுகம் …..." இதில் **மண்டுகம்** என்பதன் ஒத்த சொல்,

(1) வண்டு (2) காடு (3) தவளை (4) தேன்

02) "தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும் …..." இங்கு **கயம்** என்பது,

(1) கிணறு (2) குளம் (3) கடல்நீர் (4) குட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) பிறிற்றோ என்பவர் பழுத்த வழக்கறிஞர், வாதம் செய்வதில் வல்லவர். இங்கு **வாதம்** என்பதன் எதிர்க்கருத்து,

(1) விவாதம் (2) தர்க்கம் (3) பிரதிவாதம் (4) சண்டை

04) மாகமடங்கலும் மால்விடையும் என்பதில் **விடை** என்பதன் எதிர்ப்பாற் சொல்,

(1) பெண் (2) காளை (3) நாகு (4) எருமை

05) துன்பத்தில் துயருற்ற தனது நண்பனுக்கு தோள் கொடுத்தான் தோழன். இங்கு **தோள்கொடுத்தல்** எனும் மரபுத்தொடரின் பொருள்,

(1) உதவி செய்தல் (2) பரிவு காட்டுதல்
(3) நன்மை செய்தல் (4) தோளைக் கொடுத்தல்

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06) ககரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்,

(1) கப்பல் (2) கடல் (3) மேகம் (4) கதவு

07) புலனழிந்தொரு புத்துயி ரெய்துவேன் என்பதில் வந்துள்ள எழுவாய்,

(1) புலன் (2) எய்துவேன் (3) புத்துயிர் (4) நான்

08) ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா,

(1) வெள்ளி விழா (2) பொன் விழா (3) பவள விழா (4) மணி விழா

09) கரடி கத்தும் என்பது போல சிங்கம் ..........,

(1) கத்தும் (2) முக்காரமிடும் (3) கர்ச்சிக்கும் (4) பிளிறும்

10) தென்னையின் இலை ஓலை போல நெல்லின் இலை,

(1) தாள் (2) இலை (3) ஓலை (4) கதிர்

11) ஒத்த கருத்துச் சொற்களின் இணைப்பு அல்லாதது,

(1) அம்புயம் - தாமரை (2) இடுக்கண் - துன்பம்
(3) அன்பு – வன்பு (4) அப்பு – நீர்

12) மாவின் தொகுதி கொத்து என்பது போல வாழையின் தொகுதி,

(1) சீப்பு (2) கொத்து (3) குலை (4) கதிர்

13) பூனையின் ஆண் கடுவன் என்பது போல நண்டின் ஆண்,

(1) அலவன் (2) குண்டு (3) போத்து (4) கடா

14) "நித்திலப் புன்னகைச் சுடர் வீசிட ...." இதில் வந்துள்ள அணி,

(1) உருவகம் (2) உவமை (3) தற்குறிப்பேற்றம் (4) உயர்வுநவிற்சியணி

15) பாரதியின் பாடல்கள் மரபுக்கவிதை வரலாற்றில் திருப்புமுனையாக அமைகின்றன என்பது,

(1) கலப்பு வாக்கியம் (2) தனி வாக்கியம் (3) கூட்டு வாக்கியம் (4) வியப்புவாக்கியம்

16) நான் பாடுவேன், நான் பேசுவேன் இவற்றை இணைக்கும் நிரப்பித்தொடர்,

(1) உம் (2) ஆனால் (3) அல்லது (4) ஆகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) கிழிஞ்ச என்பது எப்பிரதேச கிளைமொழி,
(1) தென்னிலங்கை (2) கிழக்கு (3) மலையகம் (4) வடக்கு

18) ஒவ்வொரு கனியும் ............
(1) இனிமையானது (2) இனிமையானவை (3) இனியன (4) இனிமையாயுள்ளன

19) அழகான மலர்கள் பூத்துக் குலுங்கின. இவ்வாக்கியத்தில் வந்துள்ள பெயரடை,
(1) பூத்து (2) மலர்கள் (3) அழகான (4) குலுங்கின

20) தென்னிந்தியாவில் பழங்காலத்தில் இருந்த எழுத்து,
(1) பிராமி எழுத்து (2) வட்ட எழுத்து
(3) தேவநாகரி எழுத்து (4) சித்திர எழுத்து

21) தமயந்தியின் கூந்தல் கார்மேகம் போன்று கன்னங்கரியதாக இருந்தது. இதில் வந்த கன்னங்கரிய என்பது,
(1) அடுக்குத்தொடர் (2) அடுக்கிடுக்குத்தொடர் (3) இரட்டைக்கிளவி (4) இணைமொழி

22) பெற்றோர் தம் மகனை கண்ணுக்குக்கண்ணாக வளர்த்தனர். இங்கு "கண்ணுக்கு கண்ணாக" என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது,
(1) கவனமாகப் பார்த்தல் (2) உறக்கமின்றி வளர்த்தல்
(3) நேரடியாக நோக்குதல் (4) நெருக்கமாக இருத்தல்

23) காற்றடித்து முருங்கை மரம் முறிந்தது. இங்கு முருங்கை என்பது,
(1) ஒல்லாந்த மொழி (2) மலையாள மொழி (3) சிங்கள மொழி (4) தெலுங்கு மொழி

24) வீண் செலவு செய்பவன் ..................,
(1) பேதை (2) ஊதாரி (3) உதவாக்கரை (4) கருமி

25) ஓடும் புளியம்பழமும் போல என்ற உவமைத்தொடருக்கு பொருத்தமான பிறிதொரு உவமைத் தொடர்,,
(1) நகமும் சதையும் போல (2) கீரியும் பாம்பும் போல
(3) தாமரை மேல் நீர்த்துளி போல (4) காந்தமும் இரும்பும் போல

26) அடிதழீஇ நிற்கும் உலகு இங்கு தழீஇ என்பது,
(1) ஒற்றளபெடை (2) ஐகாரக் குறுக்கம்
(3) குற்றியலிகரம் (4) உயிரளபெடை

27) சிறுமிகள் எல்லோரும் சிரித்து மகிழ்ந்தனர். இவ்வாக்கியம்,
(1) வினா வாக்கியம் (2) செயப்படுபொருள் குன்றிய வினை
(3) செயப்படுபொருள் குன்றாத வினை (4) கலப்பு வாக்கியம்

28) வீட்டு எசமான் பணியாட்களுக்கு கட்டளையிட்டார். இங்கு எசமான் என்பதன் எதிர்ப்பாற் சொல்,
(1) ஐயை (2) எசமாட்டி (3) எசமானி (4) எசமாட்டி அம்மா

29) கணினிகள் இயங்கியது. இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வழு,
(1) எண் வழு (2) பால் வழு (3) இட வழு (4) கால வழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30) ஒண்டும் இல்லை என்பதன் சரியான தமிழ் நியம வடிவம்,
(1) ஏதுமில்லை (2) எதுவுமில்லை (3) ஒன்றுமில்லை (4) எவையுமில்லை

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31) தமிழ் மொழித்தினப் போட்டிகள் தொடர்பான விதிமுறைகள் பாடசாலைக்கு ................. மூலம் அனுப்பப்பட்டது.
(1) வர்த்தமானியில் (2) கையேட்டில்
(3) சுற்றுநிருபத்தில் (4) விண்ணப்பப்படிவத்தில்

32) ................. என்பது நூலின் தொடக்கத்தில் அதன் ஆசிரியரினால் எழுதப்படுவது.
(1) அணிந்துரை (2) முன்னுரை (3) பொருளடக்கம் (4) முடிவுரை

33) இலக்கிய விழாவிற்கான நிகழ்வுகள் யாவும் .................. பார்க்கப்பட்டன.
(1) திருத்தம் (2) அரங்கேற்றம் (3) வெள்ளோட்டம் (4) ஒத்திகை

34) மன்னர்களது பெருமைகளை எடுத்துரைக்கின்ற ............. பல சாசனங்களில் காணப்படுகின்றன.
(1) கீர்த்தனைகள் (2) புனைந்துரைகள் (3) ஆவணங்கள் (4) மெய்க்கீர்த்திகள்

35) கலி, வெண்பா, விருத்தம், வஞ்சி என்பன .................. ஆகும்.
(1) பாட்டு (2) பாவினம் (3) யாப்பு (4) கவிதை

36) போதைவஸ்துக்களால் ஏற்படும் அபாயம் குறித்து மக்கள் மத்தியில் .................. மேற்கொள்ளப்பட வேண்டும்.
(1) பிரசாரம் (2) பிரகாரம் (3) பிரசுரம் (4) பிரகடனம்

- கீழே தரப்பட்ட பாடலை அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

முத்தமிழின் வடிவமெனத் தோன்றி மேற்கு
மொழிக் கடலும் வடகடலும் முறையினாடித்
தத்துவநன் னெறியுணர்ந்து சாந்தி கண்ட
தவ முனியை இசைத்தமிழின் தந்தையென
வித்தக யாழ் நூலருளும் விபுலானந்த
வியன் மணியை யீழ மணி விளக்கை நாளும்
சித்தமதில் மகிழ்ந்தேற்றிப் பத்தி செய்து
தெளிந்துண்மை வழிச் செல்வோம் யாமே.

37) இப்பாடலில் போற்றப்படும் பெரியார்,
(1) விவேகானந்தர் (2) தவமுனி (3) ஆறுமுகநாவலர் (4) விபுலானந்தர்

38) முத்தமிழ் எனப்படுபவை,
(1) வித்தகம், இயல், இசை (2) மொழி, இசை, நாடகம்
(3) மொழி, இயல், நாடகம் (4) இயல், இசை, நாடகம்

39) இப்பாடலில் இடம்பெற்றுள்ள புலவரின் நூலாக விளங்குவது,
(1) ஈழமணி (2) யாழ்நூல் (3) தத்துவ நன்னெறி (4) சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vipulananda College
SCHOOL LIBRARY
TRCO CENTRE



40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு பொருத்தமான வைப்புமுறையை தெரிவு செய்க.

(அ) இன்று வெகுசனங்களின் ஊடகமாக மாறியுள்ளது.

(ஆ) சாதாரண மக்களின் பேச்சு வழக்கும் இன்று ஒதுக்கப்படுவதில்லை.

(இ) முன்னொரு காலத்திலே ஆதிக்கம் செலுத்திய வல்லமையாக மொழியிருந்தது.

(ஈ) பேச்சு வழக்கும், இலக்கிய வழக்கும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து உதவி வருகின்றன.

(உ) எனவே, மொழி நீடித்து நிலைத்து உயிர் வாழ்கின்றது.

(1) ஈ, இ, அ, உ, ஆ (2) இ, அ, உ, ஈ, ஆ (3) இ, அ, ஆ, ஈ, உ (4) இ, அ, ஆ, உ, ஈ

## சுருக்க வினாக்கள்
### நீதிப்பாடல்கள்

01. நீதிப்பாடல்கள் என்றால் என்ன?
மனிதன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கான ஒழுக்க நெறிமுறைகளை எடுத்துக்கூறும் பாடல்களே நீதிப்பாடல்கள் ஆகும்.

02. விவேக சிந்தாமணி எனும் நூலின் ஆசிரியர் யார்?
இது பல்வேறு ஆசிரியர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும்.இதற்கு தனி ஒரு ஆசிரியர் இல்லை.

03. இது எக்காலத்தில் எழுந்த நூலாகும்?
நாயக்கர் காலம்

04. வெற்றிவேற்கை எனும் நூலின் ஆசிரியர்?
அதிவீரராம பாண்டியன்

05. வெற்றிவேற்கை எனும் நூலின் மறுபெயர்?
நறுந்தொகை

06. ஔவையார் அருளிய நூல்கள் நான்கு தருக.
ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி

07. மூதுரை வேறு எப்பெயரால் அழைக்கப்படும்?
வாக்குண்டாம்

08. மூதுரையில் அடங்கியுள்ள பாடல்களின் எண்ணிக்கை?
30 பாடல்கள்

09. திரிகடுகம் என்ற பெயரால் சுட்டப்படும் மருத்துவப் பொருட்களின் பெயர்களைத் தருக?
சுக்கு, மிளகு, திப்பிலி

10. திரிகடுகம் எனும் நூலின் ஆசிரியர்?
நல்லாதனார்

11. முதுமொழி வெண்பாவின் ஆசிரியர்?
புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷெரிபுதீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அவர் இயற்றிய ஏனைய நூல்கள்?
கனிந்த காதல், உலகியல் விளக்கம், ஈழத்து நானிலக் காட்சிகள் நபிமொழி நாற்பது

13. நாலடியார் எனும் நூலினைத் தொகுத்தவர்?
பதுமனார்

14. நாலடியாரின் மறுபெயர் யாது?
நாலடி நானூறு, வேளாண் வேதம்

15. நாலடியாரில் அடங்கியுள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?
400 பாடல்கள்

16. இனியவை நாற்பதின் ஆசிரியர்?
பூதன் சேந்தனார்

## 1. விவேக சிந்தாமணி

01. தவளையின் இயல்பு யாது?
குளிர்ச்சி பொருந்திய தாமரை மலருடன் தண்ணீரிலே ஒன்றாகப் பிறந்து அதிலே வாழ்ந்தாலும் அத்தாமரை தேனைக் குடிக்க அறியாது இருக்கும்.

02. வண்டின் இயல்பு யாது?
காட்டிலே இருந்தாலும் தாமரை மலரைத் தேடி அதிலுள்ள தேனை உண்டு பயன்பெறும்.

03. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணி யாது?
உவமை அணி

04. கல்லாதாரின் இயல்புகள் எனக் குறிப்பிடப்படுபவை?
நீண்ட நாட்கள் பழகி இருந்தாலும் அறிவிலிகள் நல்லோரின் உயர்ந்த குணங்களை அறிய மாட்டார்கள்.

05. கற்றவர்களின் இயல்புகள் எனக் குறிப்பிடப்படுபவை?
கற்றோர் நல்லோரின் குணங்களை கண்டபோதே தெரிந்து மகிழ்வுடன் உறவுகொண்டு பெறுவதற்கு அரிய பயன்களைப் பெறுவர்.

## 2. நறுந்தொகை

01. பனைமரத்தின் இயல்பாக ஆசிரியர் எடுத்துக் காட்டுவது யாது?
ஒரு பெரிய பனம் விதை ஆகாயம் வரை உயர்ந்து செழித்து மரமாக வளர்ந்திருந்தாலும் ஒருவர் இருப்பதற்குக்கூட நிழல் தராது.

02. ஆலம்பழத்தின் விதை எதற்கு ஒப்பிடப்படுகிறது?
குளத்தில் வாழும் சிறிய மீனின் முட்டைக்கு (சினை) ஒப்பிடப்படுகிறது.

03. ஆலமரத்தின் இயல்பு யாது?
கிள்ளி எடுக்கக்கூடிய அளவினை உடைய சிறுவிதையானது நாற்படைகளும் அரசர்களும் சேர்ந்திருக்க நிழலைக் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. இப்பாடலில் வெளிப்படும் விழுமியக் கருத்து யாது?
ஒருவருடைய தோற்றத்தைக் கொண்டு அவரை மதிப்பிடலாகாது.

05. நாற்படைகளும் எவை?
யானை, குதிரை, தேர், காலாள்

## 3. வாக்குண்டாம்

01. அடக்கம் உடையவர் எவ்வாறு இருப்பர்?
ஆரவாரமின்றி எப்போதும் அமைதியாக இருப்பர்.

02. அடக்கம் உடையவர் எதற்கு ஒப்பிடப்படுகிறார்?
தனக்கு பொருத்தமான மீன் வரும்வரை ஓடக்கரையில் காத்திருக்கும் கொக்கிற்கு.

03. கொக்கு வாடி இருக்க காரணம் யாது?
தனக்கு பொருத்தமான மீன் வரும்வரை வாடிக் காத்திருக்கும்.

04. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணி யாது? விளக்குக.
உவமை அணி
மடைத்தலையில் வாடி இருக்கும் கொக்கு – உவமானம்
அடக்கமுடையார் - உவமேயம்

## 4. திரிகடுகம்

01. திரிகடுகம் எனப் பெயர்வரக் காரணம் யாது?
மூன்று மருந்துப்பொருட்கள் போல ஒவ்வொரு பாடலிலும் மூன்று நீதிக் கருத்துக்களைக் கூறுதலால்.

02. இந்நூல் எக்காலத்தில் தோன்றியது?
சங்கமருவிய காலம்

03. வாழ்க்கைக்கு நன்மை தராத மூன்று விடயங்களும் எவை?
ஆசிரியர் இல்லாத ஊர், பகிர்ந்து உண்ணும் தன்மை இல்லாதவர் அயலில் இருத்தல், அனுபவம் வாய்ந்த பெரியோர் இல்லாத சபை.

04. யாருக்கு பகிர்ந்து உண்ணுதல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?
அயலவருக்குப் பகிர்ந்து உண்ணுதல் வேண்டும்.

## 5. முதுமொழி வெண்பா

01. முதுமொழி வெண்பா எனப் பெயர் வரக் காரணம் யாது?
ஒவ்வொரு பாடலும் முதுமொழி ஒன்றினைக் கொண்டு அமைவதால் இப்பெயர் பெற்றது.

02. இப்பாடலில் இடம்பெறும் முதுமொழி யாது?
மனம் கொண்டது மாளிகை

03. இப்பழமொழிக்கு நிகரான இன்னொரு பழமொழியைத் தருக.
போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பாடலில் கூறப்பட்ட மனநிறைவைத் தரும் செயல்களாக கருதப்படுபவை எவை?
உப்பில்லாத கஞ்சியினை அறுசுவை உடையதாக கருதி உண்ணுதல், கிழிந்த ஆடையாயினும் அதனை தோய்த்துபட்டாடையாக உடுத்தல், பனை ஓலைப் பாயை பஞ்சணையாக எண்ணி உறங்குதல்.

## 6. நாலடியார்

01. இந்நூல் பற்றி வழங்கும் முதுமொழி ஒன்றினைத் தருக.
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

02. எவ்வாறானவர்களின் நட்பினை விலக்கிக் கொள்ள வேண்டும்?
யானை போன்றவர்களின் நட்பினை

03. எவ்வாறானவர்களின் நட்பினை தழீஇக் கொள்ள வேண்டும்?
நாய் போன்றவர்களின் நட்பினை

04. இந்நூல் எழுந்த காலம் யாது?
சங்கமருவிய காலம்

05. நாலடியாருக்கு முதன் முதலில் உரை எழுதியவர் யார்?
பதுமனார்

06. இதன் வேறு பெயர்கள் யாவை?
நாலடி, நாலடி நானூறு, வேளாண் வேதம்

## 7. இனியவை நாற்பது

01. இந்நூலின் ஆசிரியர் யார்?
பூதன் சேந்தனார்

02. இப்பாடலில் இடம்பெறும் இனிய செயல்கள் யாவை?
கற்றறிந்த அறிஞர்களின் முன்பாக கற்றதைச் சொல்லுதல், அறிவில் மேலானவரை சேர்தல், பிறரிடம் இரக்காது தன்னிடம் இருப்பதைக் கொடுத்தல்.

03. 'எட்டுணையானும் இரவாது தான் ஈதல்' எனும் பாடலடியின் கருத்து யாது?
எள்ளளவேனும் ஒரு பொருளை பிறரிடம் இரக்காமல் தன்னிடம் உள்ளதை ஒருவருக்கு கொடுத்தல் வேண்டும்.

### அருஞ்சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தண்டாமரை | - | குளிர்ச்சியான தாமரை | அணி | - | வரிசை |
| மண்டூகம் | - | தவளை | மடைத்தலை | - | நீரோடை |
| கமலம் | - | தாமரை | உறுமீன் | - | பொருத்தமான மீன் |
| மது | - | தேன் | கணக்காயர் | - | ஆசிரியர் |
| புல்லர் | - | அறிவிலார் | மூத்தோர் | - | அனுபவம்முதிர்ந்த பெரியோர் |
| தெண்ணீர் | - | தெளிந்த நீர் | பாத்துண்ணும் | - | பகிர்ந்து உண்ணும் |
| கயம் | - | குளம் | ஈதல் | - | கொடுத்தல் |
| சினை | - | முட்டை | உரைத்தல் | - | சொல்லுதல் |
| நுண்ணியது | - | மிகச் சிறியது | இரவாது | - | பிறரிடம் யாசிக்காது |
| அண்ணல் | - | ஆண் | கெழீஇ | - | தழுவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேண்மை - நட்பு
மிக்கார் - அறிவில் சிறந்தோர்
வால்குழைக்கும் - வாலை ஆட்டும்
எட்டுணை - எள், துணை (எள்ளளவாவது)

## அருஞ்சொற்கள்

### எதிர்ச் சொல்

தண்மை - வெம்மை
புல்லர் - நல்லர்
கற்றோர் - கல்லாதார்
நுண்மை - பருமை
பெரியோர் - சிறியோர்
அறிவுடையோர் - அறிவிலார்
பிணக்கு - இணக்கு
மூத்தோர் - இளையோர்
கேண்மை - பகைமை
மாளிகை - குடிசை

## நாவலர் எழுந்தார் (அலகு- 2)

01. நாவலர் எழுந்தார் எனும் கட்டுரை யாரால் எழுதப்பட்டது?
பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

02. இக்கட்டுரை எந்நூலிலிருந்து எடுக்கப்பட்டது?
இலக்கிய வழி

03. கூட்டம் எங்கே எதற்காக நடைபெற்றது?
வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில்
இலங்கைச் சட்டசபைக்கு பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்காக.

04. கூட்டம் நடைபெற்ற ஆண்டு எது?
1878

05. கூட்டத்திற்கு தலைமை வகிக்க வேண்டியவர் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

06. கூட்டத்திற்கு அன்றைய தினம் தலைமை வகித்தவர் யார்?
வை. விஸ்வநாதபிள்ளை

07. இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் யாவர்?
- யாழ்ப்பாணத்து சட்டநிபுணர்கள்
- கொழும்பிலிருந்து வந்திருக்கும் வழக்கறிஞர்கள்
- உபாத்தியாயர்கள்
- கல்விமான்கள்
- பிரபுக்கள்
- பிராமண சைவக் குருமார்கள்.

08. சட்ட நிருபண சபைக்கு போட்டியிட்டவர்கள் யாவர்?
பிறிற்றோவும் சேர் பொன் இராமநாதனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. நாவலர் கூட்டத்திற்கு தலைமை வகிக்காமைக்கான காரணம் யாது?
அவருக்கு ஏற்பட்ட தொய்வு வருத்தம் காரணம்

10. சென்னைப் பல்கலைக்கழகத்தால் முதன் முதலில் நடத்தப்பட்ட பி.ஏ. பரீட்சையில் சித்தி அடைந்த இலங்கையைச் சேர்ந்தவர்கள் யாவர்?
வை.விசுவநாதபிள்ளை, சி.வை.தாமோதரப்பிள்ளை

11. பிறிற்றோ பற்றி நீர் அறிந்தவை யாவை?
- பிரசித்தி பெற்ற வழக்கறிஞர்.
- அக்கால சட்ட நிபுணர்களுள் தலை சிறந்தவர்.
- பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் தலைமை தாங்கியவர்.
- இலங்கையிலுள்ள அனைவரும் அறிந்த ஒருவர்.
- கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பேர் பெற்றவர்.

12. சேர்.பொன் இராமநாதன் பற்றி நீர் அறிந்த விடயங்களைத் தருக.
- சிரித்த முகம், தங்க சொரூபம், சென்னைப் பட்டணத்தில் படித்தவர்

13. நாவலர் எழுந்த விதமும் நடந்த விதமும் யாரோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது?
இராமனோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றது.

14. "பொழிந்த நெய் ஆகுதி வாய்வழி" என்ற பாடல் இடம்பெற்ற மூல இலக்கியம் எது?
கம்பராமாயணம்

15. வை.விசுவநாதப்பிள்ளையின் சிறப்புக்கள்,
மகாவிவேகி, கணித மேதை, வாதஞ் செய்வதில் வல்லவர்

16. அங்கு நடைபெற்ற கூட்டத்தை எவ்வாறு அழைத்தனர்?
வாத மகாசபை

17. ஆறுமுகநாவலர் சபையோர் பிரமித்துப் போகக் கூறிய வார்த்தை எது?
"அது கிடக்க எடுத்துக் கொண்டு வா, தந்தி தபாற் கட்டுகளை."

18. நாவலர் வீறு கொண்ட எழுந்த விதம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
கம்பீரமான தோற்றமும் வீறுகொண்ட பார்வையும் எண்ணங்களில் வேகமும் ஒரு சேர எழுந்து வந்த நாவலரது தோற்றம் **'பொழிந்த நெய் ஆகுதி வாய்வழி பொங்கி எழுந்த கொழுங் கனலென்ன எழுந்தார்'**என்கிறார். அதாவது யாக குண்டத்தில் நெய்யைச் சொரிகின்ற போது அக்கினி மேலும் சுவாலை விட்டு எரிவது போன்று எழுந்தார் எனக் குறிப்பிடுகின்றார்.

19. நாவலர் சபையை நோக்கி நடந்த விதம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
மாக மடங்கலும் மால் விடையும்
பொன்னாகமும் நாகமும் நாண நடந்தார்.
பெருமை மிக்க ஆண் சிங்கமும், பெரிய காளையும், பொன்மலையாகிய மகாமேரு மலையும், மதங்கொண்ட களிற்று யானையும் வெட்கமடையும் விதமாக நடந்து சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதியார் சுயசரிதை (அலகு – 03)

01. பாரதியார் வாழ்க்கைக் காலம் யாது?
1882 – 1921வரை

02. தமிழில் முதன் முதல் தமது சுயசரிதையை கவிதையில் எழுதியவர் யார்?
பாரதியார்

03. பாரதியார் யாருக்காக காத்திருந்ததாக கூறப்படுகிறது?
சிறுமிக்காக காத்திருந்தார்.

04. பாரதியாரின் சிறப்பான நூல்கள் சில தருக.
பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு

05. **"ஆழ நெஞ்சகத்தாசை இன்றுள்ளதேல் அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்"** இவ் வடிகளின் பொருளினைத் தருக.
ஒருவனது அடிமனதில் விருப்பம் இருக்குமானால் அதன் பயனானது நாளை விளைந்து விடும்.

06. விலங்குக் குணம் என பாரதியார் கருதுவது எது?
நிலையற்ற மாய உலகிலுள்ள அனைத்துப் பொருட்களையும் நிலையானது என நம்பி அவற்றை அடைய முயற்சி செய்தல்.

07. தாம் விரும்பியதை அடைய முடியாதவர்களின் இயல்புகள்?
- தமது தலைவிதியை நொந்து கொள்வர்.
- நண்பர்களை இழித்துரைப்பர்.
- கோபத்தால் பகைவர்களை திட்டுவர்.
- சூழ்ச்சிகள் செய்வர்.
- பொய்யான சாத்திரங்களைப் பேசுவர்.
- சாதகங்கள் பார்ப்பர்.
- இழிந்த கடவுள் இல்லையெனும் நாஸ்திகக் கொள்கையைப் பேசுவர்.
- பூரணமான விரும்பமே விரும்பியதைத் தரும் என அறியமாட்டார்.
- கண்ணிருந்தும் கண்கள் இல்லாத குருடர் போலத் திகைப்பர்.

08. காதல் வசப்பட்ட பாரதியின் உள்ளம் எவ்வாறு காணப்பட்டது?
- சிறுமிக்காக காத்திருந்து அவள் செல்லுமிடமெல்லாம் சென்று அவளது பின்னழகினை ரசித்தல்.
- தேர்ச்சில்லினுள் அகப்பட்ட மேழை என்ற கொம்பற்ற சிறு விலங்கு அந்த தேர் செல்லும் பாதை எல்லாம் இழுத்துச் செல்வது போல. அவளைப் பற்றிய எண்ணங்களோடு இருத்தல்.
- ஒளி பொருந்திய அவளது முகம் என்னைப் பார்த்து விட்டால் ஐம்புலன்களும் அழியப் பெற்று புதுவாழ்வு பெற்று விடுவேன் என எண்ணுதல்.

09. ஒருவர் விரும்பும் நலன்களை எவ்வாறு அடையலாம் எனக் கூறுகின்றார்?
- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலன்களோடு மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அந்தக் கரணங்களும் உயிரும் ஒன்று சேர்ந்து ஒரு மனிதன் எதை விரும்புகின்றானோ அதை அவன் அடைந்து கொள்ள முடியும். இதனையே சிறந்து விளங்கும் நூலைக் கற்றறிந்த ஞானியரும் கூறி இருக்கின்றனர். நானும் அதனை விளங்கிக் கொண்டேன் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. விரும்பும் நலன்களை அடையாமற் போவதற்கான காரணம் யாது?
 - பொய்யான இந்த உலகத்திலே நாம் காணுகின்ற காட்சிகள் யாவும் எமது மனக்காட்சியாகும். எமது ஆழ்மனதிலே ஆசை ஒன்று இருந்தால் தான், அதனை நாம் அடையலாமே தவிர இல்லாவிட்டால் விரும்பும் நலன் பெறமுடியாது.

11. தாம் விரும்பியதை அடைய முடியாதவர் யார்?
 - தாழ்ந்த உள்ளத்தினை உடையவர்கள்.
 - சோர்வாக இருப்பவர்கள்.
 - ஆட்டினைப் போல் அங்குமிங்கும் சென்று பல விடயங்களையும் விரும்புபவர்.
 - தமக்கு நேரும் இடையூற்றைக் கண்டு அஞ்சுபவர்.

## அருஞ்சொற்கள்

நித்திலம் - முத்து
புன்னகை - சிரிப்பு
மதன் - மாரவேள், மன்மதன், சிலைவேள் (காதற் கடவுள்)
சுடர் - ஒளி
புலையுயிர் - உயிர்க்கொலை
ஜோதி - ஒளி
புலன் - அறிவு, ஐம்புலன்
விண்ணுறல் - உயர்ந்து செல்லுதல்
ஆவி - உயிர்
கரணம் - அந்தக் கரணம் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்)
இலங்குதல் - விளங்குதல்
நண்ணுதல் - அடைதல்
திண்ணம் - உறுதி
மாயம் - பொய்
இடையூறு - துன்பம்
ஓர்ந்திடார் - ஆராயமாட்டார்
வெகுளி - கோபம்
நாத்திகம் - கடவுள் இல்லை எனும் கொள்கை
நிந்திப்பர் - இகழ்வர்
மதி - அறிவு

## தனிப்பாடல்கள் (அலகு - 04)

1. பங்கப் பழனத்துழுமுழவர்

01. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள சோழநாட்டின் சிறப்பு,
 - சேறு நிறைந்த வயல், பலாமரம் காய்த்துக் குலுங்குகிறது. வயல்களில் சங்குகள் விளைந்துள்ளன. இளநீர் நிறைந்த தென்னைகள், குரங்குகள் நிறைந்துள்ளன.
 - நிலவளம், நீர்வளம், பயிர்வளம், விலங்கு வளம், உழவர் வளம் என்பன கூறப்படுகிறது.

02. இப்பாடலில் சோழ மன்னனின் புகழ் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?
 - கொங்கு நாட்டவர்களோடு யுத்தம் புரிந்து அவர்கள் அனைவரையும் வீர சுவர்க்கம் அனுப்புதல்.
 - மன்னர்களுக்கெல்லாம் மன்னன்.

03. இப்பாடலில் இடம்பெறும் மூன்று பிறைகளும் எவை?
 - வெங்கட் பிறை - மெலிந்த அப்பிறை - கரும்பிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. விழிவேல் இத்தொடரில் கையாளப்பட்டுள்ள அணி யாது?
- உருவக அணி

05. வெங்கட்பிறை, கரும்பிறை, அம்பிறை விளக்குக.
- வெம் கண் பிறை - வெம்மையான பிறைச்சந்திரன்
- கரும்பு இறை - கரும்பை வில்லாக உடைய மன்மதன்
- அப்பு இறை - நீர் சிந்துகின்ற கண்கள்

06. இப்பாடலின் ஆசிரியர் பெயர் யாது?
புகழேந்திப் புலவர்.

## 2. ஓர் தட்டிலே பொன்னும்

01. இப்பாடலின் ஆசிரியர் யார்?
படிக்காசுப் புலவர்

02. இவரை வேறு எப்பெயரால் அழைப்பர்?
படிக்காசுத் தம்பிரான்

03. அவர் யாரது கொடைச் சிறப்பினை புகழ்ந்து பாடியுள்ளார்?
சீதக்காதி வள்ளலின்

04. கொடிய பஞ்சகாலம் என்பது எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?
ஓர் தட்டில் பொன்னுக்கு சமமாக நெல்லை விற்கக் கூடிய வறட்சியான பஞ்ச காலம்.

05. சீதக்காதி வள்ளலின் கொடைச்சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?
சுயநலம் படைத்த யார் தடுத்தாலும் பொருள் கேட்டு வருபவர்களுக்கு நான் இருக்கிறேன் என்று மார்தட்டிப் பேசியவர்

06. **'தங்கள் காரியப் பேர் ஆர்தட்டினும்'** என்ற தொடரின் பொருள் யாது?
தங்கள் சுயநலம் படைத்தவர்கள் யார் தடுத்தாலும்

07. வரோதயன் எனும் சொல்லை பிரித்து எழுதினால் வருவது?
வரம், உதயன்

## 3. கழியும் பிழைபொருள்

01. ஆசிரியர் யார்?
காளமேகப்புலவர்

02. இவரது இயற்பெயர் யாது?
சு.வரதன்

03. காளமேகப் புலவரின் கவிதைத் திறம் யாது?
அதாவது இனிமையான கவிதைகளை மழைபோல பொழிவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. நன்னூலாம் கடல் எவ்வகை அணி விளக்குக.
உருவகம்
நூலாகிய கடல்

05. காளமேகப் புலவர் தனது வரவினை எவ்வாறு போற்றிப் புகழ்கின்றார்?
அறிவிற் சிறந்த புலவர்களுடைய மனமாகிய மேகத்திலே அச்சம் உண்டாகும்படி முழங்கி மின்னல் போல மின்னி கவிமழை பொழிவார்.

## 4. ஆடிக் குடத்தடையும்

01. இப்பாடலின் ஆசிரியர் பெயர் யாது?
காளமேகப்புலவர்

02. இப்பாடலில் கையாளப்பட்ட அணி யாது?
சிலேடை

03. பாம்பினையும் எள்ளையும் எவ்வாறு தொடர்புபடுத்திக் காட்டுகின்றார்?

- பாம்பு படமெடுத்து ஆடிய பின் அருகிலுள்ள குடத்திற்கு சென்று அடைந்து விடும். எள் செக்கிலே ஆட்டி குடத்திலே எடுத்து வைக்கப்படும்.

- பாம்பு படமெடுத்து ஆடும்போது இரையும், எள் செக்கிலே இட்டு ஆட்டப்படும் போது ஒருவித ஒலி கேட்கும்.

- குடத்தின் மூடியைத் திறந்தால் நல்லெண்ணெயில் எமது முகம் தெரியும். குடத்தின் மூடியைத் திறந்தால் பாம்பின் முகம் தெரியும்.

- பாம்பு தீண்டினால் விடம் உடலில் ஓடிந் தலைக்கேறி தலை பரபர எனும் உணர்வையடையும். அதேபோல நல்லெண்ணெய் தலையில் தடவ தலை குளிர்ச்சியான ஒருவித நிலையையடையும்.

## கம்பியூட்டர் (சிறுகதை) (அலகு – 5)

01. இச்சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ.முத்துலிங்கம்

02. இக்கதை எந்த சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது?
வடக்கு வீதி

03. கணிப்பொறியின் சிறப்பியல்புகள் என கட்டுரையாசிரியர் கூறுபவை யாவை?
- கணிப்பொறி ஒரு இராட்சச வேலைக்காரன்.
- சொல்லும் வேலைகளை எல்லாம் கச்சிதமாக செய்யும்.
- தவறான கட்டளை பிறப்பித்து விட்டாலோ தானே எஜமானன் ஆகிவிடும்.
- பயந்து பயந்து நாம் அணுகினால் அது எட்டப்போய்விடும்.
- அதனுடன் ஒட்டிப் பழகினால் இரகசியக் கதவுகளை திறந்துவிடும்.
- படம் கீறுவதற்கும் கேம்ஸ் விளையாடுவதற்கும் உதவும்.
- சீட்டுக் கணக்குகளை நுணுக்கமாக பதிந்து வைக்கலாம்.
- காகிதம் மிச்சப்படும்.

04. தமயந்தியின் இரண்டாவது சுயம்வரத்துக்கு சென்ற மன்னன் யார்?
இருதுபன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/Vipulananda College SCHOOL LIB. RESOURCE TRINCO

05. ஒரே பார்வையில் எண்ணும் கலை யாது?
அட்ச இருதயக்கலை

06. இக்கதையில் வரும் புகழ் பெற்ற இலக்கியம் எது?
நளவெண்பா

07. எமிரோவோரி, எந்துண்டிவஸ்தி என்பன எம்மொழிச் சொற்றொடர்களாகும்?
தெலுங்குமொழி

08. **"இந்தக் கூட்டலைத் தப்புத்தப்பாய் போட்டிருக்கும். இதை ஒருக்காப் பார்"** இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
மனைவி மேகலாவால் - மகனுக்குக் கூறப்பட்டது.

## திருக்குற்றாலக் குறவஞ்சி (அலகு – 6)

01. திருக்குற்றாலக் குறவஞ்சி யாரால் இயற்றப்பட்டது?
திரிகூட ராசப்பக் கவிராயர்

02. குறவஞ்சி என்பதன் பொருள் யாது?
குறம், வஞ்சி குறவர் குலப் பெண்

03. குறவஞ்சி எனும் நூலின் பாடுபொருள் என்ன?
திருக்குற்றாலம் எனும் நகரில் அமைந்துள்ள சிவபெருமானாகிய திரிகூட நாதரை பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடப்படுவது.

04. குறவஞ்சி இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவி யார்?
வசந்த வல்லி

05. குற்றால நாட்டின் வளம் பற்றி யாரால் யாருக்கு எடுத்துரைக்கப்படுகிறது?
குறத்திப் பெண் ஒருவரால் வசந்தவல்லிக்கு எடுத்துக் கூறப்படுகிறது.

06. ஏழு பருவ மங்கையர்களும் யாவர்?
பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்

07. குற்றால ஈஸ்வரர்/குற்றாலீஸ்வரரின் சிறப்புக்கள் யாவை?
- கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்
(வளைந்த பிறைச்சந்திரனை சடாமுடியில் அணிந்திருப்பவர்)
- வழங்கு கொடை மகராசர்
(அடியவர்களுக்கு அருளை அள்ளி வழங்குபவர்)
- குறும் பலவினீசர்
குறுகிய பலாமரத்தின் கீழ் கோயில் கொண்டிருப்பவர்.
- நாத தத்துவத்தின் மெய்ப்பொருளாக அரி, அயன், அரன் என மூன்றுருவாக விளங்குபவர்.

08. குற்றாலக் குறவஞ்சி எக்காலத்திற்குரிய நூல்?
18ம் நூற்றாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. 'முழங்கு திரைப் புனலருவி கழங்கென முத்தாடும்' என்ற பாடலடியில் குறிப்பிடப்படும் விளையாட்டு எது?
கழங்கு ஆடுதல். (பெண்களால் விளையாடப்படும் விளையாட்டு)

10. திருக்குற்றால மலையின் சிறப்புக்கள் யாவை?
- ஆண் குரங்குகள் பல வகையான பழங்களையும் பறித்துக் கொண்டு பெண் குரங்குகளுக்கு (மந்தி) கொடுத்து கொஞ்சிக் கொண்டிருக்கும்.
- வான் வழியாக செல்லும் சித்தர்கள் காயசித்தி மூலிகைகளை வளர்க்கும் இடம்.
- உயரமான மலையிலிருந்து அருவிகள் விழுகின்ற நீர்வளம்.
- இளம் பிறைச் சந்திரனை தனது சடாமுடியில் அணிந்த சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் மலை.
- அருவிகள் முத்துகளை முற்றத்தில் தள்ளிவிடும்.

11. குற்றாலக் குறவஞ்சி கூறும் நாட்டுச் சிறப்புக்கள் எவை?
- எருமை மாடுகள் கூட்டம் கூட்டமாக வந்து இறங்கும் நீர்த்துறை.
- கூழைப்பலா, வாழை, தாழை, போன்ற மரங்கள் நிறைந்து காணப்படல்.
- மாதம் மும்மாரி பொழிதல் (வருடம் முழுவதும் மூன்று போக விளைச்சல் தரும் நாடு).
- குறுகிய பலா மரங்களை உடையது.
- நித்திய, நைமித்திய, காமியம் எனும் மூன்று வகை நிகழ்வுகள் நடைபெறல்.
- பிறப்பு, வாழ்வு, இறப்பு எனும் மூன்று நிலைகளிலும் உயிர்களுக்கு நன்மை விளைவித்தல்.
- விண், மண், பாதாளம் என்ற மூவுலகத்தவரும் வந்து வழிபடல்.
- நாதம் மூன்றும் உருவான குற்றாலீஸ்வரர் கோயில் கொண்டிருத்தல்.
- இவ்வூருக்கு வருபவர்களின் பாவங்கள் நீங்குதல்
- கரும்பு, நெல் என்பன நிறைய விளைதல்.
- மாம்பழங்கள் கொத்துக் கொத்தாக காணப்படல்.
- தயிர், பால் போன்றன நிறைந்திருந்தல்.
- முல்லை மலர்கள் நிறைந்திருத்தல்.
- மங்கல பேரிகைகளின் முரசு ஒலி எந்நேரமும் கேட்டுக் கொண்டிருத்தல்.

## நாட்டார் பாடல் (அலகு – 07)

01. நாட்டார் பாடல்கள் என்றால் என்ன?
படிப்பறிவற்ற பாமர மக்களால் பாடப்பட்டு பரம்பரை பரம்பரையாக செவி வழியாக பேணப்பட்டு வந்த பாடல்கள் நாட்டார் பாடல்களாகும்.

02. நாட்டார் பாடலை வேறு எப்பெயர்களால் அழைப்பர்?

| | | |
|---|---|---|
| நாட்டுப்புறப் பாடல் | பாமரஜன கானம் | நாடோடிப் பாடல் |
| எழுதாக் கவிகள் | மரபு வழிப்பாடல் | வாய்மொழி இலக்கியம் |

03. நாட்டார் பாடல்கள் எவற்றை மையமாக கொண்டு அமைந்தவை?
கிராமப் புற மக்களின் வாழ்வியல் அம்சங்கள், பண்பாடுகள் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், தொழில்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைவன.

04. நாட்டார் பாடல்களின் சிறப்புக்கள் யாவை?
- இலக்கண வரம்புக்கு உட்படாதவை.
- எளிமையான சொல்லாட்சி.
- சூழ்நிலைக்கு ஏற்ப பாடப்படுபவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எல்லோராலும் விரும்பிப் பாடப்படுவது.
- மக்களது பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ்வுகளை சித்தரிப்பவை.

05. ஏர்ப்பாடல் எப்போது பாடப்படும்?
உழவர்கள் ஏர் எடுத்து மாடுகள் பூட்டி உழுவதற்கு முன்பு கடவுளை வேண்டி பாடப்படுவது.

06. உழவர்கள் இறைவனிடம் வேண்டுவன யாவை?
- மாடுகளின் எண்ணிக்கை பெருக வேண்டும்.
- பசுப்பாலும் அரிசியும் அதிகமாக கிடைப்பதால் பாற்பொங்கல் நிறைந்து காணப்பட வேண்டும்.
- உழவுத் தொழில் மூலம் செல்வம் பெருக வேண்டும்.
- காலந் தவறாது மழை பொழிய வேண்டும்.
- பூமியிலுள்ளோர் எதுவித குறைவின்றி சந்தோஷமாக வாழ வேண்டும்.

07. அரிவி வெட்டுப் பாடல் எப்போது பாடப்படும்?
வயல்களில் நெல் முற்றி விளைந்து வெட்டியெடுக்கும்போது பாடப்படும் பாடலாகும்.

08. அரிவாள் எதனால் செய்யப்பட்டுள்ளது?
மட்டு உருக்கு எனும் ஒருவகை இரும்பினால் செய்யப்பட்டுள்ளது. மாவிலங்கு எனும் மரத்தால் பிடி போடப்பட்டு வெள்ளித் தகட்டினால் பூண் போடப்பட்டுள்ளது.

09. காதற் பாடலில் காதலன் காதலியை சிறப்பிக்குமாற்றை விளக்குக.

| | | |
|---|---|---|
| நீலவண்டு | ஏலங்கிராம்பு | சிங்காரப் பூ நிலவு |
| மருதங்கிளி | சீனத்துச் செப்பு | |

10. காதலிக்கு காதலன் நம்பிக்கையூட்டும் பாங்கினை விளக்குக.
- காதல் நிறைவேறாவிட்டால் தான் இறந்து விடுவேன் எனக் கூறல்.
- கனவிலும் காதலியை கண்டதாக கூறுதல்.
- ஏழைக்குத் தீங்கு செய்தால் அதை அல்லா பொறுக்கமாட்டான் ஆதலால் உன்னை நான் கைவிடமாட்டேன் எனக் கூறுதல்.

11. இளைஞர்கள் அரிவி வெட்டும் முறை எவ்வாறு சிறப்பாக நயம்பட கூறப்பட்டுள்ளது?
ஆற்றுநீர் காற்றினால் தள்ளப்பட்டு அலைகளாக வருவதைப் போலவும், அதனைத் தொடர்ந்து வரும் பறவைகளைப் போலவும், சேறு நிறைந்த இடங்களில் ஆற்றுநீர் சென்றாலும் அது ஓடிவரும்போது தெளிந்த நீராக வருவதைப் போலவும், சிவந்த கால்களையுடைய நாரையினம் ஒன்றாகக்கூடி இரை தேடுவதைப் போலவும், துடிப்பான இளைஞர்கள் ஒருவர்பின் ஒருவராக வரிசை தவறாமல் அரிவி வெட்டும் அழகு கூறப்படுகின்றது. மேலும் மட்டுருக்கினால் (ஒருவகை இரும்பு உருக்கு) அரிவாள் செய்து மாவிலங்கு (வில்வம்) மரத்தினால் பிடிபோட்டு இறுக்கி வெள்ளித் தகட்டினால் அரிவாளின் கைப்பிடியை பொருத்தி, வளர்ந்து முதிர்ந்த நெற்கதிர்களை அறுவடை செய்கின்றனர்.

## கம்பராமாயணம் குகப்படலம் (அலகு – 08)

01. கம்பராமாயணம் யாரால் இயற்றப்பட்டது?
கம்பரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. கம்ப ராமாயணத்தில் உள்ள காண்டங்கள் யாவை?

| | |
|---|---|
| பால காண்டம் | கிட்கிந்தா காண்டம் |
| அயோத்தியா காண்டம் | சுந்தர காண்டம |
| ஆரண்ய காண்டம் | யுத்த காண்டம் |

03. எத்தனை படலங்களைக் கொண்டுள்ளது?

நூற்று பதினெட்டு (118)

04. குகப்படலம் அமைந்துள்ள காண்டம் எது?

அயோத்தியா காண்டம்

05. குகனது சிறப்புக்கள் யாவை?

- இராமன் மீது கொண்ட அன்பைப் போல பரதனிடமும் அன்பு கொண்டவன்.
- பெரியோர்களை தானே கேட்டறிந்து கொள்பவன் (கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகியோரை யாரென அறிதல்).
- கோசலையை வீழ்ந்து வணங்குவதன் மூலம் பெரியோரைக் கனம் பண்ணுதல்.
- வீரம் மிக்கவன் (குன்றனைய தோள், ஆண்யானையை ஒத்தவன்).
- பெண்களைத் தாயாக மதிப்பவன்.
- தக்க சமயத்தில் உதவி செய்பவன்.
- கங்கையை கடக்க உதவுதல்.
- பிழை பொறுக்கும் பண்புடையவன் (கைகேயியின் பிழையை பொறுத்து தாயென எண்ணினான்).

06. பரதனின் குணப்பண்புகள் யாவை?

- மண்ணாசையை வெற்றி கொண்டவன்.
- அரச நீதி தவறாதவன்.
- இராமன் மீது மிகுந்த பற்றுக் கொண்டவன்.
- எல்லா அரசர்களிலும் சிறந்து விளங்கியவன்.
- வீரக்கழலை காலில் அணிந்திருப்பவன்.
- சகோதர பாசம் உடையவன்.
- தாயின் குற்றம் கண்டு பிழையை சுட்டிக் காட்டுபவன்.
- ஒருவரின் பண்பறிந்து நடப்பவன் (குகனை அண்ணனாக எண்ணுதல்).

07. கைகேயியின் குணப்பண்புகள் யாவை?

- துன்பத்தை உண்டாக்குபவள்.
- உலகத்தின் பழி என்னும் குழந்தைக்கு தாய் போன்றவள்.
- துன்பம் இல்லா முகமுடையவள்.
- தன் கணவன் இறக்க காரணமானவள்.
- கொடுமையான மனத்தினால் முழு உலகையும் அபகரித்தவள்.
- தீவினை உடைய வயிற்றை உடையவள்.
- மகனை துன்பத்தில் ஆழ்த்தியவள்.
- இராமனை காட்டுக்கு அனுப்பியவள்.

08. கோசலையின் குணப்பண்புகள் யாவை?

- உறவினர்கள், தேவர்கள் வணங்கக் கூடிய இயல்புடையவள்.
- நாராயணனின் அவதாரமான இராமனை மகனாகப் பெற்றவள்.
- தசரதனின் முதல் மனைவியாக சிறப்பு பெற்றவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குகனையும் தனது மகனாகக் கருதியவள்.
- மகனின் பிரிவால் வருந்தி நிற்பவள்.

09. இராமனது குணவியல்புகள் யாவை?
- திருமாலின் அவதாரமாக விளங்கியவன்.
- எல்லோரும் வணங்கக் கூடியவன் (யாவர்க்கும் தொழகுலமாம்).
- கருணைக் கடலாக விளங்குபவன்.
- தந்தையின் சொல் கேட்டு வனம் சென்றவன்.

10. இப்படலத்தில் கூறப்படும் தசரதனின் மூன்று மனைவியரும் யாவர்?
- கோசலை, கைகேயி, சுமித்திரை

11. 'பழிவளர்க்கும் செவிலியை' இத்தொடரில் "செவிலி" என குறிப்பிடப்படுபவர் யார்?
கைகேயி

12. 'கன்று பிரிகாராவின் துயருடைய கொடி' இதில் கையாளப்பட்டுள்ள அணி யாது? விளக்குக.
உவமை அணி
கன்றைப் பிரிந்த காரம்பசு போல கோசலை விளங்கினாள்

13. தோணி எவ்வாறு கரையை அடைந்தது?
பெண் அன்னம் சிறகுகளின்றி கரை சேர்ந்ததைப் போல படகும் கரை சேர்ந்தது.

14. 'பரதன் கள்ள ஆசையை அழித்து மேலேறினான்' எனக் கூறக் காரணம் யாது?
தசரதன் பரதனுக்கு நாடாளும் உரிமையை கொடுத்துவிட்டு மாண்டு போனான். இராமன் காட்டுக்குப் போனான். இந்நிலையில் பரதன் அயோத்தி முழுவதையும் ஆண்டிருக்க முடியும். ஆனால் பரதனோ அரசும் மன்னர் பதவியும் தனக்கு உரியது அல்ல எனக்கருதி, தனது கோலத்தை விடுத்து மரவுரி தரித்து இராமனைத் தேடி காட்டுக்கு வருகின்றான். இதன் மூலம் அவன் ஏனைய அரசர்களுக்கு இருக்கக் கூடிய மண்ணாசையை துறந்தவன். ஆதலால் கள்ள ஆசையை அழித்து மேலேறினான் எனக் கூறுகின்றான்.

## சந்தர்ப்ப வினாக்கள்

01. "கொற்றத்தார் குரிசில் இவர் ஆர்"
யாரால் - குகனால் யாருக்கு – பரதனுக்கு

02. "மூன்றுலகும் ஈன்றானை முன் ஈன்றானை பெற்றதால் பெருஞ், செல்வம் யான் பிறத்தலால் துறந்த பெரியாள்"
பரதனால் குகனுக்கு

03. "இவன் யார்"
கோசலையால் பரதனுக்கு

04. "இன்துணைவன் இராகவற்கு, இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்"
பரதனால் கோசலைக்கு

05. "நைவீர் அலீர் மைந்தீர் இனித் துயரால்"
கோசலையால் பரதன், சத்ருக்கன் ஆகியோருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. "ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்தீர்"
கோசலையால் பரதன், சத்ருக்கன், குகன் முதலானோருக்கு

07. "ஐய அன்பின் நிறைந்தாளை உரை"
குகனால் பரதனுக்கு

08. "யாரிவரென்று உரை?"
குகனால் பரதனுக்கு

09. "இடரிலா முகத்தானை அறிந்திலையேல் இந்நின்றாள் எனை ஈன்றாள்"
பரதனால் குகனுக்கு

## எது நல்ல சினிமா? (அலகு – 9)

01. இக்கட்டுரையின் ஆசிரியர் யார்?
சு.தியடோர் பாஸ்கரன்

02. தமிழ் நாட்டில் சினிமா வளராததற்கு முக்கிய காரணம் யாது?
நாடகத்துக்கு அடிமைப்பட்டு இருந்தமை.

03. நாடகம் என்றால் என்ன?
நிகழ்ச்சி ஒன்றை அவையோர் முன் நிகழ்த்திக் காட்டுவது.

04. சினிமா மொழி என்றால் என்ன?
சினிமாவின் சிறப்பு அம்சம், அதற்குத் தனித்துவத்தை அளிக்கும் அம்சம் சினிமா மொழி எனலாம்.

05. சினிமா மொழியில் உள்ளடங்கும் மூன்று அம்சங்களும் எவை?
காட்சிப் படிமங்கள், ஒலி, படத்தொகுப்பு

06. நல்ல சினிமா எப்போது பிறக்கிறது?
சினிமா மொழியை, அதன் தன்மையை தனித்துவத்தை உணர்ந்து ஒரு படைப்பாளி அதை அழுத்தமாக கையாளும் போது அங்கே நல்ல சினிமா பிறக்கிறது.

07. சினிமா எப்போது நலிவடைகிறது?
சினிமா மொழியிலிருந்து மாறுபட்டு வாய்ப்பேச்சினால் கதைசொல்ல முற்படும்போது அங்கேசினிமா நலிவடைகிறது.

08. சினிமா மொழியை வளப்படுத்தியவர்கள் யாவர்?
ஹிட்சாக், உடிஆலன், அடூர் கோபாலகிருஸ்ணன், அரவிந்தன், மணிகௌல்

09. தமிழில் பேசும் படம் வெளிவந்த ஆண்டு எது?
1931

## திருக்குறள் (பேதைமை) (அலகு – 10)

01. இந்நூல் எழுந்த காலம்?
சங்கமருவிய காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. திருக்குறளின் ஆசிரியர் யார்?
திருவள்ளுவர்

03. திருக்குறளின் மறுபெயர்கள் யாவை?
உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, முப்பாநூல்

04. திருக்குறள் எப்பாவினால் பாடப்பட்டது?
வெண்பா (ஈரடி)

05. திருக்குறள் எத்தனை சீர்களைக் கொண்டது?
ஏழு

06. எத்தனை அதிகாரங்களைக் கொண்டுள்ளது?
133

07. எத்தனை குறட்பாக்களை கொண்டுள்ளது?
1330 குறட்பாக்கள்

08. பேதைமை எத்தனையாவது அதிகாரமாய் அமைந்துள்ளது?
84வது அதிகாரம்

09. பேதைமை என்றால் என்ன?
பேதைமை என்பது அறியாமை. தனக்கு கேடு விளைவிப்பனவற்றை கைக்கொண்டு ஆக்கம் தருவனவற்றை கைவிடுதல் ஆகும்.

10. பேதைமையாளரின் தொழில்கள் யாவை?
- வெட்கப்பட வேண்டியவற்றுக்கு வெட்கப்படாமை.
- நாட வேண்டியவற்றை நாடாமை.
- யாரிடம் அன்பு செய்யாமை.
- பேண வேண்டியவற்றை பேணாமை.
- நூல்களை ஓதாமை அவற்றின் பயனை உணராமை.
- பிறருக்கு அவற்றை சொல்லாமை.
- அவைக்கு (சபை) அடங்கி நடக்காமை.

11. பேதையரது செல்வம் யாருக்கு பயன்படாது? யார் அனுபவிப்பார்?
- அச்செல்வத்தின் பயன் உறவினருக்கு பயன்படாது.
- உறவில்லாத அயலவர் அச்சொத்தை அனுபவிப்பர்.

12. பேதை பெருஞ் செல்வம் பெற்றால் அவனது நிலை எவ்வாறு காணப்படும்?
பித்து (பைத்தியம்) பிடித்த ஒருவன் அம்மயக்கத்தோடு மதுவையும் உண்டு மயங்கியது போலாகும்.

13. பேதை சான்றோர் கூடிய சபையில் அமர்ந்திருக்கும் செயல் எவ்வாறு காணப்படும்?
- தூய்மை இல்லாதவற்றை மிதித்து பின்பு அக்கழுவாத காலை, இன்பத்தை தருகின்ற படுக்கையின் மேல் வைப்பது போலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அது போல ஒழுக்கம் நிறைந்த சான்றோர் நிரம்பிய சபை சிறந்தது. அச்சபையில் அறிவிலி புகுந்தால் அச்சபையும் தூய்மையற்று இழிந்து விடும்.

14. பேதை ஒரு தொழிலை/வினையை செய்வானாயின் யாது நிகழும்?
ஒரு தொழிலை செய்யும் முறையை அறியாத பேதை அக்கருமத்தை செய்வானாயின் அத்தொழில் பாழ்படும். அதனைச் செய்யும் பேதையும் குற்றவாளி ஆகி தண்டனை பெறுவான்.

## சங்கப் பாடல்கள் (அலகு – 11)

01. 'தச்சன் செய்த சிறுமா வையம்' ... எனும் பாடல் இடம் பெற்ற இலக்கியம் எது?
குறுந்தொகை

02. இப்பாடலின் ஆசிரியர் யார்?
தும்பிசேர் கீரன்

03. இப்பாடல் யாரால் யாருக்கு பாடப்பட்டது?
தோழியால் தலைமகன் வாயில்களுக்கு (பாணன் முதலியோர்க்கு) கூறப்பட்டது.

04. இப்பாடலில் கூறப்பட்ட தலைவனின் சிறப்பு யாது?
நல்ல தேரையும் பொய்கைகளையும் உடையவன்.

05. இப்பாடலில் கூறப்பட்ட உவமை யாது?
தச்சனால் செய்யப்பட்ட சிறிய குதிரை பூட்டிய சிறு வண்டியை ஏறி இன்பமுறா விட்டாலும் கைகளால் இழுத்து இன்பமடைகின்ற சிறுவர்கள் போல, தலைவியும் தலைவனோடு சேர்ந்து இன்பமடையாவிட்டாலும் தலைவனின் சிறப்புக்களைப் பேசி இன்பமடைதல்.

06. இனி நினைந்து... எனும் பாடல் இடம்பெற்ற இலக்கியம் எது?
புறநானூறு

07. இப்பாடலின் ஆசிரியர் யார்?
தொடித்தலை விழுத்தண்டினார்

08. இப்பாடலின் திணை, துறை என்பவற்றைத் தருக.
திணை – பொதுவியல்
துறை – கையறுநிலை

09. இப்பாடல் எதனை வெளிப்படுத்துகின்றது?
இளமை கழிந்து போனதால் அதனை எண்ணி மனம் வருந்தும் புலவரின் செயலை.

10. இப்பாடலில் கூறப்பட்ட இளமைக்கால நினைவுகள் யாவை?
- வண்டல் மண்ணில் பாவைசெய்து விளையாடும் மகளிரோடு தாமும் கைகோர்த்து விளையாடுதல்.
- அவர்கள் தழுவிய இடங்களை தாமும் தழுவுதல்.
- உயரமான கிளைகளையுடைய மருத மரக் கிளையில் ஏறி கரையிடத்து நிற்போர் வியக்கும்படி அலைகளில் நீர்த்துளிகள் மேலே எழ துடுமென்று நீரினுள் குதித்து மணலை எடுத்துக்காட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சியமும் சமநோக்கும் (அலகு – 12)

01. இக்கட்டுரையின் ஆசிரியர் யார்?
புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை

02. உலகம் இனிது நடைபெறுவதற்கும் மக்கள் உயர் நலமுறுவதற்கும் கருவியாய் அமைவது எது?
இலட்சியங்கள்

03. நாம் இலக்கியங்களைக் கற்பதால் எவற்றை அறிகின்றோம்?
- இலட்சியங்களைக் காண்கின்றோம்.
- இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகிய இலட்சியவாதிகளை காண்கின்றோம்.

04. சிலப்பதிகாரம் எனும் காப்பியத்தை எழுதியவர் யார்?
இளங்கோவடிகள்

05. சேரன் செங்குட்டுவனின் மனைவியின் பெயர் யாது?
வேண்மாள்

06. இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் இரு பெரும் தேவியர்களும் யாவர்?
கண்ணகிதேவி, பாண்டிமாதேவி

07. இலட்சியங்களைக் கடைப்பிடித்த இலக்கிய கதாபாத்திரங்கள் எவை?
கண்ணகி, அருச்சுனன், தசரதன், பாண்டிமாதேவி, தருமர்

08. அரிச்சந்திரனின் வரலாற்றைக் கூறும் நூல் எது?
அரிச்சந்திர புராணம்

09. அரிச்சந்திரனின் மனைவியின் பெயர் என்ன?
சந்திரமதி

10. அரிச்சந்திர புராணத்தை இயற்றியவர் யார்?
நல்லூர் வீரகவிராயர்

11. பின்வரும் நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவர்கள் யாவர்?
- முல்லைக்கு தேர் கொடுத்தவன் - பாரி
- மயிலுக்கு போர்வை கொடுத்தவன் - பேகன்
- பெருஞ்சித்திரனாருக்கு தலையைக் கொடுத்தவன் - குமணன்

12. தாம் பெற்ற இலட்சியப் பயனை தியாகம் செய்தவர்கள் யாவர்?
மாணிக்கவாசகர், தரும புத்திரர்

13. தசரதனின் வரலாற்றைக் கூறும் இலக்கியம் எது?
இராமாயணம்

14. உயிரை விடவும் மானத்தை பெரிதாக காத்தவன் யார்?
அருச்சுனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கதி இழக்கினும் கட்டுரை இழக்காதவன் யார்?
அரிச்சந்திரன்

16. கலியுக அரிச்சந்திரன் என அழைக்கப்பட்டவர் யார்?
காந்தியடிகள்

17. சத்தியத்திற்காக உயிரைத் துறந்தவன் யார்?
தசரதன்

18. இக்கட்டுரையில் கூறப்பட்ட இலக்கியங்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| திருக்குறள் | சிலப்பதிகாரம் | மகாபாரதம் | புறநானூறு |
| திருவாசகம் | அரிச்சந்திர புராணம் | இராமாயணம் | |

19. 'உன்னுடைய திருவருள் கிடைக்குமாயிருந்தால் நரகம் செல்வதற்கும் அஞ்சமாட்டேன்' எனக் கூறியவர் யார்?
மாணிக்கவாசகர்/மணிவாசகர்

20. புழுத்த நாய்க்கு கிட்டாத முக்தியுலகம் தனக்கு வேண்டாமென அறத்தை இலட்சியமாககொண்டு வாழ்ந்தவர் யார்?
தருமன்

21. இலட்சியங்களை கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள் எவை?
- இலட்சியம் உலகுக்கு நன்மை தரும்.
- சமூகப் பயனை காணச் செய்யும்.
- இலட்சியவாதிகள் பிறரை ஈடேற்றுவர்.
- அவர் குறைந்தவர் இவர் உயர்ந்தவர் என்ற வேறுபாடு ஏற்படாது.
- தமக்குள் ஒருமைத் தன்மையோடு வாழ்வார்.

22. சேரன் செங்குட்டுவன் தனது மனைவி வேண்மாளிடம் யாது வினாவினான்?
உயிருடன் சென்ற ஒரு மகள் தன்னினும் செயிருடன் வந்த இச்சேயிழை தன்னினும் நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்?

23. 'அத்திறம் நிற்க' என்ற தொடரால் உணர்த்தப்படுவது யாது?
இரு பெரு மகளிருள்ளும் மிகச் சிறந்தவர் யாரென்று கூற வேண்டாம். பாண்டிமாதேவி பெருந்திருவுறுக. கண்ணகி தேவியைக் கொண்டாட வேண்டும் என்பதேயாகும்.

24. மக்கள் வாழ்வில் இலட்சியம் இல்லாவிட்டால் யாது நிகழும்?
- இலட்சியமில்லாத மனிதன் மனிதனல்லன்.
- இலட்சியமில்லாத வாழ்வு ஒரு வாழ்வன்று.
- இலட்சியமில்லாததை இலக்கியம் எனக் கூற முடியாது.
- இலட்சியங்களுள் ஒருமைப்பாடு காணமுடியாது.
- சமநோக்கம் அற்றவர்களாக இருப்பர்.

25. இலட்சியத்தின் உயர்ந்த பண்புகள் எவை?
- உலகம் இனிது நடைபெற உதவுகின்றது.
- மக்கள் உயர் நலமுறுவதற்கு உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பழைமையிற் பழைமையும் புதுமையிற் புதுமையும் பெற்று விளங்குகின்றது.
- முன்னோர்கள் இலட்சியத்தால் ஈடேறினார்.
- நாமும் இலட்சியத்தால் ஈடேறுகிறோம்.
- நம் பின்னோரையும் இலட்சியமே ஈடேற்றும்.

26. இலக்கியங்களைப் படிப்பதால் ஏற்படும் பயன்கள் யாவை?
- இலட்சியங்களை காண முடியும்.
- இலட்சியங்களைக் கடைப்பிடித்த இலட்சியவாதிகளை காணமுடியும்.
- நிறைவுடைய, குறைவுடைய கதாபாத்திரங்களின் மூலம் நாம் இலட்சியமென்ற குறிக்கோளை அடையலாம்
- இலக்கிய இன்பம் பெறலாம்.

## மூத்தம்மா (அலகு – 13)

01. மூத்தம்மா எனும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
ஓட்டமாவடி அறபாத்

02. இக்கதையில் இடம்பெறும் பிரதான பாத்திரங்கள் எவை?
மூத்தம்மா, மூத்தவாப்பா, மூத்தம்மாவின் பேரன் காசீம், பேர்த்தி

03. பக்குல் கத்துவதற்கு மூத்தம்மா கூறிய பதில் யாது?
அது நம்மட ஊருக்க குடும்பத்து ஆராவது மவுத்தாப் போறதுக்கு அடையாளம் எனக் கூறினாள்.

04. மூத்தம்மாவின் குணவியல்புகள்?
- பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கு
- பழைமையான பழங்கால வழக்கங்களை விடாது கடைப்பிடிப்பவள்
- சுறுசுறுப்பானவள்
- பேரக் குழந்தைகள் மீது பாசமுடையவள்
- அனுபவசாலி
- செய்யும் காரியங்களை திறம்பட செய்பவள்
- கைராசிக்காரி எனப் பெயர் பெற்றவள்
- கைமருந்து செய்பவள்
- மூடப்பழக்க வழக்கங்களை நம்புபவள்
- தைரியமானவள்
- அழகுடையவள்

05. இக்கதையில் காணப்படும் கிராமத்து மூடநம்பிக்கைகள் எவை?
- பக்குல் கத்தினால் யாரோ இறப்பதாக எண்ணுதல்
- சிரட்டையில் நெருப்பு தணலில் உப்பு இட்டு அதை வெடிக்கச் செய்து பக்குலை விரட்டுதல்
- நேர்த்திக்கடன் கொடுத்தல்
- மருத்துவிச்சியின் மீது அதீத நம்பிக்கை கொண்டிருத்தல்.

06. மூத்தம்மா செய்யும் தினசரி வேலைகளை எடுத்துக் காட்டுக.
- பசுவில் பால் கறத்தல்.
- மாட்டுக்குத் தீவனம் போடல்.
- அரிசியிடித்து மாவாக்கி உணவு தயாரித்தல்.
- பனை ஓலையில் பெட்டி/பாய் பின்னுதல்/இழைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிராமத்தவருக்கு கைவைத்தியம் செய்தல்.

07. இக்கதையில் கூறப்படும் கிராமியப் பண்பாட்டு அம்சங்கள் யாவை?
- மரத்தின் கீழ் உறங்குதல்
- மாடு வளர்த்தல், பால் கறத்தல்
- மாட்டு வண்டிப் பயணம்
- பனையோலையில் பெட்டி, பாய் இழைத்தல்
- அரிசி மாவை உரலில் இடித்து உணவு தயாரித்தல்
- வெற்றிலை பாக்கு சாப்பிடுதல்
- கிராமத்து அணிகலன்களை அணிந்திருத்தல் (அல்லுக்குத்து, கருகமணிமாலை, செப்புக்காப்பு)
- மூடநம்பிக்கை கொள்ளுதல்
- கைவைத்தியம் பார்த்தல்
- நேர்த்திக்கடன் செய்தல்
- மரத்தின்கீழ் சிறியவர்களுக்கு கதை கூறுதல்

08. மூத்தம்மாவின் பேரன் காசிமின் குணப்பண்புகள் யாவை?
- பயம் கொண்டவன்
- எல்லோரிடமும் பாசமுடையவன்
- மூத்தம்மாவை குட்டி இராணியாய் மதிப்பவன்
- மூத்தம்மாவின் இறப்பினால் கலங்குபவன்
- சின்னச்சின்ன வேலைகளை செய்து கொடுப்பவன்.

## தற்காலக் கவிதைகள் (அலகு – 14)

### 1. தேயிலைத் தோட்டம்

01. தேயிலைத் தோட்டத்திலே என்ற கவிதையின் ஆசிரியர் யார்?
- சி.வி.வேலுப்பிள்ளை

02. இக்கவிதையின் மையக்கருத்து யாது?
- மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளைக் கூறுதல்.

03. இக்கவிதை எவ்வாண்டில் வெளிவந்தது?
- 1950

04. இது எம்மொழியில் எழுதப்பட்டது?
- ஆங்கில மொழியில்

05. இதனை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
- சக்தி. அ. பாலையா

06. சி.வி.வேலுப்பிள்ளை பெற்ற பட்டம் யாது?
- மக்கள் கவிமணி

07. "தேயிலைத் தோட்டத்திலே" என்ற கவிதையில் கூறப்படும் மலையக மக்களின் அவலங்கள் எவை?
- தோட்டத்தில் கடின உழைப்பாளிகளாக இருந்து மாண்டுபோன இவர்களுக்கு ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லறை இல்லை.

- அவர்கள் இறந்த நினைவுநாள் கொண்டாடப்படுவதில்லை.
- அவர்களது புகழை சொல்லுவதற்கு எவருமில்லை.
- இவர்களிடம் உள்ளம் உருகி அன்பு காட்டுவதற்கு எவருமில்லை.
- இறந்துபோன இடத்தில் காட்டுப் பூவையாவது பறித்துப் போடுவதற்கு எவருமில்லை.
- தந்தையின் சிதைமேல் அதாவது தந்தை புதைக்கப்பட்ட இடத்திலேயே மகனும் ஏறி நின்று தொழில் செய்தல்.
- அதே தொழிலையே மகனும் செய்தல்.
- யாரோ வாழ்வதற்காக தனது உழைப்பைக் கொடுத்தல்.
- அடிமை வாழ்வு வாழ்தல்.
- தேயிலைச் செடியின் கீழேயே புதைக்கப்படல்.
- இறைவன் கூட இரக்கம் காட்டாதிருத்தல்.

## 2. குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்

01. “குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்” எனும் கவிதையின் ஆசிரியர் யார்?
   - கவிஞர் அகளங்கன்

02. இவரது இயற்பெயர் யாது?
   - நா.தர்மராசா

03. இக்கவிதை எக்கவிதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது?
   - அகளங்கன் கவிதைகள்

04. இக்கவிதை மூலம் வெளிப்படுத்தப்படும் இயற்கைக் காட்சிகளை எடுத்துக் காட்டுக.
   - மந்திகள் மாமரங்களில் தாவித்தாவி மாங்கனிகளை உண்டு மகிழ்தல்.
   - வண்டுகள் மலர்களில் தேன் பருகுதல்.
   - குயில்கள் பாடுதல்.
   - கிளிகள் பருவத்துக்கு ஏற்ப ஆண் கிளிகளை தேடுதல்.
   - சாமரம் வீசுவது போல மயில் தோகை விரித்து ஆடுதல்.
   - வயலிலே செந்நெற் கதிர்கள் அசைந்தாடுதல்.
   - வியர்வை சிந்த உழவர்கள் வயலில் வேலை செய்தல்.
   - குழந்தைகள் முற்றத்தில் மண்ணளைந்து விளையாடுதல்.
   - மரங்களில் பழங்கள் காய்த்துக் குலுங்குதல்.
   - குஞ்சுகளுக்கு இரைதேடிக்கொண்டு வந்து உணவூட்டும் குருவிகள்.
   - நட்சத்திரங்கள் வானில் சூழ்ந்திருத்தல்.
   - பஞ்சு போன்ற திரண்ட முகிற் கூட்டங்கள்.
   - ஓடி விளையாடும் அணில்கள்.
   - சூரியன் தனது ஒளிக்கதிர்களைப் பரப்புதல்.
   - ஓடுகின்ற ஆறுகள்.
   - ஊருகின்ற சிற்றெறும்புகள்.
   - ஆடுகின்ற பூமரங்கள்.
   - அசையும் இலைகள்.
   - குலை வாழை தலைசாய்ந்திருத்தல்.
   - பறவைகள் நீரில் குளித்து மகிழ்தல்.
   - ஆம்பல் மலர்கள் பூத்துக் குலுங்குகின்ற குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. சீறி ஓடாத வருங்கால மனித நதி

01. "சீறி ஓடாத வருங்கால மனித நதி" இக்கவிதையின் ஆசிரியர் யார்?
- சோலைக்கிளி

02. இக்கவிதையின் மையக்கருத்து யாது?
- எழுத்தறிவின்மையின் அவலம்

03. எழுத்தறிவின்மையால் ஏற்படக்கூடிய அவலங்கள் எவை?
- தனது நிலையை எண்ணி வெட்கப்படல்.
- உள்ளத்தில் எழும் காதலுணர்வுகளை எழுதி வெளிப்படுத்த முடியாது.
- இவன்மீது காதல் கொண்ட பெண் வருந்துவாள்.
- எதிர்காலம் இல்லாது போய்விடும்.
- அழகாயிருந்தாலும் அதனால் பயனில்லாது போய்விடும்.

04. இக்கவிதையின் பையனின் அழகு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?
- அரும்பு மீசை
- இளமையான உடல்வாகு
- கீழுதடு சிவப்பு
- அழகு முகம்

05. "அது ஒரு செத்த சிரிப்பு" என்ற தொடரால் தெளிவுபடுத்தப்படுவது யாது?
- அதாவது உள்ளத்திலிருந்து வந்த சிரிப்பு அல்ல அது. என்னால் எழுத முடியவில்லையே என்பதனால் அவன் தனது நிலையை எண்ணி வெட்கிச் சிரிக்கும் சிரிப்பு என கூறப்படுகிறது.

### அற்றைத் திங்கள் (அலகு – 15)

01. அற்றைத் திங்கள் என்ற நாடகத்தின் ஆசிரியர் யார்?
கவிஞர் இன்குலாப்

02. இப்பாடல் அமைந்த நூல் எது?
புறநானூறு

03. பாரியினுடைய புதல்விகள் யாவர்?
அங்கவை, சங்கவை

04. அற்றைத் திங்கள் பாடப்பட்ட திணை, துறை யாது?
திணை– பொதுவியல்
துறை - கையறுநிலை

05. பாரி மன்னன் ஆண்ட பிரதேசம் யாது?
பறம்புமலை

06. இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
பாரி மன்னன் இறந்த பின்னர் பிரிவுத்துயர் தாங்காது அவரது புதல்விகளால் பாடப்பட்டது.

07. பாரி மன்னனின் நண்பர் யார்?
புலவர் கபிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பாரியின் புதல்விகளை கபிலர் யாரிடம் ஒப்படைத்தார்?
ஔவையாரிடம்

09. 'அற்றைத் திங்கள்' எனும் பாடலின் பொருள் யாது?
அந்த மாதம் வெண்ணிலவு காலத்தில் எங்கள் தந்தை எம்முடன் இருந்தார். எமது பறம்புமலையை எவரும் கைப்பற்றவில்லை. ஆனால் இந்த மாதம் இந்த வெண்ணிலவு காலத்தில் வெற்றி முரசு கொட்டும் மூவேந்தர்களும் (சேர, சோழ, பாண்டியன்) எங்களது மலையைக் கைப்பற்றிக் கொண்டார்கள் நாங்கள் தந்தை இல்லாதவர்கள் ஆனோம்.

10. இப்பாடலில் இழையோடிக் கிடக்கும் உணர்வு யாது?
கவலை

11. 'வென்று எறி முரசின் வேந்தர்' என குறிப்பிடுபவர்கள் யாவர்?
மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர்

12. பாரி மன்னன் பற்றி நீர் அறிந்த மூன்று விடயங்கள் தருக.
- சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்களில் ஒருவன்
- மலைப்பகுதியான பறம்பு மலையை ஆண்ட மன்னன்
- சிறந்த கொடை வள்ளல்

13. மரப்பாச்சி என்றால் என்ன?
- மரத்தினால் செய்யப்பட்ட பொம்மை

14. தந்தை தம்மை எவ்வாறு வளர்த்ததாக அங்கவை கூறுகிறாள்?
- தந்தை கட்டிய கூடு
- புறாக்குஞ்சுகளைப் போல வளர்த்தார்
- அம்மாவின் முகம் நினைவில் இல்லை. நிலாவைத் தான் காட்டினார்.
- பறம்பு மலை மக்களோடு அன்பாக வளர்த்தார்.

15. தாலாட்டுப் பாடலின் மூலம் போருக்கு பின்னரான பறம்பு நாட்டின் நிலை எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
- அழகான நடைவண்டி, அசைந்தாடும் கிலுகிலுப்பை பழக ஒரு மரப்பாச்சி என்பன பறிக்கப்பட்ட நிலை.
- அரளிப்பூத் தண்டெடுக்கப் போன அத்தை திரும்பவில்லை.
- மல்லிகைப் பூச்செண்டு கட்டப் போன மாமன் மீளவில்லை.
- தாலாட்டுக்கு அசைந்த தொட்டில் வரைக்கும் இரத்த வெள்ளம் நிறைந்து கிடந்தது.
- பால் போன்ற நிலவைச் சொரிந்த நிலாவின் முகத்தில் தீப்பந்தம் பற்றி எரிவதுபோல் சிவந்து காணப்படுகிறது.
- பறம்புமலை முழுவதும் ஏலம்பூ வாய் பொசுங்க தீ கொழுந்துவிட்டு எரிகிறது.
- தந்தையுமில்லை தந்தையின் தேருமில்லை எல்லாம் முடிந்து விட்டது எனக் கூறுதல்.
- பறம்புமலை இராச்சியமும் பாரி மன்னனும் போரில் வீழமாட்டார் என்ற நம்பிக்கைக்கூட இப்போது வீழ்ந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பறம்பு மலையை விட்டுப்பிரிய மறுக்கும் பாரி மகளிரது வேதனை எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?
- பறம்பு மலையை, பால் வார்க்கும் நிலாவை... சங்கவை எப்படி எடுத்துச் செல்வது எனக் கேட்பதன் மூலம் நாட்டை விட்டுப் பிரிய மனமின்றி இருத்தல்.
- பறம்புமலை வாழ் குறவர்கள், கானவர்கள், எயினர்கள், உமணர்கள் மற்றும் மலைவாழ் மக்கள் அனைவரது அன்பையும் எவ்வாறு விட்டுச் செல்வது எனக் கேட்டல்
- வரகும் என்னும் முளைச்சு முதிர்ந்து கிடக்கிற இந்தப் புன் செய்களை எவ்வாறு விட்டுப் போவது என புலம்புதல்.
- கள் மணக்கும் இக்குடிசைகளை எவ்வாறு விட்டுச் செல்வது எனக் கேட்டல்.

17. பறம்பு மலையை விட்டு பிரியும் கபிலரது துன்பம் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?
- அருவியின் ஆர்ப்பரிப்பு, பறவைகளின் பேச்சொலி இலைகளின் சலசலப்பு இவற்றை காது கொடுத்துக் கேட்டல்.
- இப்போ இந்த மலையை விட்டுப் பிரிவது மலையை விட கனக்கிறது எனக் கூறல்.
- 'பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார்... புறப்படுகிறோம் பறம்பே' மதுவிலும் புலாலிலும் களித்திருந்தநட்பு நம்முடையது. அருவியில் முகம் காட்டும் உன் அழகிய காட்சிகள் நீர் வாரும் கண்களின் ஈரத்தில் நிற்கும் பறம்பு மலையே நீ வாழ்க எனக் கூறுதல்.

## கிருஷ்ணன் தூதுச் சுருக்கம் (அலகு – 16)

01. வில்லி பாரதம் எனும் நூலை இயற்றியவர் யார்?
- வில்லிபுத்தூர் ஆழ்வார்

02. வில்லி பாரதம் எத்தனை பருவங்களை உடையது?
- 10 பருவங்கள்

03. "அமரர் கோமான்" எனப்படுபவர் யார்?
- கண்ணன்

04. "அறத்தின் உருவம் போல்வான்" யார்?
- தருமர்

05. பாண்டுவின் புதல்வர்கள் யாவர்?
- பஞ்சபாண்டவர் (தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்)

06. திருதராட்டிரனின் புதல்வர்கள் யார்?
- துரியோதனன் முதலாய நூறு பேர்

07. குருநாடு எனக் கூறப்படுவது எது?
- அத்தினாபுரம்

08. கிருஸ்ணனை துரியோதனனிடம் தூது அனுப்பியவன் யார்?
- தருமன்

09. "கண் இலா அருளிலி" யார்?
- திருதராட்டிரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. "பவன குமாரன்" என அழைக்கப்படுபவன் யார்?
   - வீமன்

11. துரியோதனுடைய கொடி யாது?
   - பாம்புக் கொடி

12. "அரவுயர்ந்தோன்" என அழைக்கப்படுபவன் யார்?
   - துரியோதனன்

13. கண்ணன் பஞ்ச பாண்டவர்களிடம் யாது வினவினான்?
   - குருநாட்டைப் பெறுவதற்கு எண்ணமா? அல்லது அரிய காட்டுக்கு மீண்டும் சென்று வாழ எண்ணமா? அல்லது கொடிய போரில் யார் வெல்வது என்று எண்ணி போர் செய்ய எண்ணமா? எனக் கேட்டான்.

14. "உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள்" எனக் கூறியவன் யார்? உயிர் அனையான் யார்?
   - தருமன், கிருஸ்ணன்

15. பல "மூல சாகம்" எனக்குறிப்பிடப்படுவது எது?
   - பழம், கிழங்கு, இலைகள்

16. "சிந்தூரத் திலக நுதல் சிந்தூரத்தின் மருப்பு ஒசித்த செங்கண் மாலே" இத்தொடரின் மூலம் எச்சம்பவம் குறிப்பிடப்படுகிறது?
   - கிருஸ்ணனும் பலராமனும் (கம்சனது) அரண்மனையில் நடந்த வில் விழாவுக்கு போகும்போது வாசலில் நிறுத்தப்பட்டிருந்த குவாலயபீடம் என்ற மதயானை எதிர்த்தபோது அதன் தந்தங்களைப் பிடுங்கி அதனாலேயே யானையைக் கொன்ற சம்பவம்.

17. தருமன் கிருட்டிணனை துரியோதனனிடம் தூது சென்று எவற்றைக் கேட்குமாறு வேண்டுகின்றான்?
   - "துரியோதனிடம் சென்று உழவர்களின் முற்றங்களில் எல்லாம் சங்குகள் ஊர்ந்து திரியும் நீர் வளமுடைய நாட்டில் எமது பாகத்தைக் கேள். அதைத்தர மறுத்தால் எங்கள் ஐவருக்கும் ஐந்து ஊர் கேள். அதையும் தர மறுத்துவிட்டால் ஐந்து வீடுகளையாவது தரும்படி கேள். அதனையும் தர மறுத்தால் கொடிய யுத்தத்துக்கு அழைப்பாய்" என்றான்.

18. குருநாட்டின் சிறப்புக்கள் யாவை?
   - கயிரவமும் தாமரையும் கமழ் பழனக் குருநாடு.
   - உழவர்கள் முன்றில் தொறும் நந்து ஊரும் புனல் நாடு.
   - தாது ஊதி அளி முரலும் தண்பதி.

❖ **சந்தர்ப்பம் கூறுக.**

01. "ஐவராம் அவனிபர்க்கும் நினைவு ஏது"
   - கிருஸ்ணனால் - பஞ்சபாண்டவர்களிடம்

02. "உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள்"
   - தருமனால் - கிருஸ்ணனுக்கு

03. "இருநிலத்தை ஆள இனித் துணிவதே கடன்"
   - கிருஸ்ணனால் - தருமனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. "ஊனம் இலான் மானம் இலாது உரைப்பதற்கு என் செய்வது"
- வீமனால் - கிருஸ்ணனுக்கு

05. "வாடுகின்ற மடப்பாவை தன் வரமும் என் வரமும் வழுவா வண்ணம் கோடுகின்ற மொழியவன் பால் எனைத் தூது விடுக கொற்ற வேந்தே"
- வீமனால் - தருமனிடம்

## தத்தை விடு தூது (அலகு – 17)

01. தத்தை விடு தூது எனும் கவிதையின் ஆசிரியர்?
தி.த. சரவணமுத்துப்பிள்ளை

02. தத்தை விடு தூது வெளியிடப்பட்ட ஆண்டு எது?
1892

03. அறிவற்றவர்கள் பெண்ணின் இயல்பென கருதுபவை யாவை?
- உண்பதுவும் உறங்குவதும் ஊர்க்கதைகள் பேசுவதும் பெண்கள் தொழில்.
- பெண்களுக்கு தமது கணவனே கண் கண்ட தெய்வம்.
- பெண்களுக்கும் அடிமைகளுக்கும் பேதமில்லை.

04. பெண்ணுக்கு கல்வி அறிவு அவசியம் என்பது எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
- பெண்கள் கல்வி நலம் பெற்றனரேல் கணவருக்கு உற்ற துணையாக இருப்பார்கள்
- இந்த உலகம் சிறந்து விளங்கும்
- பெண்ணடிமைத் தனமுடைய பழைமையான உலகு சிறப்படையும்.

05. இக்கவிதை கூறும் பெண்ணடிமைத் தனங்கள் பற்றி விபரிக்குக?
- அவள் காதலித்தவனை விடுத்து பணத்தோடு வந்த ஒருவனுக்கு திருமணம் செய்து கொடுத்தல்.
- பெண்ணின் அருமை அறியாதவர்களுக்கு பெண்ணைக் கொடுத்தல்.
- மனதுக்கு பிடிக்காத ஒருவனுக்கு பொன்னையும் கொடுத்து பெண்ணையும் கொடுத்தல்.
- பெண் கல்வியை கொடுக்க மறுத்தல்.
- பெண்களை எப்போதும் வீட்டிற்குள் அடக்கி வைத்தல்.
- பூட்டித் திறந்து எடுக்கும் பொருளாக கருதுதல்
- திருமணத்தை இமைப்பொழுதில் விசாரிக்காது செய்து முடித்தல்
- சுதந்திரம் அற்றவளாக கருதுதல்
- படிப்பறிவற்றவர்களுக்கு பெண்ணைக் கொடுத்தல்
- தீர விசாரிக்காது இமைப்பொழுதில் திருமணத்தை முடித்தல்.

06. பாடலில் காதலியை எவ்வாறெல்லாம் வருணிக்கின்றார்?
- மான் ஏங்கும் மைவிழியாள்
- வஞ்சிக் கொடி போன்ற இடை
- பசுமையான வளையல்களை அணிந்தவள் (பைந்தொடி)
- செந்தாமரை போன்ற முகம்
- வாள் போன்ற ஒளி வீசும் கண்கள்
- இரு கண்மணியை ஒத்தவள்
- பவளம் போன்ற வாயையுடையவள் (கிஞ்சுகவாய்ப் பைந்தொடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. தனது உயிரைக் கொல்பவை என தலைவன் கிளியிடம் கூறுபவை யாவை?
- உனக்கேற்ற மணவாளனாக நானிருக்கும் போது குரங்கைப் போன்ற ஒருவனிடம் தன் காதலியை சேர்க்க நினைத்தல்.
- கல்வியிலே சிறப்புடையவனாக தலைவன் இருந்தும் கல்வியறிவற்ற ஒருவனிடம் சேர்க்க நினைத்தல்.
- பெண்ணின் அருமையை அறியாதவர்க்கு பெண்ணைக் கொடுத்தல்
- மூடர் பேடர் முதியோர்க்கு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க எண்ணுதல்.

08. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள உவமைகளை குறிப்பிடுக.
- கொங்கு மலர் மாலை குரங்கிற்கு அளித்தல் போல
- வெம்புலி வாய்ப்பட்ட மான் போல
- பூட்டித் திறந்தெடுக்கும் பொருள் போல
- கூட்டிற் பசுங்கிளி போல
- கண்ணை மறைத்தே கொடு போய் காட்டில் விடும் பூனையைப் போல்
- சின்னப் பதுமை கொடு சிறார் செய் மணம் போல

## தமிழ்ப் பண்பாடு (அலகு – 18)

01. இக்கட்டுரையின் ஆசிரியர் யார்?
வணபிதா சேவியர் தனிநாயகம் அடிகளார்

02. தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் எவை?
- பரந்த உலக மனப்பான்மை (யாதானும் நாடாமல் ஊராமல்...)
- பிறரிடத்தில் அன்பு காட்டல்.
- தமக்கென வாழாது பிறருக்குரியவராய் வாழுதல்.
- விருந்தோம்பல்.
- மானமென்றால் உயிரைக் கொடுத்து காப்பாற்றுதல்.
- மனத்தூய்மை.
- யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என எண்ணுதல்.
- விடாது முயற்சி செய்தல்.
- எண்ணுவதெல்லாம் உயர்வாக எண்ணுதல்.
- கொடை.
- என் கடன் பணி செய்து கிடப்பதே என வாழுதல்.
- அகத்திணை புறத்திணை மரபு.

03. தமிழர் பண்பாட்டு கருப்பொருட்கள் எவை?
தெய்வம், உணவு. மா, மரம். புள், பறை, யாழ் ஆகிய ஏழு பொருட்களுமாம்.

04. தொல்காப்பியர் கூறும் பண்பாட்டுத் துறைகள் எவை?
வழிபாடு, இசை, இசைக்கருவிகள்

05. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனக் கூறும் நூல்?
புறநானூறு

06. இந்தியப் பண்பாட்டின் எழுபத்தைந்து (75) விழுக்காடு திராவிடப் பண்பாடு எனக் குறிப்பிட்டவர் யார்?
சுநீதிகுமார் சட்டர்ஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. சீறாப்புராணத்தின் ஆசிரியர் யார்?
உமறுப் புலவர்

08. வெள்ளை நிற மல்லிகையோ எனும் பாடலைப் பாடியவர் யார்?
விபுலானந்தர்

09. சீவக சிந்தாமணிக்கு உரை எழுதியவர் யார்?
நச்சினார்க்கினியர்

10. பிறநாடுகளிலிருந்து வந்து தமிழர் பண்பாட்டை கடைப்பிடித்து இலக்கண இலக்கியங்களை இயற்றியவர்கள் யாவர்?
வீரமாமுனிவர், கார்டுவெல் ஐயர், போப்பையர்

11. தமிழ்ப் பண்பாடு எனும் கட்டுரையில் பேசப்படும் தமிழர் பண்பாட்டின் சிறப்பியல்புகள் எவை?
- உலக மனப்பான்மை
- கண்ணோட்டம்
- பக்தி
- ஒழுக்கம்
- மக்கள் நலக்கொள்கை

12. தமிழர் பண்பாட்டை தழுவ முயன்ற பிற சமயத்தவர்கள் யாவர்?
பார்ப்பனர், சமணர், புத்தர், ஐரோப்பியக் கிறிஸ்தவர், மகமதியர்

13. வடமொழியிலுள்ள சமய இலக்கியங்கள் வளம் பெற உதவிய தென்னாட்டுத் தத்துவ ஞானிகள் யாவர்?
சங்கரர், இராமானுஜர், மாதவர்

14. பரந்த உலக மனப்பான்மையை வெளிப்படுத்தும் இலக்கியச் சான்றுகள் எவை?
- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் புறநானூற்றுப் பாடல்
- 'யாதாயினும் நாடாமல் ஊராமல்'.. எனும் திருக்குறள்

15. 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற புறநானூற்றுப் பாடலின் பொருள் யாது?
இந்திரனுடைய தேவாமிர்தம் கிடைத்தாலும் அதனைத் தனியே உண்ணாது பிறருக்கு கொடுத்து உண்ணல் அஞ்ச வேண்டியதற்கு மட்டும் அஞ்சும், சோம்பியிராத, பழியெனின் உலகத்தோடு தந்தாலும் ஏற்றுக்கொள்ளாத, புகழெனில் உயிரையும் கொடுக்கக்கூடிய, தமக்கென வாழாமல் பிறருக்காக வாழும் சான்றோரால் தான் இந்த உலகம் வாழ்கிறது என்பதாகும்.

16. பக்தியை வெளிக்காட்டும் கலை நிரம்பிய இடங்களாக இக்கட்டுரையில் குறிப்பிடப் படும் இடங்கள் யாவை?
- தஞ்சைப் பெருங்கோயில்
- கங்கை கொண்ட சோழபுரம்

17. 'இம்மைக்காவது மறுமைக்காமெனத்' தொடங்கும் பாடல் கூறும் பொருள் யாது?
இப்பிறவியில் செய்யும் நன்மைகள் மறுபிறவிக்கு உதவும்.

18. அக்காலத்தில் தமிழ் நாட்டின் எப்பொருள்களை உலகம் விரும்பியது?
- பட்டு, மிளகு, முத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. தமிழ் மக்களிடம் உலக மனப்பான்மையை வளர்த்து வந்த விடயங்கள் எவை?
- இந்தோனேசியாவிலிருக்கும் பெரும்பணான் பாணத்தரசன் (கோயில்)
- கம்பூச்சியாவிலிருக்கும் சில அரண்மனைகள்
- தாய்லாந்தில் கொண்டாடப்படும் திருவெம்பாவை
- ஆடவல்லார் நடராஜரின் வடிவம்

20. "தேம்பாவணி" என்ற இலக்கியத்தைப் படைத்தவர் யார்?
வீரமாமுனிவர்

21. சங்க காலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி தமிழ் நாட்டில் உலக மனப்பான்மை பரவியுள்ளது என்பதற்கு கட்டுரையாசிரியர் கூறும் ஆதாரங்கள் எவை?
- யாதும் ஊரே யாவரும் கேளிர்
- யாதானும் நாடாமல் ஊராமல், என்ற பாடல் அடிகளாலும்
- சமணம் புத்தம் போன்ற சமயங்களும் தமிழ்நாட்டில் வரவேற்கப்பட்டது என்பதாலும்
- சங்க காலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி தமிழ்நாட்டில் உலக மனப்பான்மை பரவியிருந்தது என்பது புலனாகிறது.

22. மணிமேகலையின் ஆசிரியர் யார்?
கூலவாணிகச் சீத்தலைச் சாத்தனார்

23. "யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல. அன்பால் அன்பும் அருளும்" எனக் கூறும் நூல் எது?
பரிபாடல்

24. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' எனக் கூறியவர் யார்?
பாரதியார்

25. "நான் மனிதன் மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை" என்று கூறியவர் யார்?
ரெறன்ஸ் எனும் இலத்தீன் புலவர்

26. பக்தியால் வளர்ச்சி பெற்ற கலைகள் எவை?
சிற்பக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை, நாட்டியக்கலை

27. உலகிலேயே எவரது பக்திப் பண்பு நிகரற்றதாக விளங்குகின்றது?
நாயன்மார், ஆழ்வார், சேக்கிழார், கம்பர்

28. பக்தி இலக்கியம் உண்டாவதற்கு எந்த இலக்கியம் துணையாக அமைந்தது?
சங்க இலக்கியம் (அகத்திணை இலக்கியம்)

29. "பக்தியின் மொழி தமிழ்" என கூறப்படுதற்கான காரணம் யாது?
தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும் ஆழத்திலும் பரப்பிலும் நிறைந்ததாக காணப்படுவதால் தமிழ் பக்தியின் மொழி எனக் கூறப்படுகிறது.

30. பண்டைக்கால இலக்கியங்களில் வாழ்க்கையின் நோக்கங்களாகக் கருதப்பட்டவை எவை?
இவ்வுலக வாழ்க்கையும் மக்களோடு இன்புற்று ஒழுகுவதும் இல்லறத்தின் இனிய நலன்களைக் காண்பதும் வாழ்க்கையின் நோக்கங்களாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருக்கம்

### 01. சுருக்கம் எழுதுவதற்கான வழிமுறைகள்

1. தரப்பட்ட மூலப்பகுதியை கருத்தூன்றி வாசித்தல்.
2. பிரதான கருத்தை இனங்காணல்.
3. துணைக் கருத்துக்களை இனங்காணல்.
4. குறிப்பெடுத்தல்.
5. தேவையற்ற அம்சங்களை நீக்குதல்.
6. கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படல்.
7. கேட்கப்பட்ட சொல் அளவில் எழுதுதல்.

### 02. மாதிரிச் சுருக்கங்கள்

1. நாம் நல்ல நிலையில் வாழ்வதற்கு கல்வி கற்றிருக்க வேண்டும். சமூகத்தில் நல்ல நிலையில் வாழ்பவர்கள் பலர் கல்வியறிவுடையவர்களாக இருப்பதைக் காண்கிறோம். கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. கல்வியறிவுடையவனை எல்லோரும் போற்றி மரியாதை செலுத்துவார்கள். எல்லோரும் கல்வி கற்றவர்களாக இருப்பது அவசியம்.
**விடை** – சமூகத்தில் நல்ல நிலையில் வாழக் கல்வி அறிவு அவசியம்.

2. மேகங்கள் கருக்கொண்டன. பறவைகள் தம் கூடுநோக்கிப் பறந்தன. குளிர்காற்று வீசியது. பாதைகளில் சென்ற மக்கள் விரைவாக நடந்தனர். சிலர் ஓடினர். மழை சோ எனப் பொழிந்தது.
**விடை** – இங்கு மழை பெய்தது.

3. நாய் ஒரு சிறந்த மிருகம். அது மனிதனது சிறந்த நண்பனாக நம்பப்படுகிறது. நாயைப் பற்றி பலரும் சிறப்பித்துக் கூறியுள்ளனர். நாய் நன்றியுள்ள மிருகமென்று எல்லோரும் சொல்லுவர்.
**விடை** – மனிதனின் நண்பனாக கருதும் நாய் மிகச் சிறந்த மிருகமாகும்.

4. மாலைதீவில் நடந்த படகு விபத்தில் படகில் இருந்த எல்லோரும் மடிந்தனர். எவரும் மிஞ்சவில்லை. ஐயோ! என்ன அவலம். அனைவருமா பரமபதம் அடைந்தனர். கடற் படையும் சுழியோடிகளும் எவ்வளவோ முயன்றும் ஒருவர்கூட உயிருடன் அகப்படவில்லை.
**விடை** – மாலைதீவு படகு விபத்தில் எல்லோரும் மடிந்தனர்.

5. கடல் போன்ற உலகிலே நீர்க்குமிழி போல நிலையற்றது எமது வாழ்க்கை. கடலிலே அகப்பட்ட சிறு துரும்பு அலைகளினால் மீண்டும் மீண்டும் கரைக்கு அடித்து வருவதைப் போன்று நாமும் இன்ப துன்பங்களினால் பதப்படுத்தப்படுகின்றோம்.
**விடை** – இப்பெரிய உலகிலே நிலையற்ற எமது வாழ்க்கையை இன்பமும் துன்பமும் பதப்படுத்துகின்றன.

### 03. பயிற்சிகள்

❖ **கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

வாழ்க்கை என்பது ஊண், உடை, உறையுள் முதலியவற்றை தேடிப்பெறும் முயற்சியில் தொடங்குவது. சமைத்து உண்ணல், நெய்து உடுத்தல், வீடு அமைத்து வாழ்தல், தற்காப்புக் காகப் பற்பல கருவிகள் இயற்றிக் கொள்ளல் முதலியன வாழ்க்கையின் முதற்படியில் நிகழ்வன. அந்நிலையில் பொருளே வாழ்க்கையின் நோக்கமாகவும் நாட்டமாகவும் அமையும். பொருளால் அதாவது ஊண், உடை முதலியவைகளால் இன்பம் பெற முயன்று அலைந்து அலைந்து வாடிய பின், மக்கள் வாழ்க்கையின் இரண்டாம் படியினை அடைந்து உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும் இருக்கும் இடத்திற்கும் போராட வேண்டிய வறுமையில் சிக்குண்டு வருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் இரண்டாம் படிநிலையை எய்தார். கஞ்சிக் கவலை மிகுந்த நாட்டில் கலைக் கவலை எழாது. கடவுட் கவலையும் தோன்றாது. பசித்துன்பம் அலைக்கும் நாடு பண்பாடு எய்தாது. வேண்டிய உணவும் பெற்று, உடையும் பெற்று, இடம் முதலியனவும் பெற்றவரே இரண்டாம் படி எய்தும் தகுதி உடையவர். தமிழ்ச் சான்றோர் ஊர்களை புகழத் தொடங்கியபோது மாடமாளிகையும் பிறவும் பற்றிப் புகழ்ந்துரைத்தலில் ஊக்கங் கொள்ளாமல் பசி என்பது அறியா ஊர்கள்! என்று புகழ்ந்த திறன் போற்றத்தக்கது. ஆதலின் வறுமை அற்ற நாடே முன்னேற்றத்திற்கு தகுதியுற்ற நாடாகும். அந்நாட்டு மக்களே வயிற்று வாழ்வு எனும் முதற்படியிலிருந்து கலை வாழ்வு எனும் இரண்டாம் படிக்கு உயரவல்லவர். ஏனையோர் கலை கலை என்று முழங்குதல் ஆரவாரமே அன்றி சிறிதும் பயன்படாது. இரண்டாம் நிலையுற்ற மக்கள் வயிற்றுக் கவலை அற்றவராய் புலன்களுக்கு சிறந்த விருந்துதேடி அவற்றின் வாயிலாக இன்பம்பெற முயல்வர். கண்ணுக்கு இனிய காட்சியாக ஓவியம், சிற்பம், நாடகம் முதலியன தேடும் செவிக்கு இனிய விருந்தாக இசை, காவியம், கதை முதலியன நாடுவர். அவ்வாறே மற்றப் புலன்களுக்கும் ஏற்ற விருந்து விழைந்து தேடுவர். அந்நிலையில் கலை வளர்ச்சியே மக்களின் வாழ்க்கையாக அமையும்.

## ❖ தொகைப்பெயர்

1) இருசுடர் - சூரியன், சந்திரன்
2) இருநிதி - சங்கநிதி, பதுமநிதி
3) இருபொருள் - கல்வி, செல்வம்
4) இருமரபு - தாய், தந்தை
5) இருமை - இம்மை, மறுமை
6) முக்கடுகம் - சுக்கு, மிளகு, திப்பிலி
7) முக்குலம் - சூரிய குலம், சந்திர குலம், அக்கினி குலம்
8) முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
9) மும்முரசு - கொடை முரசு, வெற்றி முரசு, மங்கல முரசு
10) நால்யுகம் - கிரேதம், திரேதம், துவாபரம், கலி
11) நால்வகைப்பா - ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, வெண்பா
12) நாற்கவி - ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி
13) நாற்குணம் (பெண்) - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
(ஆண்) - அறிவு, நிரை, ஓர்ப்பு, கடைப்பிடி
14) நாற்படை - தேர், குதிரை, யானை, காலாள்
15) நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு
16) நானிலம் - முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்
17) நான்கு உபாயம் - சாமம், பேதம் தானம், தண்டம்
18) ஐங்கணை - தாமரை, முல்லை, அசோகம், மாம்பூ, நீலோற்பலம்
19) ஐங்காயம் - கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம்
20) ஐங்குரவர் - அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன்
21) ஐம்பெருங்காப்பியம் - சீவகசிந்தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, சிலப்பதிகாரம், வளையாபதி
22) ஐஞ்சிறுகாப்பியம் - நீலகேசி, சூளாமணி, உதயகுமாரண காவியம், நாக குமார காவியம், யசோதர காவியம்
23) ஐந்திணை - புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல், பிரிதல்
24) ஐந்திலக்கணம் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
25) ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி
26) ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
27) ஐம்பூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
28) ஐம்பொன் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29) பஞ்சமாபாதகம் - கொலை, களவு, கள், பொய், காமம்
30) பஞ்சரத்தினம் - செம்மணி, முத்து, வைரம், பச்சை, நீலம்
31) அறுசுவை - இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கசப்பு
32) ஆறறிவு - பார்த்தல், கேட்டல், சுவைத்தல், முகர்தல், உணர்தல், சிந்தித்தல்
33) ஆறுபருவம் - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்
34) ஆறு தொழில் - ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்
35) ஏழுவகைப் பருவம் - பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்

## ❖ தொடர்மொழிக்கு ஒரு மொழி

1) அகராதி - சொற்களுக்கு அகர வரிசைப்படி பொருள் கூறும் நூல்.
2) அங்கதம் - வெளிப்படைப் பொருளில் புகழ்ந்தும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறுதல்.
3) அசகாயசூரன் - யார் துணையுமின்றித் தானே தனித்து நின்று போரில் வெல்லக்கூடிய ஆற்றல் படைத்தவன்.
4) அணிந்துரை - ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை.
5) அரங்கேற்றம் - அறிஞர் நிறைந்த சபைதனில் தாம் புதிதாக ஆக்கிய நூலை அல்லது கலைப் படைப்பொன்றை நிகழ்த்தி அச்சபை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தல்.
6) அழைப்பாணை - குறித்த ஒரு நாளில் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கும்படி ஒருவருக்கு நீதிபதியால் விடுக்கப்படும் அதிகாரபூர்வமான கட்டளை.
7) அறம்பாடுதல் - பிறருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சொற்களையும் சொற்றொடரையும் வைத்து கவிபாடுதல்.
8) ஆசுகவி - எடுத்த எடுப்பிலேயே கவிபாடும் ஆற்றல் படைத்தவன்.
9) ஆத்திகன் - கடவுள் இருக்கிறார் என நம்புபவன்.
10) ஆவணம் - நிலத்தில் உரிமை கொண்டாடுவதற்கான பத்திரம்.
11) ஆதுலர்சாலை- வறியவர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் முதியோர்களுக்கும் உண்டியும் உறையுளும் கொடுத்து ஆதரிக்கும் இடம்.
12) இராக்கதம் - பெண்ணும் சுற்றமும் உடன்படாமல் வலிந்து செய்யும் திருமணம்.
13) உப்பரிகை - செல்வர் வீடுகளில் மகளிர் முதலானோர் ஓய்வு நேரங்களில் பொழுதுபோக்குவதற்கென அமைக்கப்பட்ட மேன்மாடம்.
14) உயர்வு நவிற்சி – ஒரு பொருளைப்பற்றி உள்ளதை உள்ளவாறு கூறாமல் கேட்போர் மகிழுமாறு உயர்த்திக் கூறுதல்.
15) உரைகல் - பொன்னை உரைத்து அதன் தரத்தை அறியப் பயன்படும் ஒரு வகைக்கல்.
16) உலோகாயதன் - உலகமும் உலக இன்பங்களும் மாத்திரமே மெய்யானவையென்றும் கடவுளோ மறுமையோ இல்லையென்றும் வாதிப்பவன்.
17) ஊதாரி - கணக்கு வழக்கின்றி பொருளை வீணே செலவு செய்பவன்.
18) எதுகை - செய்யுட்சீர்களின் முதலாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது.
19) எய்ப்பில் வைப்பு - பிற்காலத் தேவைக்காக சேர்த்து வைக்கப்படும் பொருள்.
20) எழுத்தெண்ணிப் படித்தல் - ஒன்றும் விடாது மிகக்கவனமாக படித்தல்.
21) ஓம்படை - பேணிப்பாதுகாத்து தருமாறு ஒருவரை/ஒருபொருளை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்.
22) ஒப்புரவு - உலக நடையறிந்து ஒழுகுதல்.
23) கட்டியம் - அரசன் கடவுளர் முதலியோர் எழுந்தருளும்போது அவரது விருதுப்பெயர், வெற்றி முதலானவற்றைக் கூறுதல்.
24) கட்டுக்கதை - ஆதாரமின்றிய செய்திகளால் புனையப்பட்ட கற்பனைக் கதை.
25) காவற்காடு - கோட்டையைச் சூழ்ந்து அரணாய் அமைந்துள்ள காடு.
26) கைம்மருந்து - வைத்தியனின்றி தாமே தமது நோய்க்கு செய்யும் மருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27) கையுறை - அரசன், குரு, பெரியோர், குழந்தைகள் முதலானோர்களை காணச் செல்லும்போது கையிலே கொண்டு செல்லும் பொருள்.
28) சால்பு - அன்பு, நாண், ஒப்புரவு, வாய்மை, கண்ணோட்டம் எனும் குணங்கள் சேர்ந்த பண்புடைமை.
29) சிறுபட்டி - கட்டுக்கடங்காத இளைஞன்
30) சுருங்கை - நிலத்தின்கீழ் அமைக்கப்படும் இரகசிய வழி.
31) தசாப்தம் - பத்து ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி.
32) தலைமுறை - ஒருவர் பிறந்து மறையும் வரை உள்ள காலம்.
33) தேவராளன் - வேண்டும்போது தெய்வம் ஏறப்பெற்று ஆடப்பெறுவோன்.
34) நூன்முகம் - நூலாசிரியர் தாம் இயற்றிய நூலின் முன்னே தம் நூலைப் பற்றிக்கூறும் உரை.
35) பதிப்புரை - நூலை வெளியிடுவோர் நூலைப் பற்றி எழுதும் உரை.
36) நடுகல் - போரில் வீரமரணம் எய்திய போர் வீரனின் பெயரையும் புகழையும் எழுதி நடப்படும் கல்.
37) நிந்தகம் - அரசனும் செல்வரும் தமக்கு கீழ் சேவைபுரிவோர்க்கு வழங்கும் நிலம்.
38) நைட்டிகன் - ஆயுள் முழுவதும் பிரமச்சரியம் காத்து வாழ்வோன்.
39) நொதுமலாளர் - பகையுமின்றி நட்புமின்றி நடுநிலையில் நிற்போர்.
40) வெள்ளி விழா- இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா.
41) பொன் விழா - ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா.
42) வைர விழா/வச்சிர விழா/மணி விழா – அறுபதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா.
43) பவள விழா - எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா.
44) பன்னசாலை - முனிவர்கள் தங்குவதற்கு இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை.
45) பாசறை - பகைமேற்சென்ற அரசன் தன் படையுடன் தங்கியிருக்கும் இடம்.
46) பௌராணிகன் - புராணக் கதைகளைச் சுவைபட பிரசங்கம் செய்வோன்.
47) போலி - ஒன்று போலிருக்கும் மற்றொன்று.
48) மதுரக்கவி - இறைவன் அருள்பெற்று கவிபாடும் ஆற்றல் பெற்றவன்.
49) விகடகவி - நகையும் பரிகாசமும் தோன்ற கவிபாடும் ஆற்றல் படைத்தவன்.
50) வித்தாரகவி - விரித்துப் பாடும் ஆற்றல் கொண்டவன்.

## ❖ மரபுத் தொடர்

1. அடி பிழைத்தல் - நெறி தவறுதல்
2. அடி கோலுதல் - தொடக்குதல்
3. அடிப்படல் - கீழ்ப்படிதல்
4. அடியொற்றுதல் - பின்பற்றுதல்
5. அடி விளக்குதல் - தன் மரபை புகழ் பெறச் செய்தல்
6. அடுக்குப் பண்ணுதல் - ஆயத்தம் செய்தல்
7. அவசரக் குடுக்கை - பதற்றக்காரன்
8. அள்ளிக் குவித்தல் - அதிகம் சம்பாதித்தல்
9. அள்ளி இறைத்தல் - அதிகமாக கொடுத்தல்
10. அறை கூவுதல் - போருக்கழைத்தல்
11. ஆகாயக் கோட்டை - கற்பனை
12. ஆசாடபூதி - ஏமாற்றுக்காரன்
13. ஆழம் பார்த்தல் - திறமை முதலியவற்றை ஆராய்தல்
14. ஆறப்போடுதல் - பிற்போடுதல்
15. இடித்துரைத்தல் - வற்புறுத்திக் கூறுதல்
16. இந்திரஜாலம் - ஏமாற்று வித்தை
17. இரண்டகஞ் செய்தல் - நம்பிக்கைத் துரோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. இனிப்புக் காட்டுதல் - ஆசை உண்டாக்குதல்
19. ஈரல் கருகுதல் - வேதனை மிகுதல்
20. உச்சி குளிர்தல் - மகிழ்தல்
21. உப்பில்லாப் பேச்சு - பயனற்ற பேச்சு
22. உருத்திராட்சப் பூனை - பாசாங்கு செய்பவன்
23. எடுப்பார் கைப்பிள்ளை - யாருக்கும் வசப்படக் கூடியவன்
24. எழுத்தெண்ணிப்படித்தல் - ஒன்றும் விடாது கற்றல்
25. ஏட்டுச் சுரைக்காய் - வாழ்க்கையோடு தொடர்பில்லாத கல்வி
26. ஒருகை பார்த்தல் - வெற்றி பெற முயல்தல்
27. ஒற்றைக் காலில் நிற்றல் - விடாப்பிடியாய் இருத்தல்
28. ஓடெடுத்தல் - பிச்சையெடுத்தல்
29. ஓட்டை வாயன் - இரகசியத்தை வெளிப்படுத்துபவன்
30. கங்கணங் கட்டுதல் - தீவிரமாய் முனைந்து நிற்றல்
31. கசக்கிப் பிழிதல் - வருத்தி வேலை வாங்குதல்
32. கச்சை கட்டுதல் - செயலை முடிக்க முனைந்து நிற்றல்
33. கடன் கழித்தல் - மனமின்றி செய்தல்
34. கட்டுக்கதை - பொய்யான செய்தி
35. கண்ணயர்தல் - நித்திரை செய்தல்
36. கண்ணெடுத்துப் பார்த்தல் - கருணை காட்டல்
37. கண்ணோட்டம் - இரக்கம்
38. கண் திறத்தல் - அறிவு உண்டாதல்
39. கண் வளர்தல் - நித்திரை செய்தல்
40. கரி பூசுதல் - அவமானப்படுத்தல்
41. கரையேறுதல் - உய்வடைதல்
42. கழுத்தறுத்தல் - தீமை செய்தல்
43. கழுத்துக் கொடுத்தல் - துன்பத்தில் உதவுதல்
44. காதுகுத்தல் - ஏமாற்றல்
45. குட்டிச் சுவராதல் - கெட்டழிந்து போதல்
46. கை கழுவுதல் - தொடர்பை முற்றாக நீக்குதல்
47. கொள்ளி செருகுதல் - தீங்கு விளைவித்தல்
48. கை கொடுத்தல் - உதவுதல்
49. செவி சாய்த்தல் - கவனமாக கேட்டல்
50. செவியறிவுறுத்தல் - நல்லறிவு கூறுதல்

## பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள்

| | சொல் | பெயர் | வினை |
|---|---|---|---|
| 1. | அடி | பாதம் | அடித்தல் |
| 2. | அணி | ஆபரணம் | அலங்கரித்தல் |
| 3. | அணை | மெத்தை | தழுவு |
| 4. | அமர் | போர் | இரு |
| 5. | அரி | சிங்கம் | அரிதல், அரித்தல் |
| 6. | அரை | பாதி | அரைத்தல் (மா) |
| 7. | அலை | நீரலை | அலைதல் |
| 8. | அளை | புற்று | துளாவுதல் (நீர் அளைதல்) |
| 9. | ஆடி | மாதம் | அசைந்து |
| 10. | ஆடு | பிராணி | ஆடுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 11. ஆள் | நபர் | ஆட்சி செய் |
| 12. இசை | கீதம் | சம்மதி |
| 13. இரை | உணவு | ஒலியெழுப்பு |
| 14. உழை | மான் | சம்பாதி |
| 15. ஊர் | கிராமம் | ஊர்ந்து செல் |
| 16. இழை | ஆபரணம் | பின்னுதல் (பாய்) |
| 17. எரி | நெருப்பு | எரித்தல் |
| 18. ஏறு | ஆண்சிங்கம் | ஏறுதல் |
| 19. ஒளி | வெளிச்சம் | ஒளித்தல் |
| 20. கரை | ஓரம் | கரைதல் |
| 21. கலை | ஆண்மான் | துரத்து |
| 22. கிழி | பொன்முடிச்சு | கிழித்தல் |
| 23. குழை | தோடு | குழைத்தல் |
| 24. கூடு | கூண்டு | ஒன்று சேரு |
| 25. கேள் | சுற்றம் | கேட்டல் |
| 26. திரி | மூன்று/விளக்குத்திரி | அலைந்து திரிதல் |
| 27. தை | மாதம் | தைத்தல் |
| 28. துணி | சேலை | துணிதல் |
| 29. நாண் | கயிறு | வெட்கப்படு |
| 30. படி | படிக்கட்டு | கற்றல் |
| 31. பறி | மீன்கூடை | பறித்தல் |
| 32. பதி | தலைவன் | பதியம் வைத்தல் |
| 33. பார் | பூமி | பார்த்தல் |
| 34. பிடி | பெண்யானை | பிடித்தல் |
| 35. பொறி | கருவி | பொறித்தல் (கல்லில்) |
| 36. மதி | சந்திரன் | மதித்தல் |
| 37. வரை | மலை | கீறுதல் |
| 38. வலி | வலிமை | வலித்தல்(நோ) |
| 39. வளை | புற்று / சங்கு | வளைத்தல் |
| 40. பிணை | பெண்மான் | சேர்த்துக்கட்டு |

T/Vipulananda College SCHOOL LIBRARY RESOURCE CENTRE TRINCOMALEE

## உவமைத் தொடர்

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல - பகைவரையும் பொறுத்தல்
2. அத்தி பூத்தாற் போல - மிக அரிது
3. அம்பு பட்ட மான் போல - துன்பம்
4. அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவை போல - துன்பத்தில் விட்டுப்பிரியும் நட்பு
5. அனலிடைப்பட்ட மெழுகு போல - மிக்க துன்பம்
6. அன்றிலும் பெடையும் போல - இணை பிரியாமை
7. ஆகாயக் கோட்டை கட்டியது போல - வீண் கற்பனை
8. ஆண்டிகள் கூடி மடம் கட்டியது போல - நிறைவேறாத திட்டம்
9. ஆப்பிழுத்த குரங்கு போல - தனக்குத் தானே துன்பம் தேடல்
10. ஆலை வாய்ப்பட்ட கரும்பு போல - மீளாத்துன்பம்
11. ஆற்றில் கரைத்த புளி போல - பயனற்ற செலவு
12. இடியோசை கேட்ட நாகம் போல - கலக்கம்
13. இரண்டு தோணியில் கால் வைத்தது போல - இரண்டும் கெட்டான் நிலை
14. இலவு காத்த கிளி போல - காத்திருந்து ஏமாறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இலை மறை காய் போல - வெளித் தோன்றாதிருத்தல்
16. இனம் பிரிந்த மான் போல - துன்பம்
17. உடுக்கை இழந்தவன் கைபோல - தாமே முன் வந்து உதவுதல்
18. உமி குற்றி கை சலித்தாற் போல - பயனற்ற முயற்சி
19. உருத்திராட்ச பூனை போல - வெளி வேடம்
20. உள்ளங்கை நெல்லிக்கனி போல - தெட்டத் தெளிவு
21. ஊமை கண்ட கனவு போல - வெளியிட முடியாத நிலை
22. ஊருணி நீர் நிறைந்தாற் போல - எல்லோருக்கும் பயன்படுதல்
23. எடுப்பார் கைப்பிள்ளை போல - சுயநிலை அற்றிருத்தல்
24. எட்டாப்பழத்திற்கு கொட்டாவி விட்டது போல - கிடைக்க முடியாததற்கு ஆசைப்படல்
25. எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல - துன்பத்தின் மேல் துன்பம்
26. எலியும் பூனையும் போல - பகை
27. ஏட்டுச் சுரக்காய் போல - அனுபவமற்ற அறிவின் பயன்
28. ஒளியைக் கண்ட இருள் போல - விலகுதல்
29. ஓடும் புளியம்பழமும் போல - ஒட்டியும் ஒட்டாமலும்
30. கடன்பட்டார் நெஞ்சம் போல - மனக்கலக்கம்
31. கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வது போல – காலங் கடந்த ஞானம்
32. கண்ணை இமை காப்பது போல - பேணிக்காத்தல்
33. கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல - திக்குத் திசை தெரியாது தடுமாறல்
34. கலங்கரை விளக்குப் போல - வழிகாட்டல்
35. கல்லில் நாருரிப்பது போல - வீண் முயற்சி
36. கல் மேல் எழுத்துப் போல - நிலைத்திருத்தல்
37. காட்டாற்று வெள்ளம் போல - தடுக்க முடியாத அனர்த்தம்
38. கிணற்றுத் தவளை போல - வெளியுலகம் தெரியாதிருத்தல்
39. கீரியும் பாம்பும் போல - தீராப்பகை
40. குரங்கின் கைப் பூமாலை போல - பொருளறியா மடமை
41. குன்றின் மேலிட்ட விளக்கு போல - எல்லோருக்கும் பயன்
42. சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல - நடுவு நிலைமை
43. சித்திரப் பதுமை போல - செயலற்ற நிலை
44. சூரியனைக் கண்ட தாமரை போல - மலர்ச்சி
45. செவிடன் காதில் ஊதிய சங்கு போல - பயனற்றது
46. தூண்டிலில் அகப்பட்ட மீன் போல - மீளாத்துன்பம்
47. நகமும் சதையும் போல - ஒற்றுமை
48. நீர் மேற் குமிழி போல - நிலையில்லாத் தன்மை
49. பசுமரத்தாணி போல - இலகுவாக விளங்குதல்
50. மதில் மேல் பூனை போல - முடிவெடுக்க முடியாத நிலை

## பழமொழிகளும் அதன் பொருளும்

1. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது - ஒன்றின் முக்கியத்துவம்
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - ஒற்றுமையே பலம்
3. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - விடாமுயற்சி வெற்றி தரும்
4. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது- காலங் கடந்த முயற்சியின் பயனின்மை
5. அலை மோதும் போதே தலை முழுகு - சந்தர்ப்பத்தை தவற விடாதே
6. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு - எதையும் அளவோடு செய்தல் வேண்டும்
7. ஆடமாட்டாதவன் கூடல் கோணலென்றாளாம் - விடயப் புலமையின்றி வேறொன்றின் மேல் பழி போடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆறின கஞ்சி பழங் கஞ்சி - எக்காரியத்தையும் பிற்போடக் கூடாது
9. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு - எதையும் அளவோடு செய்தல் வேண்டும்
10. ஆனைக்கும் அடி சறுக்கும் - பெரியோரும் தவறலாம்
11. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை - திருப்தியற்ற மனம்
12. இரக்கப் போனாலும் சிறக்கப் போ - வறுமையிலும் செம்மை
13. இட்டுக் கெட்டார் எங்குமில்லை - தருமத்தின் உயர்வு
14. உடையவன் பாரா வேலை ஒரு முழம் கட்டை- உரியவரால் செய்யப்படாத கருமம் கெடும்
15. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? - இயற்கைக் குணத்தை மாற்ற முடியாது.
16. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு - வீண் பெருமை
17. எய்தவன் இருக்க அம்பை நோவானேன் - காரியத்தை விடுத்து காரணத்தை நோதல்
18. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள் ஒக்கும் - ஏழ்மையின் வலிமை
19. ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா- காலம் நில்லாது
20. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா - இயற்கை குணத்தை மாற்ற முடியாது
21. கரும்பு தின்ன கைக்கூலி - நல்லதை எவரும் விரும்புவர்
22. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் - சந்தர்ப்பத்தை தவற விடக் கூடாது
23. காகம் திட்டி மாடு சாகாது - வீண் பழிக்கு அஞ்சேல்
24. குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது- நற்புகழ் எப்போதும் மங்காது
25. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை - பேராசை
26. கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு - உண்மையான புகழ் மங்காது
27. கொல்லர் தெருவில் ஊசி விற்கலாமா? - இடமறியா மடைமை
28. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும் - எதையும் சிறிது என அலட்சியம் செய்யாதே
29. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது - அனுபவம் ஆபத்து வராது காக்கும்
30. நிறைகுடம் தளம்பாது - அறிவின் அடக்கம்
31. பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது - அனுபவமில்லா அறிவு பயனற்றது
32. பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும் - உள்ளீடான அறிவு இருந்தால் மட்டுமே வெளிப்படும்.
33. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து - திருப்தியே சிறந்த செல்வம்
34. மனம் கொண்டது மாளிகை - மனத்திருப்தி
35. மதியாதார் வாசல் மிதியாதே - மானம் பேண்
36. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் - விருந்தோம்பலின் சிறப்பு
37. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? - தகுதிக்கு மீறிய ஆசை
38. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் - பெரியோர் வாக்கின் பெறுமதி
39. வெளுத்ததெல்லாம் பால் அல்ல - வெளித் தோற்றம் கண்டு மயங்கேல்
40. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை - தூய்மை மாசற்றது
41. வேலைக் கள்ளிக்கு பிள்ளைச் சாட்டு - போலி நியாயம்
42. வேலிக்கு வைத்த முள் காலிலே தைத்தது - பாதுகாப்பே தீமையில் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசைச் சொற்கள்

**போர்த்துக்கேய மொழிச் சொற்கள்**

அச்சாறு
அலவாங்கு
அலுமாரி
அன்னாசி
ஆசுபத்திரி
இலேஞ்சி
இறாத்தல்
ஏலம் (*Auction*)
சப்பாத்து
சிப்பாய்
சீமேந்து
துப்பாக்கி
துருப்பு
பட்டாளம்
பீங்கான்
மேசை
கடுதாசி
விறாந்தை
கதிரை
வாங்கு (Bench)

**ஒல்லாந்த மொழிச் சொல்**

இலாச்சி
சாக்கு
நொத்தாரிசு
கந்தோர்
துட்டு

**பிரான்சிய மொழிச் சொல்**

குசினி
பட்டாளம்
துருப்பு
பீரோ

**ஆங்கில மொழிச் சொல்**

இஞ்சினியர்
ஏக்கர்
கலண்டர்
பென்சில்
மோட்டார்
சீமேந்து
சினிமா
றப்பர்
பெற்றோல்
பிஸ்கட்

**அரபுமொழி**

சைத்தான்
கலிமா (நம்பிக்கை)
மசூதி
உருது (சேனை)
இலாகா
வசூல்

**கிரேக்க மொழிச் சொற்கள்**

ஓரை (நேரம்)
சுருங்கை
கன்னல் (கடிகாரம்)
யவனர்

**தெலுங்குமொழிச் சொற்கள்**

இடாப்பு
ரவிக்கை
ராணுவம்
இலஞ்சம்
ஒயில் (அலங்காரம்)
கொலுசு
சந்தடி
வாடிக்கை
ஏராளம்
கம்மல்
கொலு
துரை
பந்தயம்
வாடகை
விருது
பராக்கு

**மராட்டி மொழி**

குண்டான்
பட்டாணி
அட்டவணை
சாம்பார்
பேட்டை
லாந்தர்

**பாரசீக மொழிச் சொற்கள்**

திவான்
மைதானம்
ஜமுக்காளம்
சால்வை
மேஸ்திரி
லுங்கி
சர்க்கார்
சிப்பந்தி
ரசீது
சபா
பஜார்
சுமார்

**உருது மொழிச் சொற்கள்**

அண்டா
கசாப்பு
பேட்டா
கச்சேரி
சந்தா
ரத்து
ராட்டினம்
ராஜினாமா
ஊதுவத்தி

**பாளி மொழி**

வேதிகை (மேடை)
விகாரை
சீலம்
பீடிகை (ஆசனம்)
ஆணை
சதுக்கம் (நாற்சந்தி)
தூபி (கோபுரம்)
போதி (அரசமரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புணர்ச்சி

- ❖ சொற்கள் ஒன்றுடன் ஒன்று சேர்தல் புணர்ச்சி எனப்படும். முன்னிற்கும் சொல் நிலைமொழி. அதனோடு சேரும் சொல் வருமொழி
- ❖ இது இரு வகைப்படும்.
  1. இயல்பு புணர்ச்சி
  2. விகாரப் புணர்ச்சி

### ❖ இயல்பு புணர்ச்சி

- நிலைமொழியோடு வருமொழி சேர்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது புணரும் சொற்களாம்.

(உ+ம்): நெல் + வயல் = நெல் வயல்     மா + மரம் = மாமரம்
மணி + மாலை = மணிமாலை     தேன் + மொழி = தேன்மொழி
சிறுவன் +வந்தான் =சிறுவன் வந்தான்     கண் +விழித்தான் = கண்விழித்தான்

- வருமொழி உயிரெழுத்துடன் நிலைமொழி மெய்யெழுத்து இயல்பாக சேர்ந்தாலும் அதுவும் இயல்புப் புணர்ச்சி ஆகும்.

நிலைமொழி வருமொழி

(உ+ம்) ப (ல்)+(உ) டைந்தது = பல்லுடைந்தது
ல் +(உ) உயிர்

நிலைமொழி
புய(ல்)+(ஓ) சை
ல் + ஓ = லோ
கடல் + அலை = கடலலை
ல் + அ     ல
வாள் + எடுத்தான் = வாளெடுத்தான்
தமிழ் + இசை = தமிழிசை

### ❖ விகாரப் புணர்ச்சி

- நிலைமொழி இறுதி எழுத்தும் வருமொழி முதல் எழுத்தும் மாற்றத்துக்குள்ளானால் அது விகாரப் புணர்ச்சி எனலாம்.
- இது மூன்று வகைப்படும்
  1. தோன்றல் - வாழை + பழம் = வாழைப்பழம்
  2. திரிதல் - பொன் + தாமரை = பொற்றாமரை
  3. கெடுதல் - வாரம் + நாட்கள் = வார நாட்கள்

**புணர்ச்சியை மேலும் இருவகையாக நோக்கலாம்.**

1. வேற்றுமைப் புணர்ச்சி
2. அல்வழிப் புணர்ச்சி

### ❖ வேற்றுமைப் புணர்ச்சி

ஒரு சொல்லை மற்றொரு சொல் தொடர்ந்து வரும்போது அது வேற்றுமைப் பொருளை உணர்த்தும் வகையில் அமைவது வேற்றுமைப் புணர்ச்சி ஆகும். **(2ம் வேற்றுமை – 7ம் வேற்றுமை)**

(உ+ம்) மரம் + ஐ = மரத்தை     கண் + பார்த்தான் = கண்ணைப் பார்த்தான்
தசரதன் +ஆல் = தசரதனால்     கூலி +வேலை = கூலிக்கு வேலை
வீடு + கு = வீட்டுக்கு     சோறு + உண்டான் = சோற்றை உண்டான்
மலை + இன் = மலையின்
அவன் +அது = அவனது
நாடு + இல் = நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அல்வழிப் புணர்ச்சி**

ஆறு வேற்றுமைப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களை உணர்த்தி வருவதாகும்.

(உ+ம்) வட்டம் + வடிவம் = வட்டவடிவம்

சுடு + சோறு = சுடுசோறு

இரவு + பகல் = இராப்பகல்

மழை + கை = மழைக்கை

❖ **எண்ணுப் பெயர்கள் புணர்தலுக்கு உதாரணங்கள்**

1) ஒன்று + அம்பு = ஓரம்பு
2) ஒன்று + காய் = ஒரு காய்
3) இரண்டு +ஆடை = ஈராடை
4) இரண்டு + கால் = இருகால்
5) இரண்டு + பத்து = இருபது
6) மூன்று + இலை = மூவிலை
7) மூன்று + நாள் = முந்நாள்
8) மூன்று + மலர் = மும்மலர்
9) நான்கு + ஆள் = நாலாள்
10) நான்கு + குலம் = நாற்குலம்
11) நான்கு + பத்து = நாற்பது
12) ஐந்து + வகை = ஐவகை
13) ஆறு + படை = அறுபடை
14) ஆறு + சுவை = அறுசுவை
15) ஏழு + கடல் = ஏழ்கடல்
16) எட்டு + திசை = எண்டிசை

❖ **பயிற்சிகள்**

பின்வருவன எவ்வகைப் புணர்ச்சி என எடுத்துக்காட்டுக.

1) பலா + பழம் =
2) கால் + சங்கிலி =
3) மரம் + வேர் =
4) குளம் + கரை =
5) பனை + காய் =
6) வாழை +இலை =
7) கண் + இமை =

## உடனிலை மெய் மயக்கம், வேற்றுநிலை மெய் மயக்கம்

❖ சொற்களின் இடையில் க், ச், த், ப் ஆகிய நான்கு மெய்யெழுத்துக்களும் தம்மோடு தாம் மட்டும் சேர்ந்து (மயங்கி) வரும். இவ்வாறு தம்மோடு தாம் மயங்குவது உடனிலை மெய்மயக்கம் எனலாம்.

க் - மக்கள், பக்கம், சிக்கல்
ச் - பச்சை, மச்சம், அச்சம்
த் - சத்தம், முத்து, அத்தம்
ப் - அப்பம், தப்பு, எப்படி

❖ ர், ழ் ஆகிய இரு மெய்களும் தம்மோடு தாம் சேர்ந்து வருவதில்லை. இவை பிற மெய்களோடு சேர்ந்து வரும். இதனை வேற்றுநிலை மெய்மயக்கம் எனலாம்.

ர் - அவர்கள், கூர்ப்பு, பார்வை
ழ் - வாழ்க்கை, பாழ்ங்கிணறு, தாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ க், ச், த், ப், ர், ழ் என்ற மேற்கூறப்பட்ட மெய்யெழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய மெய்யெழுத்துக் களும் உடனிலையிலும் வேற்று நிலையிலும் மயங்கி வரும்.

| **உடனிலை மெய்மயக்கம்** | | **வேற்றுநிலை மெய்மயக்கம்** |
|---|---|---|
| ங் | - அங்ஙனம் | வேங்கை, தங்கு |
| ஞ் | - அஞ்ஞானம் | பஞ்சம், மஞ்சு |
| ட் | - தட்டம் | வெட்கம், பட்சம் |
| ண் | - வண்ணம் | வெண்கலம், பண்பாடு |
| ந் | - முந்நூறு | பந்தம், வெந்தயம் |
| ம் | - தும்மல் | தும்பு, ஆம்பல் |
| ய் | - கொய்யா | பொய்கை, ஆய்வு |
| ல் | - பல்லவன் | செல்வம், கல்யாணம் |
| வ் | - தெவ்வர் | - |
| ள் | - வெள்ளம் | கேள்வி, கொள்கலன் |
| ற் | - தூற்றல் | வெற்றி, பயிற்சி |
| ன் | - அன்னம் | இன்பம், மன்றம் |

## வழுக்கள்

❖ **பின்வரும் வாக்கியங்களில் உள்ள வழுக்கள் நீக்கப்பட்டு எவ்வாறு எழுதப்பட்டுள்ளது என அவதானிக்குக.**

1. ஒவ்வொரு பூக்களும் அழகானவை.
   - ஒவ்வொரு பூவும் அழகான**து**.

2. **ஐந்து மாணவர்கள்** கலந்து கொண்டனர்.
   - **மாணவர்கள் ஐவர்** கலந்து கொண்டனர்.

3. தனது நாயுடன் தம்பி நடந்து சென்ற**து**.
   - தனது நாயுடன் தம்பி நடந்து சென்**றான்.**

4. நானும் தம்பியும் கடற்கரைக்குச் சென்**றேன்.**
   - நானும் தம்பியும் கடற்கரைக்குச் சென்**றோம்.**

5. குயில் இனிமையாக **கூவின.**
   - குயில் இனிமையாகக் **கூவியது**.

6. **கூவின** பூங்குயில், **கூவின** கோழி.
   - **கூவியது** பூங்குயில் **கூவியது** கோழி.

7. சிங்கத்தின் இளையது **குஞ்சு.**
   - சிங்கத்தின் இளையது **குருளை.**

8. எதிர்வரும் நாட்களில் இடியுடன் கூடிய மழை பெய்**தது.**
   - எதிர்வரும் நாட்களில் இடியுடன் கூடிய மழை பெய்**யும்.**

9. **சில மனிதர்**கள் மகிழ்ச்சியாக இருந்தனர்.
   - **மனிதர்கள் சிலர்** மகிழ்ச்சியாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அங்கே **தெரிவது** எனது தம்பியா? மரமா?
   - அங்கே **தெரியும் உரு** எனது தம்பியா அல்லது மரமா?

11. பேராசிரியர் மேடையில் சொற்பொழிவை **பேசினார்.**
   - பேராசிரியர் மேடையில் சொற்பொழிவு **ஆற்றினார்.**

12. தீபாவளி தினத்தில் **எண்ணை** வைத்துக் குளித்தோம்.
   - தீபாவளி தினத்தில் **எண்ணெய்** வைத்துக் குளித்தோம்.

13. **கட்டட** நிர்மாணப் பணிகள் அனைத்தும் முழுமை பெற்றன.
   - **கட்டிட** நிர்மாணப் பணிகள் அனைத்தும் முழுமை பெற்றன.

14. மாணவர்கள் அனைவரும் **சமூகம்** அளித்திருந்தனர்.
   - மாணவர்கள் அனைவரும் **சமுகம்** அளித்திருந்தனர்.

15. மாடமாளிகைகள் வானளாவ உயர்ந்து வான் மேகங்களைத் தொட்ட**து.**
   - மாடமாளிகைகள் வானளாவ உயர்ந்து வான் மேகங்களைத் தொட்ட**ன.**

❖ **பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றை இனங் காண்க.**

1. நேற்று பெய்த மழையில் வெள்ளம் கரை புரண்டோடியது.
   எழுவாய் - வெள்ளம்
   செயப்படுபொருள் - -
   பயனிலை - கரை புரண்டோடியது.

2. நோயாளியான பின் அவர் வாழ்க்கை கட்டிலோடு கழிகிறது.
   எழுவாய் - வாழ்க்கை
   பயனிலை - கழிகிறது.

3. ஆசிரியர் இடம் மாற்றம்பெற்று ஊரோடு சென்றுவிட்டார்.
   எழுவாய் - ஆசிரியர்
   பயனிலை - சென்றுவிட்டார்.

4. எத்தனை நாட்களுக்கு இங்கு இருப்பீர்கள்.
   எழுவாய் - நீங்கள் (தோன்றா எழுவாய்)
   பயனிலை - இருப்பீர்கள்.

5. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பாட்டுக்கள் யாவும் இனிமையானவை.
   எழுவாய் - பாட்டுக்கள்
   பயனிலை - இனிமையானவை.

6. நளன் வேகமாக குதிரைகளைப் பூட்டு என்றான்.
   எழுவாய் - நளன்
   செயப்படுபொருள் - குதிரைகள்
   பயனிலை - (பூட்டு) என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாரதி எளிமையான சந்தங்களைக் கையாண்டான்.
   எழுவாய் - பாரதி
   செயப்படுபொருள் - சந்தங்கள்
   பயனிலை - கையாண்டான்.

8. இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
   எழுவாய் - குற்றம்
   பயனிலை - தெரியாது.

9. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
   எழுவாய் - வெள்ளம்
   பயனிலை - வராது.

10. பிள்ளைகள் வீட்டுணவை விட விரைவுணவை அதிகம் விரும்புகிறார்கள்.
   எழுவாய் - பிள்ளைகள்
   செயப்படுபொருள் - விரைவுணவு
   பயனிலை - விரும்புகிறார்கள்.

## ❖ பயிற்சிகள்

01) வழு நீக்கி மீண்டும் எழுதுக.

1. பூக்கள் அழகாகப் பூத்திருந்தது.
   ........................................................................................................
2. வீட்டின் வெளியே தோட்டங்கள் உள்ளது.
   ........................................................................................................
3. என்னோடு அவனும் கதைத்தோம்.
   ........................................................................................................
4. பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்தது.
   ........................................................................................................
5. நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கின்றீர்கள்.
   ........................................................................................................

02) எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை இனங்கண்டு எழுதுக.

1. காலைக் கதிரவன் கிழக்கில் உதித்தது.
   ........................................................................................................
2. இரண்டு பூனைகள் மரத்தில் ஏறித் தாவின.
   ........................................................................................................
3. உழவன் ஏரைப்பூட்டி வயலை உழுதான்.
   ........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாரதியார் இனிமையான கவிதைகளைப் பாடினார்.

.........................................................................................................................

5. ஆசிரியர் சிறப்பான சொற்பொழிவு ஆற்றினார்.

.........................................................................................................................

03) பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.

1. நான் உங்கள **மதிக்கல.**

.........................................................................................................................

2. அவர் எனக்கு கொழும்பில் **அம்பிட்டார்.**

.........................................................................................................................

3. நான் அவன் நிலையைப் பார்த்து **மேல போய்ட்டேன்.**

.........................................................................................................................

4. நீ அங்க இருந்து **கொரடாம** இங்கே வா.

.........................................................................................................................

04) பின்வரும் பேச்சு வழக்கில் அமைந்த வாக்கியங்களை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.

1. நான் இப்பவே சொல்லிப்போட்டன். கடைசியில் போறது நான்தான்.

.........................................................................................................................

2. மம்பட்டிய வச்சிட்டு இங்க வந்து தேத்தண்ணிய குடி.

.........................................................................................................................

3. புட்டு அவிச்சாச்சடா மோனே. போய் மூஞ்சியை கழுவிற்று வா.

.........................................................................................................................

4. ஆளுகக்கிட்ட காசில்லாததால் யாவாரமெல்லாம் விழுந்திட்டுது.

.........................................................................................................................

5. முள்ளுக்குத்தும் என் ராசா ஓம் முழியிரண்டும் என் மேல.

.........................................................................................................................

6. ஞாபகமிரிக்காடா மனே? அண்டெய்க்கு உன்ட வாப்பால்லாம் வாயெப் பொத்திட்டாங்க.

.........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் - 10** **வரலாறு**

## இலங்கையின் குடியேற்றங்கள்

01) இலங்கையின் மானிட வரலாற்றுக் கால கட்டங்கள்
1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
2. முன் வரலாற்றுக் காலம்
3. வரலாற்றுக் காலம்

02) இலங்கையில் கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள்
1. அரை வறள் வலயம்
2. தாழ்நில உலர் வலயம்
3. தாழ்நில இடை உலர் வலயம்
4. வறள் வலயம்
5. மலைநாட்டு இடை உலர் வலயம்
6. ஈர வலயம்

03) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய ஆதாரங்கள் கிடைத்துள்ள இரு இடங்கள்
1. இரத்தினபுரியும் அதன் அயற் சூழல் பிரதேசங்களும்
2. இரணைமடுப் படிவுகள்

04) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் சடங்கு, சம்பிரதாயங்கள்
1. மரணித்தவரின் சடலத்தை அது உக்கிப் போகும் வரை எடுத்தல்
2. சடலத்தின் எலும்புக் கூட்டை தோண்டி எடுத்தல்.
3. மண்டை ஓட்டுப் பகுதிக்கு செந்நிறக் கற்களால் நிறம் தீட்டல்.

05) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்ததாக கண்டறியப்பட்டுள்ள இடங்கள்
1. தாழ்நில மழைக்காடுகள்
2. வில்லுபுல் நிலம்
3. கரையோர களப்பு
4. மலைநாட்டு புல் நிலம்
5. உலர் வலயக் காடுகள்

06) முன் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மனிதன் தொழிநுட்பத்தைப் பயன்படுத்திய முறைகள்
1. உலோக தொழிநுட்பம்
2. மட்பாண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிநுட்பம்
3. வீடு கட்டும் தொழிநுட்பம்
4. மயானங்களை அமைக்கும் தொழிநுட்பம்
5. ஆபரணங்கள் செய்யும் தொழிநுட்பம்

07) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய மனிதன் வாழ்ந்த பின்வரும் கற்குகைகள் மற்றும்கரையோர வெட்டவெளிகள் காணப்படும் மாவட்டங்கள்
1. பாகியன்கல - களுத்துறை
2. பெல்லன்பதி பெலஸ்ஸ - இரத்தினபுரி
3. பூந்தல - அம்பாந்தோட்டை
4. சிகீரிய பொத்தான - மாத்தளை

08) முன் வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் தன்மை
1. நிலையான வீடுகளை அமைத்தமை.
2. வீட்டின் சுவர் களிமண்ணால் கட்டப்பட்டிருந்தமை.
3. கூரை இலுக்குப் புல்லால் வேயப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) முன் வரலாற்றுக்கால மரண சடங்கு முறையின் இயல்புகள்
1. அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம்
2. பரணி மயானங்கள்
3. களிமண் ஓட மயானம்

10) முன் வரலாற்றுக்காலம் உருவாகியமைக்கான காரணங்கள்
1. காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் 2. சனத்தொகை அதிகரிப்பு

11) வெவ்வேறு தொழில்களையும் செயல்களையும் அடிப்படையாகக்கொண்டு வாழ்ந்த கிராமங்கள்
1. கசீகார காம - விவசாயிகள் வாழ்ந்த கிராமம்
2. மணிகார காம - இரத்தினம் அகழ்வோர் வாழ்ந்த கிராமம்
3. கோபால காம - இடையர் வாழ்ந்த கிராமம்
4. கேவட்ட காம - மீனவர் வாழ்ந்த கிராமம்
5. கும்பகார காம - குயவர் வாழ்ந்த கிராமம்
6. வட்டகீ காம - தச்சர் வாழ்ந்த கிராமம்

12) முன் வரலாற்றுக் காலத்தில் அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானங்கள்
1. இப்பன் கட்டுவ மெகாலிதிக் மயானம்
2. ஹல்சொகன் மயானம்
3. யட்டிகல் பொத்த மயானம்

13) ஊவா மாகாணத்தில் முன் வரலாற்றுக் காலத்திற்குரிய அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட இரு மயானங்கள்,
1. ஹல்துமுல்ல
2. பெரகல

14) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கை முறை,
1. வேட்டையாடல்
2. அலைந்து திரிந்து உணவு சேகரித்தல்
3. நாடோடி வாழ்க்கை முறை
4. சிறு குழுக்களாக வாழ்ந்தனர்

15) வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பல் செல்வாக்கு செலுத்திய பிரதான காரணிகள்,
1. வருடாந்த மழை வீழ்ச்சியின் அளவு
2. மண்ணின் தன்மை
3. தரைத் தோற்ற வேறுபாடு
4. இயற்கை வளங்களின் தன்மை
5. நீரோடைகள்

16) மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் குளக் குடியேற்றக் கிராமங்கள்,
1. சுமண வாபிகாம
2. விஹார வாபிகாம
3. ஹீந்தரி வாபிகாம
4. கடஹ வாபிகாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) ஆரம்ப வரலாற்றுக் காலத்தின் குடியிருப்புகளின் இல்புகள்,
   1. சிறு குளங்களை மையமாகக் கொண்டு குடியிருப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டமை
   2. கிராமங்கள் எல்லைப்படுத்தப்பட்டமை
   3. நகர குடியிருப்புக்களின் தோற்றம்
   4. கமிக கிராமத்தின் தலைவர்

18) காரண காரியங்களின் அடிப்படையில் செயற்பட்ட கிராம வகைகள்,
   1. பட்டாண காம - துறைமுகத்தைக் கொண்ட கிராமம்
   2. நியகமம் - வர்த்தக கிராமம்
   3. ஓலகம் - மக்களால் கைவிடப்பட்ட குளக்கிராமம்

19) பின்வருவனவற்றின் பதங்கள்,
   1. வேலியிட்டுப் பாதுகாக்கப்பட்ட கிராமங்கள் - பரிகித்தகம
   2. வேலியிட்டுப் பாதுகாக்கப்படாத கிராமம் - அபரிகித்தகம
   3. பெரிய நகரத் தோற்றம் - புரம்
   4. குளத்தை அடிப்படையாகக் கொண்ட குடியேற்றம் - வாபிகாம

20) கிரிந்தி ஓயாவிற்கு அண்மையில் காணப்படும் குளங்கள்,
   1. வீரவில குளம்
   2. திஸ்ஸ வாவி
   3. யோத கண்டி குளம்

## இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி

01) பண்டைய இலங்கையில் இல்லத் தலைவன் வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதம்
   1. கிருகபதி 2. கஹபதி 3. குர்ஹபதி

02) கிராமத்து இல்லத் தலைவர்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவரே கமிக எனக் குறிப்பிடும் நூல் எது? அதனை எழுதியவர்,
   நூல் - சமந்த பாசாதிகா
   எழுதியவர் - புத்தகோச தேரர்

03) கிராமத் தலைவனான கமிகவினால் ஆற்றப்பட்ட பணிகள்
   1. கிராமப் பொது நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்குதல்
   2. கிராமக் குளங்களை நிருவகித்தல்
   3. குளங்களில் இருந்து நீரை விநியோகித்தல்
   4. கிராமத்தவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்

04) புராதன இலங்கையின் உலர்வலயப் பகுதியில் குளத்தொகுதிகள் உருவாக்கப்பட்டமைக்கான காரணங்கள்
   1. மேட்டுப்பாங்கான நிலத்தில் அமைந்துள்ள குளத்தில் இருந்து வெளியேறும் நீரை தாழ்நிலப் பகுதியில் அமைந்துள்ள குளத்துக்கு வழங்குவதன் மூலம் நீரைப் பாதுகாத்தல்
   2. இரு குளங்களுக்கிடையில் எந்நேரமும் நீரைப் பாயவிடுவதன் மூலம் கால்வாய்களின் இரு பக்கங்களிலும் ஈரத்தன்மையைப் பாதுகாத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05) புராதன இலங்கையில் உலர் வலயத்தில் அமையப்பெற்ற குளத்தொகுதிகள் அழைக்கப்பட்ட விதம்

1. வெவ்பிரபாதயை
2. எல்லங்காவ

06) குளத்தொகுதி ஒன்றுக்கு பொறுப்பாக இருந்த பருமக என்பவரின் பணிகள்

1. குளத்தொகுதியை நிருவகித்தல்
2. குளத்தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரஜைகளின் நலனுக்காக தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.

07) அனுராதபுரத்தை ஆண்ட முதல் மன்னனான பண்டுகாபயன் சிறப்புக்குரியவனாய் அமைவதற்கான காரணங்கள்

1. தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அனுராதபுரத்தை தெரிவு செய்தமை.
2. பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன் சண்டையிட்டு அப்பிரதேசங்களைப் கைப்பற்றியமை.
3. தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் கிராமங்களுக்கு எல்லைகள் வகுத்தமை
4. கிராமியக் குளங்களை அமைத்தமை.

08) புனித வெள்ளரசு மரம் நடப்படும் வைபவத்திற்கு தேவநம்பிய தீஸ மன்னனால் அழைக்கப்பட்ட தலைவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதேசங்கள்

1. கதிர்காமம்
2. சந்தனகாமம்

09) பஞ்ச வஸ்துக்கள் எனப்படும் பட்டாபிஷேகப் பொருட்கள் ஐந்தும்

1. ஆலவட்டம்
2. சாமரை
3. பாதணிகள்
4. மங்களவாள்
5. நெற்றிப்பட்டம்

10) இலங்கையில் பௌத்த சமயத்தை அறிமுகப்படுத்தியவர், அப்போதைய மன்னர்
மஹிந்த தேரர், தேநம்பிய தீஸன்

11) துட்டகைமுனு மன்னனின் புகழ்பெற்ற தளபதிகள் நால்வரும்
வேலுசுமண, புஸ்ஸதேவ, தேரபுத்தாபய, நந்திமித்ர

12) புராதன இலங்கையில் நுருபுரம், நகதிவ எனும் பெயர்களால் அழைக்கப்பட்ட இடங்கள்

1. நுருபுரம் - அனுராதபுரம்
2. நகதிவ - யாழ் குடாநாடு

13) எமது நாட்டை ஆண்ட துட்டகைமுனு மிகச் சிறந்த ஆட்சியாளன் என்பதற்கான சான்றுகள்

1. இலங்கைத் தீவை ஒன்றுபடுத்திய முதல் மன்னன்
2. மாந்தை துறைமுகத்தை எல்லாளனிமிடமிருந்து மீட்டமை
3. யுத்த செயற்பாடுகளுக்கு தலைமைத்துவம் வழங்கியமை
4. பல சமயத் தலங்களை அமைத்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) நாட்டு மக்களுக்கு அரசன் ஆற்ற வேண்டிய கடமைகளாக காணப்பட்டவை
1. நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றுதல்
2. நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்
3. பிரஜைகளிடையே ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தல்.

15) பொது மக்களின் நம்பிக்கையைப்பெற்று எமது நாட்டை மிகச் சிறப்பாக ஆட்சிசெய்த அந்நிய நாட்டு மன்னர்கள்
1. எல்லாளன் - அனுராதபுரம்
2. நிஸங்கமல்ல மன்னன் - பொலனறுவை

16) பின்வரும் மன்னர்களின் சிறப்புப் பெயர்கள் முறையே
1. குட்டகண்ண அபயன் - நரேஸ்வர/நரஇசெர /மனிதர்களின் கடவுள்
2. மகாசேனன் - மின்னேரித் தெய்வம்
3. முதலாம் காசியப்பன் - குபேரக் கடவுள்/அலகபய மகாராஜா
4. நிஸங்க மல்ல மன்னன் - காலிங்க சக்கரவர்த்திப் பெருமான்

17) புராதன இலங்கையில் அரசுரிமை கிட்டிய முறைகள் ஆவன
1. சகோதரனிடம் இருந்து சகோதரனுக்கு
2. தந்தையிடம் இருந்து மகனுக்கு
3. அரசனின் மனைவியின் சகோதரனுக்கு
4. அரசனின் சகோதரியின் புதல்வனுக்கு

18) அரசாட்சியில் மன்னனுக்கு உதவிய அதிகாரிகளும் அவர்களின் சிறப்புப் பெயர்களும்
1. தலைமை அமைச்சர் - மகாஅமதி/மஹமத
2. அமைச்சர்கள் - அமெத
3. தளபதிகள் - சேனபதி
4. பொருளாளர் - படகரிக
5. உணவுச்சாலை அதிகாரி - பதரு

19) வசபன் இலங்கையை ஆண்ட மன்னர்களுள் மிகச் சிறந்த ஆட்சியாளன் என்பதற்கான சான்றுகள்
1. நாட்டை பல நிருவாக அலகுகளாகப் பிரித்து ஆட்சி செய்தமை.
2. அரசவரி அறவீட்டு முறையை அறிமுகப்படுத்தியமை.
3. முதன் முதலில் பாரிய குளங்களை அமைத்தமை.
4. சுரங்க நீர்ப்பாசன முறையை அறிமுகப்படுத்தியமை.
5. இலம்ப கர்ண வம்சத்தின் முதல் மன்னன்.

20) முதலாம் விஜயபாகு நட்புறவைப் பேணிய தென்னிந்திய அரசுகள்
கலிங்க அரசு, பாண்டிய அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டைய சமூகம் (அலகு – 04)

01) எந்தவொரு நாட்டினதும் நிருவாகத்தைக் கொண்டு நடாத்தும் மூன்று தாபனங்கள்
1. சட்டம்
2. நிருவாகம்
3. நீதி

02) வசப மன்னன் காலத்தில் நாகதீபவை நிருவகித்த அமைச்சரும் அங்கு அவரால் அமைக்கப்பட்ட விகாரையையும் முறையே

ரிஷிகிரி - பியங்குக திஸ்ஸ விகாரை

03) தேவநம்பிய தீஸ மன்னனின் பின்னர் அரசுரிமையைப் பெற்றுக் கொண்ட அவரது சகோதரர்கள்

1. உத்திய 2. மஹாசிவ 3. சூரதிஸ்ஸ 4. அசேல

04) பொதுமக்களுக்கு தேவையான பொது சுகாதார வசதிகளை வழங்கிய மன்னர்கள்
1. புத்ததாஸ
2. 5ம் மஹிந்தன்
3. 4ம் காசியப்பன்
4. 1ம் உபதிஸ்ஸன்
5. பண்டுகாபயன்
6. துட்டகைமுனு

05) பின்வரும் வைத்தியசாலைகளை அமைத்த மன்னர்கள்
1. உபசக்க ரோகநாச - 4ம் காசியப்பன்
2. பஸவந்தி நாமசால - 1ம் உபதிஸ்ஸன்
3. சொத்திசால - பண்டுகாபயன்

06) பின்வரும் மன்னர்கள் தொடர்புகளைக் கொண்டிருந்த நாடுகள்
1. 1ம் கஜபாகு - தென்னிந்திய சேர இராச்சியம்
2. பாதிகாபயன் - உரோமபுரி
3. 6ம் அக்ரபோதி - சீனா

07) பின்வரும் மூலாதாரங்களில் சேனைப் பயிர்ச்செய்கை அழைக்கப்பட்ட விதம்
1. புத்சரண - செஹென்
2. சிங்கள உம்மக்க ஜாதக - சேன
3. கல்வெட்டுக்கள் - பிடபிம்

08) சேனைப் பயிர்ச்செய்கையில் அறவிடப்பட்ட வரிகளும் அதனை நீக்கிய மன்னன்
1. கெதி அட, கெடுகனக - நிஸ்ஸங்க மல்ல மன்னன்

09) புராதன இலங்கையில் காணப்பட்ட கைத்தொழில்களையும் கல்வெட்டுக்களில் அத்தொழில்களில் ஈடுபட்டோர் அழைக்கப்பட்ட விதமும்
1. இரும்புக் கைத்தொழில் - கபர
2. தங்க கைத்தொழில் - துலாதார
3. இரத்தினக்கல் பட்டை தீட்டுதல் - மணிகர
4. தந்தச் செதுக்கல் - தடிக
5. மட்பாண்டக் கைத்தொழில் - கும்பகார / குபகர
6. நெசவுக் கைத்தொழில் - ததவய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) பண்டைய இலங்கையில் பிரசித்தி பெற்றிருந்த இரு நகரங்கள்
   - அனுராதபுரம், மாகமை

11) உள்நாட்டு வர்த்தகம் பற்றிக் குறிப்பிடும் மிக முக்கிய கல்வெட்டும் அதனை அமைத்த மன்னனும்
   1. ஹோபிடிகம தூண்கல்வெட்டு/சொர பொரவாவ தூண்கல்வெட்டு - 4ம் உதயன்

12) கி.பி 11 – 13 நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையில் செயற்பட்ட தென்னிந்திய வர்த்தக நிறுவனங்கள்
   1. நானாதேசி   2. வலஞ்சியார்   3. ஐந்நூற்றுவர்

13) அநுராதபுர நகருக்கு மேற்காகவும் கிழக்காகவும் அமைந்திருந்த இரு புராதன துறைமுகங்கள்
   1. மேற்கு - மாந்தை/மாதோட்ட   2. கிழக்கு - கோகண்ண

14) இலங்கைக்கு புனித தந்ததாதுவை கொண்டு வந்தவர்களும் அவர்கள் வந்திறங்கிய துறைமுகமும் முறையே
   1. ஹேமமாலா இளவரசி, தந்த இளவரசன் - லங்காபட்டினம் / இலங்கைத்துறை முகத்துவாரம்

15) பின்வரும் கலைகளைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள்
   1. யானையைப் பழக்குதல் - ஹஸ்தி ஆசார்ய
   2. குதிரையேற்றம் - அஸ்வ ஆசார்ய
   3. அம்பெய்யும் கலை - துனு ஆசார்ய

16) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய பௌத்த பிக்குகள்
   1. தலைமைப் பிக்குவுடன் வாழ்ந்த ஏனைய குருமார்கள் - அந்தேவாசிக பிக்குகள்
   2. தலைமைப் பிக்கு - தேரர்
   3. தலைமைப் பிக்குவை அண்டி வாழ்ந்த மாணவப் பிக்குகள் - சதிவிஹாரிய / சத்தி விவதாரிகா
   4. திரிபீடகத்தை பகுதிகளாக மனனம் செய்த பிக்குகள் - பாணக

17) புராதன அனுராதபுர காலத்தில் பௌத்த சமய மத்திய நிலையமாகவும் கல்வி நிலையமாகவும் செயற்பட்ட இரு விகாரைகள்
   1. மஹாவிகாரை   2. அபயகிரி விகாரை

18) புராதன இலங்கையில் வாழ்ந்த வெளிநாட்டவர்கள் கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ள முறை
   1. தென்னிந்திய தமிழர் - தமெட
   2. கிரேக்கம், மெஸிடோனியா - அயோனியன்கள்
   3. ஆப்கானிஸ்தான் - காம்போஜர்கள்
   4. மலாக்கா குடாநாடு - ஜாவர்கள்

19) கேரளாவில் இருந்து வந்த அஹம்படிச்சேனையினரின் உதவியைப் பெற்ற மன்னர்கள்
   1. இளநாகன்   2. அபயநாகன்   3. 1ம் விஜயபாகு

20) இராசரட்டை கால வரலாற்றைக் குறிப்பிடும் பாளிமொழி நூல்கள்
   1. தீபவம்சம்   2. அபிதானா பிரதீப்பிக்கா   3. சாரா பிரதீப்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழிநுட்பமும்

01) முன் வரலாற்றுக்கால மனிதன் களிமண் ஓட வடிவிலான கல்லறை மயனாங்களினை அமைக்கும் போது பயன்படுத்திய தொழிநுட்பங்கள்,

- பொருத்தமான களிமண்ணை தெரிவு செய்தல்.
- கல்லறையின் சுவரின் உயரத்தைக் குறைத்தல்.
- சுவரை நிலத்திற்கு செங்கோணமாக அமைத்தல்.
- கல்லறைச் சுவர்களின் சமநிலையைப் பேணுதல்.

02) முன் வரலாற்றுக்கால மனிதன் வீடமைக்கும்போது பின்பற்றிய தொழிநுட்பங்கள்,

- நிலத்தின்மேல் கருங்கல் பரப்பப்பட்டு அதன்மேல் களிமண் இட்டு வீட்டுத்தரை அமைக்கப் பட்டமை.
- வீட்டின் வரிச்சுச் சுவர்கள் களிமண் கொண்டு அமைக்கப்பட்டிருந்தமை.
- மரத்தால் அதன் கதவுநிலை பொருத்தப்பட்டிருந்தமை.
- கூரை, மானா, இலுக் புற்களினால் மேயப்பட்டிருந்தமை.

03) புராதன இலங்கையில் மட்பாண்டங்கள் தயாரிக்கும்போது பின்பற்றிய தொழிநுட்பங்கள்,

- களிமண்ணைத் தெரிவுசெய்தல்.
- அதனைப் பதனிடுதல்.
- சுடுவதற்கான சூளையை அமைத்தல்.
- வனைதல் சில்லைக்கொண்டு மட்பாண்டங்களை தயாரித்தல்.
- உரிய வெப்பநிலையில் பாத்திரங்களை சுட்டெடுத்தல்.
- உருவம் தீட்டுதல்.
- வர்ணமிடுதல்.

04) நீர் முகாமைத்துவம் எனப்படுவது,

- நீரைச் சேமித்து வைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் நீர் முகாமைத்துவம் எனப்படும்.
  (உ+ம்): குளம், பொய்கை, கால்வாய்

05) மகா வாவிகள் உருவாக்கப்பட்டமையின் நோக்கங்கள்,

- விவசாயத்தை வெற்றிகரமாக மேற்கொள்ளல்.
- வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்.
- நகரமக்களின் நீர்த்தேவையை நிறைவு செய்தல்.

06) இலங்கையில் அமைக்கப்பட்ட சில குளங்களும் அவற்றை அமைத்த மன்னர்களும்,

- கவுடுளுவாவி - மகாசேனன்
- மின்னேரியாக் குளம் - மகாசேனன்
- ஹுருளுவாவி - மகாசேனன்
- கலாவாவி - தாதுசேனன்
- பதவியாக்குளம் - 2ம் முகலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) குளம் ஒன்றின் பிரதான உறுப்புக்கள்,

- குளக்கட்டு
- அலைதாங்கி
- கலிங்கல் தொட்டி (பிசோகொட்டுவ)
- கலிங்கல்/மடைக்கதவு/ரஜமொஹால் (சொரொவ்வ)
- சுருங்கை/வான்கதவு (பிட்டவான)

08) குளம் ஒன்றின் பிரதான உறுப்புக்களின் அமைப்பும் பயன்பாடுகளும்,

| | குளத்தின் உறுப்பு | அமைப்பு | பயன்பாடு |
|---|---|---|---|
| 1. | குளக்கட்டு | ஆற்றுக்கு இரு பக்கமுள்ள எச்சக் குன்றுகளின் சுவடுகளை இணைக்கும் வகையில் இயற்கையான கற்பாறைகளை அத்திவாரமாகக் கொண்டு மண் படைகளை இட்டு அழுத்துவதன் மூலம் | தேவையான நீரைத் தேக்கி வைத்தல். |
| 2. | அலைதாங்கி | அணைக்கட்டின் உட்பகுதிச் சரிவில் தட்டையான கற்களை பதிப்பதன் மூலம் | அலைகளினால் ஏற்படும் அழுத்தத்தினால் குளக்கட்டு அரிப்புறுவதைத் தடுத்தல். |
| 3. | கலிங்கல் (உலர் கலிங்கல், தாழ் கலிங்கல்) | குளக்கட்டில் நீர் நிறைந்துள்ள பகுதியில் ஆரம்பித்து குளக்கட்டை துளைத்துச் செல்லும் வகையில் விசாலமான கற்பாறைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். | பாரிய குளங்களிலிருந்து விவசாயத்திற்குத் தேவையான நீரைத் திறந்து விடுதல். மழை காலத்தில் சேரும் சேற்றை வெளியேற்றுதல். |
| 4. | கலிங்கல் தொட்டி | செவ்வக/வட்ட வடிவில் கருங்கற்களால் ஒரு தொட்டி அல்லது கிணறு வடிவில் அமைக்கப்பட்டிருக்கும். | குளத்தில் நீர்மட்டம் மாற்றமடையும் வேளையில் அம்மட்டத்தில் நீரின் அமுக்கத்தை குறைத்து நீரைத் திறந்து விடுதல். |
| 5. | சுருங்கை | குளக்கட்டின் அந்தத்தில் குளக்கட்டை விட சற்றுப்பதிவாக கருங்கற் பாறைகளைக் கொண்டு படிவரிசை போன்ற அமைப்பில் அமைக்கப்பட்டிருக்கும். | மேலதிக நீரை வெளியேற்றுதல். |

09) எலஹரக் கால்வாய் மூலம் நீரைப் பெறும் குளங்கள்,

- மின்னேரி - கிரித்தலை - கவுடுளு - கந்தளாய்

10) இராசரட்டை காலத்தில் அமையப்பெற்ற பொய்கைகள்,

- குட்டம் பொய்கை - தாமரைப் பொய்கை
- யானைப் பொய்கை - குமாரப் பொய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) ஊராகெட கிணறுகளின் அமைப்பு முறை,
- குடிநீரின் குறிப்பிட்ட தரத்தைப் பேணிக் கொள்வதற்காக பெரிய மட்பாண்டங்கள் பலவற்றை கிணற்றுக்குள் புதைத்து கிணற்றின் சுவர் மூடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன.

12) சிகிரிய நீர்ப் பூங்காவில் பயன்படுத்தப்பட்டுள்ள தொழிநுட்பங்கள்,
- நான்கு நீர்ப்பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- நீர்ப் பூமரங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- 600 அடி உயரத்திலிருந்து வாய்க்கால் மூலம் ஓடிவரும் நீர் திடீரென தடுக்கப்படல்.
- அவ்விடத்தில் வட்டவடிவமான துளையிடப்பட்ட கருங்கல்லைப் பொருத்துதல் மூலம் நீர்ப்பூ மரங்கள் உருவாக்குதல்.
- சுருள் வடிவான வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளமை.

13) அநுராதபுர காலத்திற்குரிய பிரமாண்ட சமயத் தலங்களாவன,
- ஜேத்தவனராம - மகாசேனன்
- அபயகிரி - வலகம்பா
- ருவன்வெலிசாய - துட்டகைமுனு

14) ருவன்வெலிசாயவின் அத்திவாரம் அமைக்கும்போது பின்பற்றிய தொழிநுட்பங்கள்,
- 7 முழம் ஆழத்தில் தளம் அகழப்பட்டது.
- சுண்ணாம்புக் கற்கள் இடப்பட்டு யானைகள் கொண்டு மிதித்து மட்டப்படுத்தப்பட்டது.
- வெள்ளைக்களி எனும் களிமண் இடப்பட்டது.
- பல்வேறு வகையான கற்கள் படைகளாக இடப்பட்டன (கருங்கல், சரளைக்கல், படிகக் கல்).
- நவநீதம் எனும் களிமண் பூசப்படல்.
- இரசாயன திரவமொன்றினால் கரைக்கப்பட்ட விளாம்பழச்சாறு பூசிய உலோக வலை விரிக்கப்படல்.
- நல்லெண்ணெயில் நனைக்கப்பட்ட ரன்சிலியல் எனப்படும் கற்கள் பரப்பப்பட்டன.

15) சிகிரியா நிர்மாணிப்பின்போது அதன் பாதுகாப்பிற்காக பின்பற்றிய தொழிநுட்பங்கள்,
- தனிக் குன்றில் அமைக்கப்பட்டுள்ளமை.
- நகரைச் சுற்றி ஆழமான நீர் அகழி அமைக்கப்பட்டுள்ளமை.
- நகரைச் சுற்றி செங்கல்லினால் மதில் அமைக்கப்பட்டுள்ளமை.
- நகரத்தில் நுழைவதற்காக இரண்டு வழிகள் அமைக்கப்பட்டுள்ளமை.

16) புராதன காலத்தில் இந்நாட்டில் முன்னேற்றமடைந்த வைத்திய சேவை நிலவியமைக்கான சான்றுகள்,
- பண்டுகாபயன் சொத்திசால எனும் பிரசவ விடுதியை அமைத்தமை.
- துட்டகைமுனு 18 வைத்தியசாலைகளை அமைத்தமை.
- மன்னர்கள் வைத்தியர்களாக இருந்தமை.
- புராதன வைத்தியசாலையின் சிதைவுகள் காணப்பட்டமை.
- சத்திரசிகிச்சை உபகரணங்கள், மருத்துவ ஓடம் என்பன கண்டுபிடிக்கப்பட்டமை.
- மூலிகைத் தோட்டம் அமைத்தமை.
- வைத்திய நூல்கள் எழுதியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) புராதன இலங்கையில் முன்னேற்றமடைந்த சுகாதார சேவை காணப்பட்டமைக்கான சான்றுகள்,
- மலசலகூடம் வடித்தல் முறையில் கழிவுகளை முகாமை செய்துள்ளமை.
- மலசலகூட கழிவுகள் ஆழமான குழிகளில் விடப்பட்டுள்ளமை.
- அழுக்கு நீர் ஓடுவதற்கான சாக்கடை கண்டுபிடிக்கப்பட்டமை.
- குளிக்கும் தொட்டிகளில் உள்ள அழுக்குநீர் வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டமை.

18) பண்டைய இலங்கையில் இரும்பை பிரித்தெடுக்கும் தொழிநுட்பம் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்த இடங்கள்,
- ஊவா மாகாணத்தின் பெரகல
- சப்ரகமுவ மாகாணத்தின் பலாங்கொடை சமனலவெல
- மத்திய மாகாணத்தின் சீகிரியாவிற்கு அண்மையிலுள்ள அலகொலவெவ தெஹகஹ அலகந்த.

19) புராதன இலங்கையில் இரும்பை பிரித்தெடுக்கும்போது பின்பற்றிய தொழிநுட்பங்கள்,
- இரும்புச்சூளையை மலையுச்சியில் அமைத்தல்.
- இரும்புத்தாது படிந்துள்ள லிமனைட், ஹெமடைப் பாறைகளை துண்டுகளாக்கி சூளையில் இடுதல்.
- மரங்/யகடமரங் எனும் மரத்தின் கரியை சூளையில் இடுதல்.
- மாலையில் தீ மூட்டுதல்.

20) புராதன இலங்கையில் காணப்பட்ட சிறுகைத்தொழில்கள்,
- ஆபரணங்களை வடிவமைத்தல்.
- மட்பாண்டக் கைத்தொழில்
- மாணிக்கக் கைத்தொழில்
- பட்டறைத் தொழில்

21) நில அளவீட்டிற்காக புராதன காலத்தில் பயன்படுத்தப்பட்ட தானியங்களின் முகத்தல் அளவீடுகள் ஆவன,
- கிரிய - அமுண/அவளம் - கரீசை - பேல்ல

22) பண்டைய இலங்கையில் நீளத்தை அளக்கப் பயன்படுத்திய சிறிய அளவீடுகள்,
- பரமானு - அங்குலம் - வியத்த

23) பண்டைய இலங்கையில் நீண்ட தூரத்தை அளக்கப் பயன்படுத்திய அளவீடுகள்,
- கவ்வ - யெலதுன - உச்க

24) பண்டைய இலங்கையில் காலத்தை அளக்கப் பயன்படுத்திய அளவீடுகள்,
- நீண்ட காலத்தைக் கணித்தல் - வருடம்
- பன்னிரண்டு மாதங்கள் - வச
- ஓராண்டு பூர்த்தி - ஹவஜர
- நாளொன்று பல முகூர்த்தங்களைக் கொண்டுள்ளமை – தீதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25) தெடிகம யானை விளக்குவது,

- தெடிகம சுதிகா சைத்தியவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- வெண்கலத்தால் ஆனது.
- அசையா நீர் விஞ்ஞான முறையை வெளிப்படுத்துகின்றது.
- மகா பராக்கிரமபாகு பிறந்த இடமான புங்காமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

## வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரயோகமும்

01) பண்டைய சமூகத்தில் காணப்பட்ட இருவகையான அடிமைகளும் யாவர்?

1. பரம்பரை அடிமைகள்
2. கூலிக்குப் பெறக்கூடிய அடிமைகள்/தனக்கீத்ததாச

02) சமூகம் ஒன்றில் சமூகப்பதவிகள் காணப்பட்ட பிரிவுகள்

1. நிலைக்குத்தான கட்டமைப்பு – மேலிருந்து கீழ் வரையான அதிகாரம்
   (உ+ம்) அரசன், அமைச்சர், வேறு அலுவலர்கள்
2. கிடையான கட்டமைப்பு – சம அதிகாரமுடைய கட்டமைப்பு
   (உ+ம்) அமைச்சர், சேனாதிபதி, பொருளாளர்

03) குட்டகண்ண தீசனின் தம்புள்ளை விகாரையிலுள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருந்த அரசனுக்கு காணப்பட வேண்டிய பண்புகள்

1. அரசன் நற்குணமுடையவனாக இருத்தல்.
2. அரச மரபை சேர்ந்தவனாக இருத்தல்
3. மேன்மையானவனாக இருத்தல்
4. குடிமக்களுக்கு தெய்வமாக காணப்படல்

04) 9ம் நூற்றாண்டின் கல்வெட்டில் அதிகாரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டிருந்தனர்.

- ரத்கொல் சம்தகு

05) சமுதாயத்தில் முக்கியமானவர்களாக காணப்பட்டவர்கள்

1. செல்வந்தர்
2. ஆசிரியர்கள்
3. வர்த்தகர்கள்
4. கப்பல் துறையில் ஈடுபட்ட கப்பித்தான்
5. வைத்தியர்கள்

06) சாதாரண குடிமக்களுக்குள் அடங்கியவர்கள்

1. மீனவர்கள்
2. இரத்தின கல் வெட்டுவோர்
3. இடையர்
4. விவசாயி
5. குயவர்

07) இலங்கையில் 9ம் நூற்றாண்டு ஆட்சி செய்த வம்சம்

மானவர்ம வம்சம்

08) மானவர்ம வம்ச மன்னர்களது கல்வெட்டுக்களில் சட்டம் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட சொற்கள்,

1. வதால
2. சபாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) வதால என்ற சொல்லின் கருத்து
1. சட்டதுறை 2. அரச சபை

10) புராதன காலத்தில் சபா என அழைக்கப்பட்டது
நீதிமன்றம்

11) மக்களிடையே சட்டத்தை செயற்படுத்திய பாதுகாப்பு அதிகாரசபை 9ம் நூற்றாண்டு கல்வெட்டுக் களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது
மெய்காப்பாளர்கள்

12) இவ்வதிகாரிகளை குறிக்க பயன்பட்ட சொல்
- தண்ட நாயக்க

13) 1ம் விஜயபாகுவுக்கு உதவியதாக பனக்கடுவ செப்பேட்டில் குறிப்பிடப்படும் அதிகாரி (தண்டநாயக்க)
சித்தாரும்பி புத்தநாயக்க

14) புராதன காலத்தில் வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட வரிகளும் அவை அறவிடப்பட்டதற்கான காரணங்களும்

| வரி | அறவிடப்பட்டதற்கான காரணம் |
|---|---|
| தக்கபதி | குளத்து நீரை பயன்படுத்துவோரிடமிருந்து பெறப்படல். |
| போஜகபதி | அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காக செலுத்தப்பட்ட வரி |
| மதர மஞ்சக்க | வாய்க்காலில் மீன் பிடிப்பதற்காக அரசுக்கு செலுத்திய வரி |
| மாந்திரிக்க பத்சய பாகய | குளங்களிலிருந்து வயலை நோக்கிவரும் சிறு வாய்க்கால்களில் மீன்பிடித்தல் தொடர்பாக அறவிடப்பட்ட வரி |
| சுங்க வரி | துறைமுகங்களில் அறவிடப்பட்டது. |

15) நீதிமன்ற தொகுதிகள் பற்றி கூறும் 1ம் கஜபாகுவின் கல்வெட்டு
- சித்துல்பவ்வ கல்வெட்டு

16) சுற்றாடலை பாதுகாப்பது தொடர்பாக கி.பி 9ம் நூற்றாண்டு தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட விடயம்,
உரிய காலத்தில் அறுவடை செய்ய தவறும் நபர்களுக்கு ஐந்து கரங் அபராதம் அறவிடப்பட்டது.

17) குளத்தில் இருந்து நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர பாசிப்பயறு விதைத்தல் ஆகாது எனும் சட்டம் எம் மன்னனால் அறிமுகப்படுத்தப்பட்டது
- 4ம் மகிந்தன்

18) இவ்விடயம் குறிப்பிடப்பட்ட கல்வெட்டு
- வெஸ்ஸகிரிய கல்வெட்டு

19) பதுளை தூண் கல்வெட்டை பொறிப்பித்த மன்னன்
- 3ம் உதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) பதுளை தூண் கல்வெட்டு வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
- சொரபொரவாவி கல்வெட்டு
- கோப்பிட்டிகம தூண் கல்வெட்டு

21) இக்கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள சந்தை தொடர்பான சட்டங்கள்
- வெற்றிலை, பாக்கு என்பன விற்க ஒதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் விற்கப்படல்.
- போயா தினங்களில் விற்பனை செய்ய முடியாது.
- அரச அனுமதி பெறாத தராசு, படி பயன்படுத்தமுடியாது.
- வர்த்தக நிலையத்தை கடந்து செல்வோரிடமிருந்து வரி அறவிடக்கூடாது.
- ஹோப்பிட்டிகம வர்த்தக சந்தை எல்லையில் வியாபாரம் செய்வோரிடம் மட்டும் வரி அறவிடப்படல்.
- அதிகாரிகளிடம் காண்பிக்காது வர்த்தக நிலையங்களில் பொருள்கள் விற்போரிடமிருந்து இரு மடங்கு வரி அறிவிடல்.

22) போயா தினங்களில் வியாபாரம் செய்வோரிடமிருந்து அறவிடப்பட்ட வரி எண்ணெயாக வழங்கப் பட்ட விகாரை
- மகியங்கனை விகாரை

23) மிருக வதை தொடர்பான சட்டங்களை இயற்றிய மன்னர்கள்
- ஆமண்ட காமினி அபயன்
- 4ம் மகிந்தன்
- நிசங்கமல்ல மன்னன்

24) 4ம் மகிந்தனின் வேவல் கெட்டிய கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட குற்றச்செயல் தொடர்பான தண்டனைகள்
- களவு எடுத்தல், கொலை செய்தல் என்பன தொடர்பாக விதிக்கப்பட வேண்டிய தண்டனைகள்
- மிருகத்தின் உடலில் உள்ள அடையாளம் திருடியவர் நெற்றியில் இடப்படல்.
- கொலை செய்தல் தொடர்பான குற்றத்துக்கு தூக்கு தண்டனை.
- பிறருக்கு சொந்தமான மாடுகளை திருடுபவர்கள் பிடிக்கப்பட்டால் அதனை உரியவரிடம் ஒப்படைத்தல்.

25) இலங்கையில் பெண்கள் உயர்வாக மதிக்கப்பட்டதற்கான சான்றுகள்
- ஆட்சியில் பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
- அரச குடும்ப பெண் மாத்திரமல்லாது சாதாரண பெண்களும் தலைமைத்துவம் வகித்துள்ளனர்.
- பெண்கள் பௌத்த பிக்குகளுக்கு தானம் வழங்கியுள்ளனர்.
- சமையல் கலையில் சிறந்த பெண்கள் மதுரஹந்தரசா என அழைக்கப்பட்டனர்.
- கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் மதுபாச்சிகா என குறிப்பிடப்பட்டுள்ளனர்.
- பெண்கள் 16 வயதை அடைந்ததும் திருமணம் செய்ய வேண்டும் என்பது சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முக்கிய விடயம். பெண்கள் திருமணம் செய்யும்வரை பெற்றோர் பாதுகாப்பில் இருக்கவேண்டும்.
- பிள்ளைகளுக்கு கல்வியறிவு வழங்குவது பெற்றோர் கடமை.
- சாலிய குமாரனின் மனைவி அசோகமாலா துட்டகைமுனு மன்னனின் அரச மாளிகையில் சுவையான உணவு சமைத்து வழங்கியதாக சத்தர்மா லங்காராவில் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26) புராதன காலத்தில் பெண் அலங்காரம் காணப்பட்டதற்கான சான்றுகள்

- இலங்கையில் 3000 ஆண்டுகளுக்கு முன் பெண்கள் உடல் அழகில் அக்கறை கொண்டமைக்கான சான்று – பெண்கள் கண் இமைகளுக்கு நிறம் தீட்டுவதற்கு உலோக கம்பிகளை பயன்படுத்தினர்.
- கி.மு 700 - 450 இடைப்பட்ட பழைய கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- தம்புள்ளைக்கு அண்மையில் இப்பண்கட்டுவவில் கழுத்து சங்கிலி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இச்சங்கிலிக்கு பயன்படுத்திய மணிகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இம்மணிகள் மாகமவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- கூராக்ககூடிய மஞ்சள், சிவப்பு நிற கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

27) பண்டைய சமூகத்தில் காணப்பட்ட உணவு முறையில் காணப்பட்ட சிறப்பு

- புராதன காலத்தில் இம்மக்கள் உள்நாட்டில் விளைபவற்றையே உண்டனர்.
- உணவை சுவையூட்ட புளிப்பு வகைகள் பயன்படுத்தப்பட்டன.
- கறிகளை சுவையூட்ட கறிவேப்பிலை 'கருபோழய' பயன்படுத்தினர்.
- உணவுகளுக்கு சமைப்பதற்கு தேங்காய் எண்ணெய் பாவனை குறைவாகவும் நெய் அதிகம் பாவனையும் இடம்பெற்றது.
- கறிகளை சுவையூட்ட வாசனை பொருள்கள் பயன்பாடு
- பால், தயிர் போன்றனவும் பயன்படுத்தப்பட்டன.
- கஞ்சியை உணவாக பயன்படுத்தினர்.
- மீன் உணவையும் உட்கொண்டனர்.
- வரலாற்று காலத்தில் நெல், குரக்கன், உழுந்து, பயறு என்பன பெற்றுக்கொள்ளப்பட்டன.
- செல்வந்தர் நெய்யால் சுடப்பட்ட மான் இறைச்சியும் தவிட்டு சோறும் உண்டுள்ளனர்.
- தானியங்களை வறுத்து பெறப்பட்ட உணவு.
- காட்டுக் கிழங்கு, முட்கிழங்கு, வற்றாளை போன்றவை பயன்படுத்தப்பட்டன.
- பொரியல், சுண்டல், குழம்பு என்பவற்றுக்கு மேலதிகமாக குழம்பு, புளிச்சுவை, கெட்டியான கறி என மூன்று வகையாக சமைக்கப்பட்டது.

28) புராதன காலத்தில் சுற்றாடலை பாதுகாத்த மன்னர்களும், வகுத்த சட்டங்களும்

- 4ம் மகிந்தன் - உயர் நிலங்களிலுள்ள மரங்களை வெட்டக்கூடாது.
- 3ம் உதயன் - காட்டு மரங்களை வெட்டக்கூடாது.
- 5ம் காசியப்பன் - மரஞ்செடி முகாமைத்துவம்.

29) உள்நாட்டு வர்த்தகம் பற்றிக் குறிப்பிடும் மிக முக்கியமான கல்வெட்டு எது அதில் குறிப்பிடப்படும் முக்கிய விடயங்கள் யாவை?

- பதுளைக் கல்வெட்டு/சொரபொர வெவத் தூண் கல்வெட்டு
- வர்த்தக சந்தையின் எல்லையில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களிடம் மாத்திரம் வரி அறவிட வேண்டும்.
- அனுமதி பெறப்பட்ட தராசுப்படிகளை பயன்படுத்தல் வேண்டும்.
- வெற்றிலை, பாக்கு என்பவற்றை தனி மண்டபத்தில் விற்பனை செய்தல் வேண்டும்.
- போயா தினங்களில் வியாபாரத்தில் ஈடுபடுவோரிடம் எண்ணெய் வரி அறிவிடவேண்டும்.

30) புராதன இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களை குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| 1. உரோம நாணயம் | 2. சீன நாணயம் | 3. அரேபிய நாணயம் |
| 4. இந்திய நாணயம் | 5. பிரித்தானிய நாணயம் | 6. V.O.C நாணயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) பின்வரும் சட்டதிட்டங்களை உருவாக்கிய மன்னர்களை முறையே குறிப்பிடுக.

A - படுகொலை சட்டத்தை இயற்றிய மன்னன் - ஆமண்ட காமினி அபயன்

B - எருமை, பசு, ஆடு என்பவற்றைக் கொல்வோருக்கு - 4ம் மகிந்த மன்னன் மரண தண்டனை விதிக்கும் சட்டம்.

C - நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொல்லக்கூடாது - நிஸ்ஸங்கமல் மன்னன்.

32) பின்வரும் வரலாற்று நிகழ்வோடு தொடர்புடைய பெண்களைக் குறிப்பிடுக.

1. எமது நாட்டை மூன்று முறை ஆட்சி செய்தவள் - லீலாவதி அரசி
2. துட்டகைமுனு மன்னனின் மாளிகையில் சுவையான உணவு சமைத்து அனைவரின் மனதைக் கவர்ந்தமை – அசோகமாலா
3. தமது செல்வத்தைக் கொண்டு சமயப் பணிகளில் ஈடுபட்டவர் - தலுதா லக்ஷ்மி

33) பண்டைய மக்கள் கறிகளை சுவையூட்ட பயன்படுத்திய முதல் மூன்று முக்கிய வாசனைப் பொருட்கள் எவை?

1. உப்பு 2. சீரகம் 3. மிளகாய்

34) புராதன மக்கள் பாலைப் பெற்றுக்கொள்வதற்காக வளர்த்த பசுக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

- கிரிகெரி (பால், தயிர், மோர், நெய், வெண்ணெய்)

35) புராதன இலங்கை மக்களிடையே பயன்பாட்டில் இருந்த பின்வரும் கஞ்சி வகைகளை மூலாதாரங்களில் எவ்வாறு அழைக்கப்பட்டன என குறிப்பிடுக.

A - ஒரு பங்கு அரிசியுடன் ஆறு பங்கு நீர் சேர்த்து நோய்களுக்காக தயாரிக்கப்படும் கஞ்சி - யவாகு,

B - மருத்துவ குணமுடைய இலைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சி — எம்புல் ஹம்பு/ எம்புல் கெத்த

36) பின்வரும் சட்டதிட்டங்களுடன் தொடர்புடைய மன்னர்களை முறையே குறிப்பிடுக.

A - உயர் நிலங்களில் உள்ள மரங்களை வெட்டக்கூடாது - 4ம் மகிந்தன்

B - காட்டு மரங்களை வெட்ட வேண்டாம் - 3ம் உதயன்

C - மரஞ்செடிகளின் முகாமைத்துவத்தில் அரசினால் அமுல்செய்யப்பட்டுள்ள சட்டங்களுக்கு அமைய செயற்படும்படி அரச அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டமை – 5ம் காசியப்பன்

37) பின்வரும் ஒவ்வொரு விடயங்கள் பற்றியும் குறிப்பிடும் கல்வெட்டுக்களை முறையே குறிப்பிடுக.

- நீதிமன்ற தொகுதி பற்றி குறிப்பிடுவது - சிதுல்பவ்வ கல்வெட்டு
- சுற்றாடல் பாதுகாப்பு - கொண்டவட்டுவான்
- விவசாயத்தை ஒழுங்குபடுத்தியமை - வெஸ்ஸகிரி
- உள்நாட்டு வர்த்தகம் - பதுளை தூண் கல்வெட்டு

38) புராதன இலங்கையில் பயன்பாட்டிலிருந்த பின்வரும் நாணயங்கள் எப்பெயரினால் அழைக்கப்பட்டன?

- பொன் நாணயம் - அக
- செப்பு நாணயம் - தம்பமஸ்ஸ
- வெள்ளி நாணயம் - ஹஸ்எபு
- மத்திய கால தங்க நாணயம் - கஹவனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலர் வலய புராதான நகரங்களின் வீழ்ச்சியும் தென்மேற்கில் புதிய இராச்சியங்களின் தோற்றமும்

01) இலங்கையின் முதல் இராசதானியும் அதனை தலைநகரமாக்கிய மன்னனும்
அனுராதபுரம் - பண்டுகாபயன்

02) பொலனறுவையை ஆட்சி செய்த முக்கிய மன்னர்கள் மூவர்
- 1ம் விஜயபாகு
- மகா பராக்கிரமபாகு
- நிஸங்க மல்ல மன்னன்

03) பொலனறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான காரணங்கள்
1. பலவீனமான மன்னர்கள் ஆட்சிப்பீடம் ஏறியமை
2. கலிங்க, பாண்டிய வம்சங்களிடையே ஏற்பட்ட போராட்டம்
3. பொருளாதார வீழ்ச்சி
4. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு

04) இரண்டாம் நகரமயமாக்க நகரங்கள் முறையே
1. தம்பதெனியா
2. யாப்பகூவ
3. குருநாகல்
4. கம்பளை
5. கோட்டை

05) பொலனறுவை இராசதானியின் வீழ்ச்சியின் பின்னர் தோற்றம்பெற்ற பாதுகாப்பு அரண்களும் அதனை அமைத்த மன்னர்களும்
1. யாப்பகூவ - சுபதளபதி
2. கோவிந்தமலை - புவனேகபாகு ஆதிபாதன்
3. மினிப்பே - சங்க தளபதி
4. தம்பதனியா - 3ம் விஜயபாகு

06) 3ம் விஜயபாகு பௌத்த சமய மறுமலர்ச்சிக்காற்றிய பங்களிப்புக்கள்
1. பெலிகலையில் தலதாமாளிகையை அமைத்தமை.
2. களனி விகாரையை புனரமைத்தமை.
3. விஜய சுந்தாராமய விகாரையைக் கட்டியமை.
4. உபசம்பதா சடங்கினை நடத்தியமை.

07) தம்பதெனிய ஆட்சியாளன் 2ம் பராக்கிரமபாகு மிகச்சிறந்த ஆட்சியாளன் என்பதற்கான சான்றுகள்
1. தம்பதெனிய கதிகாவதையை எழுதுவித்தமை.
2. பல நூல்களை எழுதுவித்தமை.
3. சந்திரபானுவின் ஆக்கிரமிப்பை முறியடித்தமை.
4. கலிங்க மாகனிடமிருந்து இராசரட்டையை மீட்டமை.
5. தேவபதிராஜ எனும் அமைச்சரின் உதவியுடன் பொருளாதார, சமய, கல்வித்துறைகளில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08) கலிங்க மாகனின் ஆக்கிரமிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த மன்னரும் அவரின் புகழ்நாமமும்
2ம் பராக்கிரமபாகு - கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டிதன்

09) தம்பதெனிய காலத்தில் இடம்பெற்ற வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்களும் அப்போதைய ஆட்சியாளர்களும் முறையே

1. சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு - 2ம் பராக்கிரமபாகு
2. காலிங்கராயர் - 1ம் புவனேகபாகு
3. சோடகங்கன் - 1ம் புவனேகபாகு

10) குருணாகல் இராசதானியின் சிரேஸ்ட ஆட்சியாளனும் அவன் சிறந்த ஆட்சியாளன் என்பதற்கான சான்றுகளும்

4ம் பராக்கிரமபாகு

1. பாளிமொழியில் இருந்த ஜாதகக் கதைகளை பன்சிய பனஸ் ஜாதகய எனும் பெயரில் மொழி பெயர்த்தமை.
2. பல நூல்களை எழுதுவித்தமை.
3. குருணாகலில் தலதாமாளிகையை அமைத்தமை.

11) கம்பளை இராசதானி காலத்தில் காணக்கூடிய வெளித்தெரியும் விசேட பண்புகள்

1. மன்னர்களை விட பிரதானிகள் பலம் பெற்றிருந்தமை.
2. தாய்வழி அரசுரிமை காணப்பட்டமை.
3. நாட்டில் வேறு இராசதானிகள் உருவாகியமை.

12) காலி மும்மொழிக் கல்வெட்டை அமைத்த மன்னனும் அது பொறிக்கப்பட்டுள்ள மொழிகளும்
செங்கோ சேனாதிபதி - சீனம், பாரசீகம், தமிழ்

13) 6ம் பராக்கிரமபாகுஆட்சிசெய்த இராசதானியும் அவனின் தாய், தந்தையரும் முறையே

1. கோட்டை
- சுனேத்ராதேவி
- ஜயமஹலே

14) 6ம் பராக்கிரமபாகு மிகச்சிறந்த ஆட்சிாளன் என்பதற்கான சான்றுகள் முறையே

1. இறுதியாக இலங்கைத் தீவை ஒன்று படுத்தியமை.
2. பொருளாதாரத்தை மேம்படுத்தியமை.
3. கல்வி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கு சேவையாற்றியமை.

15) மாயரட்டைக்குரிய இரண்டாம் நகராக்க ஆட்சி நிலையங்கள் முறையே

1. தம்பதெனியா
2. குருணாகலை
3. யாப்ப கூவ
4. கோட்டை
5. றைகம
6. சீதவாக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16) யாழ்ப்பாண இராசதானியின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் நூல்கள்
1. யாழ்ப்பாண வைபவமாலை
2. கைலாய மாலை
3. செகராச சேகர மாலை

17) யாழ்ப்பாண இராசதானியை ஆண்ட மன்னர்கள் முறையே
1. விஜய கூழங்கை
2. வரோதயன்
3. குலசேகரன்
4. மார்த்தாண்டன்
5. விக்ரமன்

18) இரண்டாம் நகரமாக்க காலத்தின் பொருளாதாரத்தின் தன்மைகள் முறையே
1. சீவனோபாயமாக விவசாயம் காணப்பட்டமை.
2. வர்த்தகம் வளர்ச்சியடைந்திருந்தமை.
3. பிரதான பயிர்ச் செய்கை நெல்
4. விவசாயத்திற்கு மழை நீர் பயப்படுத்தியமை.

19) தம்பதெனிய காலத்திற்குரிய பின்வரும் நூல்களை எழுதியோர் முறையே
1. கவிசிலுமின - 2ம் பராக்கிரமபாகு
2. சத்தர்மரத்னாவலிய - தர்மசேன தேரர்
3. பூஜாவலிய - புத்த புத்திரதேரர்

20) கோட்டை காலத்தில் வாழ்ந்த கல்விமான்கள்
1. 6ம் பராக்கிரமபாகு
2. தொட்டகமுவ ஸ்ரீ ராகுல தேரர்
3. காரகல வரைத்ன தேரர்
4. இலுகல் குலதிலக பிரிவெனா தேரர்

21) கோட்டை காலத்தில் தோன்றிய பிரிவெனாக்கள்
1. பெப்பிலியானே சுனேத்திராதேவி பிரிவெனா
2. காரகல பத்மாவதி பிரிவெனா
3. தெவிநுவர இருகல் குலதிலக்க பிரிவெனா
4. வீதாகம கணானந்தா பிரிவெனா

## கண்டி இராச்சியம்

01) கண்டி இராச்சியத்தின் மறுபெயர்கள்,
- செங்கடகல
- மலைநாடு
- மலையக தலைநகர்
- ஸ்ரீவர்த்தனபுர
- மலையகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) கண்டி இராச்சியத்திற்கு பாதுகாப்பு வழங்கிய இயற்கை அரண்கள்,

- நீர் அரண் - மகாவலி கங்கை
- மலை அரண் - உடவத்த, கந்தான
- வன அரண் - மலைநாட்டுக் காடுகள்
- கணவாய்கள் - பலன, உன்னங்கிரிய, கலகெதர, பலகடுவை

03) கண்டிய ஆட்சியாளர்கள் சிலரின் ஞானஸ்தானப் பெயர்கள்,

- குசுமாசனாதேவி - டோனாகத்தரினா
- யமசிங்க பண்டார - டொன்பிலிப்
- கோணப்பு பண்டார - டொன்ஜுவான்

04) கண்டி இராச்சியத்தின் ஆட்சியதிகாரத்தைப் பெற்ற மன்னர்களின் இயற்பெயர்கள்,

- டொன்பிலிப் - யமசிங்க பண்டார
- 1ம் விமலதர்மசூரியன் - கோணப்பு பண்டார
- 2ம் இராஜசிங்கன் - மகா அஸ்தான குமரன்
- கண்ணுசாமி - ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

05) முதலாம் விமலதர்ம சூரியன் எதிர்கொண்ட சவால்கள்,

- சட்டபூர்வ ஆட்சியுரிமை இல்லாமை
- போர்த்துக்கேயரின் கண்டி மீதான ஆக்கிரமிப்பு
- சீதாவாக்கை இராச்சியத்தின் ஆக்கிரமிப்பு
- பௌத்த சமயத்தை மீளவும் எழுச்சியுறச் செய்தல்.
- கண்டிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல்.

06) 1ம் விமலதர்மசூரியன் சட்ட ரீதியான ஆட்சியுரிமையைப் பெற்றுக்கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகள்,

- குசுமாசனாதேவியை திருமணம் செய்துகொண்டமை.
- மீண்டும் பௌத்த சமயத்தை தழுவிக்கொண்டமை.
- விமலதர்மசூரியன் என்ற பௌத்த நாமத்தைச் சூடிக்கொண்டமை.
- புனித தந்ததாதுவை கண்டியில் தலதாமாளிகை அமைத்து பிரதிஷ்டை செய்தமை.

07) 1ம் விமலதர்மசூரியன் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காற்றிய பங்களிப்புக்கள்,

- பர்மாவில் இருந்து பௌத்த பிக்குகளை அழைத்து உபசம்பதா சடங்கை நிகழ்த்தியமை.
- பழைய விகாரைகளைப் புணரமைப்புச் செய்தமை.

08) 2ம் விமலதர்மசூரியனின் பொருளாதாரப் பணிகள்,

- விவசாயத்தை விருத்தியடையச் செய்தல்.
- பருத்திப் பயிர்ச்செய்கைக்கு உதவிபுரிதல்.
- கொத்மலையிலும் வலப்பனையிலும் இரும்புருக்குக் கைத்தொழிலை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தல்.
- வெடிமருந்திற்குத் தேவையான உப்பு உற்பத்திக் கைத்தொழிலை வளர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) 1ம் விமலதர்மசூரியனின் புதிய அரச வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள்,
- செனரத் மன்னன்
- 2ம் இராஜசிங்கன்
- 2ம் விமலதர்மசூரியன்
- ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்

10) செனரத் மன்னன் கண்டி இராச்சியத்தினை தன் பிள்ளைகளுக்கிடையே பகிர்ந்தளித்த முறை,
- ஊவா பிரதேசம் - குமாரசிங்க இளவரசன்
- மாத்தளைப் பிரதேசம் - விஜேபால இளவரசன்
- கண்டி பிரதேசம் - இராஜசிங்க இளவரசன்

11) கண்டி இராச்சியத்திற்கு எதிராக போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புக்கள்,

| | ஆண்டு | போர் | கண்டிய மன்னன் | போர்த்துக்கேய தளபதி |
|---|---|---|---|---|
| 1. | 1594 | தந்துரே | 1ம் விமலதர்மசூரியன் | ஜேரோலோபேஸ்த சூசோ |
| 2. | 1602 | பலனை | 1ம் விமலதர்மசூரியன் | தொன் ஜெரோனிமோ த அசவேது |
| 3. | 1630 | ரந்தெனிவெல | 2ம் இராஜசிங்கன் | கொன்ஸ்தாந்திது தசா |
| 4. | 1638 | கண்ணொறுவ | 2ம் இராஜசிங்கன் | தியோகோ த மெல்லோ |

12) 2ம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தின் அரசனானபோது எதிர்நோக்கிய சவால்கள்,
- போர்த்துக்கேயரின் எதிர்ப்பை முறியடித்தல்.
- போர்த்துக்கேயரை இந்நாட்டில் இருந்து வெளியேற்றுதல்.
- கண்டிய பிரபுக்களிடமிருந்து ஏற்பட்ட எதிர்ப்பை கட்டுப்படுத்துதல்.
- ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்பில் இருந்து கண்டி இராச்சியத்தைக் காத்துக் கொள்ளல்.

13) கண்டியை ஆண்ட 2ம் இராஜசிங்கன் மிகச்சிறந்த ஆட்சியாளன் என்பதற்கான சான்றுகள்,
- போர்த்துக்கேயருடனான ரந்தெனிவெல, கண்ணொறுவ போர்களில் வெற்றிபெற்றமை.
- போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றியமை.
- கண்டி இராச்சியத்தின் எல்லைகளை விஸ்தரித்தமை.
- கண்டியை மிக நீண்டகாலம் ஆட்சி செய்தமை.

14) கண்டியை ஆட்சி செய்த நாயக்கவம்ச மன்னர்கள்,
- ஸ்ரீ விஜய இராஜசிங்கன்
- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
- இராஜாதி இராஜசிங்கன்
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

15) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் சமயப் பணிகள்,
- சீயம் நாட்டிலிருந்து பௌத்த பிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கினை நடாத்தியமை.
- சியம் நிக்காயவை ஆரம்பித்தமை.
- கண்டி இராச்சியத்திலும் தாழ் நாட்டிலும் காணப்பட்ட விகாரைகளை புணரமைத்தமை.
- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர பிக்குவிற்கு சங்கராஜ பதவியை வழங்கி பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்த அவருக்கு ஒத்துழைப்பு வழங்கியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16) கண்டிய அரசனின் அதிகாரங்கள்,

- நாட்டின் உயர் அதிகாரம் உடையவன்
- நாட்டின் அமைதியைப் பேணுவதும் பாதுகாப்பை வழங்குவதும் அவரின் பிரதான செயற்பாடாகும்.
- சம்பிரதாய பூர்வமான முன்னைய நடைமுறைகளுக்கமைய மன்னன் செயற்பட வேண்டும்.
- நாட்டின் உயர் நீதித்துறை அதிகாரமுடையவன்.
- நாட்டின் அனைத்து அரசியல், பொருளாதார நீர் வடிகால் செயற்பாடுகளும் அரசனின் தலைமையில் இடம்பெறும்.

17) கண்டிய அரசமாளிகைக்கு பொறுப்பான அதிகாரிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்களும்,

- யானைகளுக்கு பொறுப்பானவர் - கஜநாயக்கநிலமே
- புனித தந்ததாதுவிற்கு பொறுப்பானவர் - தியவடன நிலமே
- ஆடையணிகளுக்கு பொறுப்பானவர் - சலுவடன நிலமே
- குதிரை முகாந்திரம் -
- கவியரங்கிற்கு பொறுப்பானவர் -
- விகாரைகளின் நிருவாகம் - மஹாநயாக்க, அனுநாயக்க

18) கண்டி இராச்சியத்திற்கு உரித்தான ரட்டைகளும் திஸாவைகளும்,

**ரட்டைகள் (09)**

- உடுநுவர
- யடிநுவர
- தும்பறை
- ஹரிஸ்பத்துவ
- தும்பரா
- ஹேவாஹெட்ட
- கொத்மல
- உடபுலத்கம
- பாதஹலத்கம

**திஸாவைகள் (12)**

- நான்கு கோரளை
- மூன்று கோரளை
- ஊவா
- சப்ரகமுவை
- மாத்தளை
- வலப்பனை

19) கண்டிய காலத்தில் அறவிடப்பட்ட வரிகள்,

- போக்குவரத்திற்கான வரி - மடிகே பத்த
- யானை பிடித்தலுக்கான வரி - குருவே பத்த
- வனைதலுக்கான வரி - படஹெல பத்த
- சலவைக்கான வரி - ரதா பத்த
- நெசவுக்கான வரி - ஹெந்த பத்த

20) கண்டிய மன்னனால் மட்டும் தீர்ப்பு வழங்கக்கூடிய வழக்குகள்,

- முக்கிய தலைவர்கள் தொடர்பான வழக்குகள்
- கிளர்ச்சிகள், குழப்பங்கள் தொடர்பான வழக்குகள்
- சூழ்ச்சிகள் தொடர்பான வழக்குகள்
- இராசதுரோகம் தொடர்பான வழக்குகள்
- விகாரைகள், பிக்குகள் தொடர்பான வழக்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) கண்டி இராசதானி காலத்தில் நடைமுறையில் இருந்த தண்டனைகள்,

- கன்னத்தில் அறைதல்
- தென்னை மட்டையால் அடித்தல்
- நாடு கடத்துதல்
- விலங்கிடுதல்
- துர்நாற்றத்தின் மத்தியில் வைத்தல்
- நீரில் மூழ்கடித்துக் கொல்லுதல்.
- முழந்தாழிடச் செய்தல்
- கசையால் அடித்தல்
- யானையால் மிதித்துக் கொல்லுதல்
- முடியைக் கத்தரித்தல்
- கீழ் குலத்தவராக்குதல்

22) கண்டி இராசதானி காலத்து விவசாயப் பொருளாதாரம்,

- நுகர்வை அடிப்படையாகக் கொண்ட சுயதேவைப் பொருளாதாரம்.
- நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
- சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
- வீட்டுத் தோட்டம் இடம்பெற்றது.
- மந்தை வளர்ப்பு இடம்பெற்றது.

23) கண்டிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில்கள்,

- இரும்பு உலோகக் கைத்தொழில்
- மரக் கைத்தொழில்
- அரக்குக் கைத்தொழில்
- பன்புல் கைத்தொழில்

24) கண்டி இராசதானி காலத்து நிலவுரிமை,

- கபாடகம் - அரச மாளிகையின் தேவைக்காக பயன்படுத்தப்பட்டவை.
- நிந்தகம் - பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்டவை.
- தேவாலயம் - தேவாலயங்களுக்கு தானமளிக்கப்பட்டவை.
- விகாரகம் - விகாரைகளுக்கு தானமளிக்கப்பட்டவை.
- பரவேனிகம் - கிராமத்தவர்கள் பரம்பரையாக அனுபவித்தவை.

25) கண்டி இராசதானி காலத்து சமூக அமைப்பு,

- கிராமிய சமூகமே காணப்பட்டது.
- கிராமங்கள் சுயதேவைப் பூர்த்தியடைந்திருந்தன.
- குலத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைமை.
- குலத்தை அடிப்படையாகக் கொண்ட திருமண முறைமை.
- குடும்பம் பிரதான சமூக அலகு.

26) கண்டிய காலத்து திருமண முறைகள்,

- தீக திருமணம்
- பின்ன திருமணம்
- பல்புருஷ திருமணம் / ஒரே வீட்டில் சாப்பிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமலர்ச்சி

01) மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரணங்கள்,
- கொன்ஸ்தாந்திநோபில் துருக்கியர் வசமாதல்.
- வர்த்தக முன்னேற்றமும் புதிய செல்வந்த வர்த்தகத்தினரின் தோற்றம்
- அறிவு வளர்ச்சி

02) உரோமப் பண்பாடு வீழ்ச்சியடைந்த பின்னர் சமய நிறுவனங்களை மையமாகக்கொண்ட கல்வி முறையின் முக்கிய பாடங்கள்,
- இறையியல் - மெய்யியல் - சட்டம்

03) 12ம் நூற்றாண்டின் பின்னர் தோன்றிய புதிய கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்பட்ட பாடங்கள்,
- பழைய இலக்கியம் - நாடகம் - இலக்கணம் - வரலாறு

04) மறுமலர்ச்சி காலத்தில் காணப்பட்ட சித்திரக் கலைஞர்கள்,
- லியானாடோ டாவின்சி - மைக்கல் ஆஞ்சலோ - ரபாயல்
- மெசெக்ஷியோ - பொட்டி ஷெல்லி

05) மறுமலர்ச்சி காலத்தில் திருச்சபையை விமர்சித்தவர்களில் முக்கியமானவர்கள்,
- ஜோன் வைக்கிளிப் - பொஹேமியாவில் ஜோன் ஹஸ்
- பிரான்சில் இராஸ்மஸ் - ஜேர்மனியில் மார்ட்டின் லூதர்

06) கல்வி மறுமலர்ச்சியில் மாற்றம் ஏற்பட்ட துறைகள்,
- மொழி - இலக்கியம் - சிற்பம்
- சிற்பம் - சித்திரம் - கட்டடக் கலை

07) இலக்கியத் துறைக்குப் பணியாற்றிய எழுத்தாளர்கள்,
- இத்தாலியில் தாந்தே - பெற்றாக் பொக்காஷியோ
- இங்கிலாந்தில் சேர் தோமஸ்மூர் - பிரான்சிஸ் பேக்கன்
- வில்லியம் ஷேக்ஸ்பியர் - பிரான்சிஸ் இராஸ்மஸ்

08) கவிஞராகவும் பாடகராகவும் விஞ்ஞானியாகவும் பொறியியலாளராகவும் செயற்பட்டவர்,
- லியானாடோ டாவின்சி

09) லியானாடோ டாவின்சியின் உலகப் புகழ்பெற்ற சித்திரங்கள்,
- மோனலீசா
- இயேசுநாதரின் இறுதி இராப்போசனம்

10) மைக்கல் ஆஞ்சலோவினால் உலகப் புகழ்பெற்ற சித்திரங்கள்,
- இறுதித் தீர்ப்பு
- சிஸ்டைன் ஆலயத்தில் ஆதாமின் சித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) மைக்கல் ஆஞ்சலோவினால் வடிவமைக்கப்பட்ட உருவச் சிலைகள்,
- லோரேன்சோ மெடிசியின் உருவம் - பியெட்டா
- மோசனின் உருவம் - தாவீது

12) மறுமலர்ச்சிக் காலத்தில் கட்டடக் கலையின் முக்கிய சிறப்பம்சங்கள்,
- வட்ட வடிவிலான வில் வளையம்
- உயர்ந்த தூண்
- அரை வட்டச் சிகரம்

13) மறுமலர்ச்சிக் காலத்தில் கட்டடக் கலையில் சிறந்து விளங்கிய கலைஞர்கள்,
- பிரமத்தே - மைக்கல் ஆஞ்சலோ
- லியானடோ டாவின்சி - ரபாயல்

14) மறுமலர்ச்சிக்கால கட்டிடக் கலைகளுக்கு உதாரணங்கள்,
- புனித பேதுருவின் பெசிலிக்கா ஆலயம்
- புளோரன்சிலுள்ள பேராலயம்

15) கண்டுபிடிப்புக்களும் தொடர்புடையவர்களும்

| | கண்டுபிடிப்புக்கள் | கண்டுபிடிப்பாளர்கள் |
|---|---|---|
| (i) | புவி கோளவடிவானது எனவும் ஏனைய கோள்கள் சூரியனைச் சுற்றி வருவதாக கண்டுபிடித்தவர் | நிக்கலஸ் கொபர்ணிகஸ் |
| (ii) | ஞாயிற்றுத் தொகுதியில் கோள்கள் அனைத்தும் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவதாக கூறியவர் | ஜொஹென்ஸ் கெப்லர் |
| (iii) | வியாழனைச் சூழ உபகோள்கள் உள்ளன எனக் கண்டுபிடித்தவர் | கலிலியோ கலிலி |
| (iv) | தொலைநோக்கி | கலிலியோ கலிலி |
| (v) | புவியீர்ப்புச் சக்தி | ஐசக் நியூட்டன் |
| (vi) | குருதிச் சுற்றோட்டம் தொடர்பாக | வில்லியம் ஹார்வே |
| (vii) | நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களையும் அதற்கான சிகிச்சைக்கான பரிசோதனையும் | பெரசல்சஸ் |
| (viii) | மனித உடலில் குருதி இதயத்தின் வலது பக்கத்திலிருந்து புறப்பட்டு சுவாசப்பையில் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் இதயத்தை அடைந்து உடல் முழுவதும் பரவிச் செல்லல் | மைக்கல் சர்வேட்ஸ் |
| (ix) | அச்சியந்திரம் | ஜொஹேன்ஸ் கூடன் பேர்க் |

16) பின்வருவனவற்றுடன் தொடர்புடையவர்கள்,
- நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை - நிக்கலஸ் கொபர்ணிகஸ்
- செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை - கலிலியோ கலிலி

17) 12 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வர்த்தக முன்னேற்றத்துடன் தொடர்புடைய மத்திய வகுப்பினர்,
- வங்கியாளர்கள் - கப்பல் உரிமையாளர்கள் - போக்குவரத்து வண்டி உரிமையாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) வர்த்தக வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட மாற்றம்,
- பணப்புழக்கம் அதிகரித்தது.
- நாணயத்தாள்கள் நாணயக் குற்றிகள் என்பன பணப்புழக்கத்திற்கு வந்தன.
- காசோலை முறையும் வங்கி முறையும் ஆரம்பமாகின.
- வர்த்தகத்திற்குத் தேவையான பணத்தை வங்கி மூலம் கடனாகப் பெறக்கூடியதாகவிருந்தது.

19) நாடுகாண் பயணங்களின் ஆரம்பத்தில் ஆர்வம் காட்டிய நாடுகள்,
- போர்த்துக்கல் - ஸ்பானியா

20) மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பதற்கு ஏற்பட்ட சாதகமான காரணிகள்,
- பாதுகாப்பாக கடற்பிரயாணம் செய்யக்கூடிய திசையறிகருவி வட நட்சத்திரமானி என்பன கண்டுபிடிக்கப்பட்டமை.
- புவி கோளவடிவானது என்பது அறியப்பட்டமை.
- தொலமியின் உலகப்படத்தின் மூலம் உலகம் பற்றிய தெளிவான விளக்கம்
- தேசிய அரசு நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கியமை.

21) பின்வரும் நாடுகளை கண்டுபிடித்தவர்கள்,
- ஆபிரிக்காவின் தென்முனை - பர்த்த லோமேயு டயஸ்
- இந்தியாவின் கள்ளிக்கோட்டை - வாஸ்கொடகாமா
- மேற்கிந்திய தீவு - கிறிஸ்டோபர் கொலம்பஸ்
- அமெரிக்கா - அமெரிக்கோ வெஸ்புஷி
- பிலிப்பைன்ஸ் - பெர்டினன்ட் மகலன்
- கனடா - கபொட் சகோதரர்

22) மறுமலர்ச்சி காலத்தின்போது இலங்கையில் ஆங்கிலேயரால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள்,
- ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம் தோன்றியது.
- பணப்புழக்கம் அதிகரித்தல்.
- புகையிரதப் பாதைகள், பெருந்தெருக்கள் என்பன அமைக்கப்பட்டமை.
- கொழும்பு, காலி, திருகோணமலை போன்ற வர்த்தக நகர்கள் தோன்றியமை.

## இலங்கையும் மேற்குலகும்

01) ஆரம்ப காலந்தொட்டு ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே வர்த்தகத் தொடர்புகள் காணப் பட்ட மூன்று பாதைகளும்,
- கொன்ஸ்தாந்திநோபிள் நகரிலிருந்து பாரசீகம், மத்திய ஆசியா வழியாக சீனா வரையிலான பட்டுப்பாதை.
- கொன்ஸ்தாந்திநோபிளிருந்து மத்திய தரைக்கடல் வழியாக எகிப்து, செங்கடல் ஊடாக இந்து சமுத்திரத்திற்கு வந்த பாதை.
- கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்து பக்தாத் பாரசீகக்குடா வழியாக இந்தியாவின் மேற்குக் கரைக்கு வந்த பாதை.

02) கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்ட ஆண்டு - கி.பி 1453



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) கண்டி இராச்சியம் ஒல்லாந்தருடன் தொடர்பை ஏற்படுத்தியமைக்கான காரணம்,

- போர்த்துக்கேயரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒல்லாந்தரின் உதவியை பெறும்பொருட்டு.

04) கி.பி 1602 இல் இலங்கைக்கு வந்த ஒல்லாந்த தூதுவரும் அவர் சந்தித்த இலங்கை மன்னனும்,

- ஸ்பில் பேர்ஜன்
- முதலாம் விமல தர்மசூரியன்

05) தர்மபால மன்னனின் ஆட்சியின் இயல்புகள் சில,

- கி.பி 1551 – 1597 வரை கோட்டை இராச்சியத்தின் மன்னனாக செயற்பட்டமை.
- தனக்குப் பின்னர் போர்த்துக்கேயருக்கே கோட்டை இராச்சியம் என மரண சாசனம் எழுதி வைத்தமை.

06) வீதிய பண்டாரன் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டமைக்கான காரணங்கள்,

- தனது மகனான தர்மபால மன்னனுடைய ஆட்சியின்போதே போர்த்துக்கேய அரச மாளிகையைச் சூறையாடியமை.
- பொதுமக்களுக்கு இன்னல்கள் கொடுத்தமை.

07) வீதிய பண்டாரன் உயிரிழந்த இடம்,

- யாழ்ப்பாணம்

08) பின்வரும் போர்களுக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேயத் தளபதிகள்,

- தந்துறைப் போர் - பெரோசோபெஸ்த சூசா
- பலனப் போர் - தொன் ஜெனிரோனி மோத அசவேது
- ரந்தெனி வெல போர் - கொன்ஸ்தாந்தினு த சா

09) போர்ததுக்கேயரால் கண்டி மீது மேற்கொள்ளப்பட்ட அனைத்து படையெடுப்புக்களும் தோல்வியடைந்தமைக்கான காரணம்,

- கண்டி மக்கள் எப்போதும் அரசனுக்கு ஆதரவு வழங்கியமை.
- கண்டி மக்களின் போர் தந்திரம்.
- கண்டி இராச்சியத்தின் இயற்கை அமைப்பு.

10) 1638 கண்டி – ஒல்லாந்த உடன்படிக்கையில் உள்ளடங்கிய விடயங்கள்,

- போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு கண்டி அரசனுக்கு உதவ ஒல்லாந்தர் இணங்குதல்.
- ஒல்லாந்தருக்கு ஏற்படும் செலவைப் பணம், பொருள்கள் எனச் செலுத்த அரசன் உடன்படல்.
- போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளில் அரசன் விரும்பினால் ஒல்லாந்தப் படை தங்கியிருக்கலாம்.

11) 2ம் இராஜசிங்கன் ஒல்லாந்தரை இந்நாட்டிற்கு அழைத்தமைக்கான இரு நோக்கங்களும்,

- ஒல்லாந்தரின் உதவியுடன் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றுதல்.
- போர்த்துக்கேயரின் கீழிருந்து பிரதேசங்களைக் கண்டி இராச்சியத்துடன் இணைத்து சுதந்திர இலங்கையைத் தோற்றுவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) முதலாம் விமல தர்மசூரியனுக்குப் பின் கண்டி இராச்சியத்தில் முக்கிய இடம் வகித்த மன்னன்,
- 2ம் இராஜசிங்கன்

13) ஆரம்ப காலத்தில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம்மீது அக்கறை செலுத்துவதற்கு காரணமாய் அமைந்த வர்த்தகப் பொருள்கள்,
- கறுவா - மிளகு

14) 1519 இல் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன்,
- சங்கிலிய மன்னன்

15) யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சிச் சிறப்புகள் சில,
- ஆரியச் சக்கரவர்த்திகளால் ஆட்சி செய்யப்பட்டமை.
- சங்கிலிய மன்னனின் சிறப்பான ஆட்சி இடம்பெற்றமை.
- இராசரட்டை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின் தோற்றம்பெற்ற இராச்சியம்.

16) இலங்கையில் ஒல்லாந்தர் இராசதானிகள் அமைத்த சில இடங்கள்,
- யாப்பகூவ - பண்டுவஸ் நுவர - கொழும்பு
- றைகம - கம்பளை - கண்டி

17) கண்டி இராச்சியம் தொடர்பாக ஒல்லாந்தரின் குறிக்கோளில் காணப்படும் சிறப்பியல்புகள்,
- கண்டி மன்னனின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு பரிசில்களை வழங்கியமை.
- மன்னனுடன் கடிதத் தொடர்புகளை ஏற்படுத்தியமை.
- கண்டி இராச்சியத்துடன் சமாதானமாகச் செயற்பட்டமை.
- உபசம்பதா சடங்கின் பொருட்டு கப்பல்களை வழங்க உதவியமை.

18) ஒல்லாந்தர் ஆட்சிசெய்த சில இடங்கள்,
- யாழ்ப்பாணம் - பூநகரி - ஆனையிறவு
- முல்லைத்தீவு - கொட்டியாரம் - புத்தளம்
- கற்பிட்டி

19) போர்த்துக்கேயர் இலங்கையை ஆட்சி செய்த காலப்பகுதி,
- கி.பி 1505 – கி.பி 1658

20) ஒல்லாந்தரின் ஆட்சிக் காலம்,
- கி.பி 1658 – கி.பி 1796



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் - 11** **வரலாறு**

## கைத்தொழில் புரட்சி

01) பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் கைத்தொழில் புரட்சி பரவலடைந்த ஐரோப்பிய நாடுகள்
பிரித்தானியா, பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பெயின், ஒல்லாந்து

02) ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சி உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்
1. செல்வந்தர்கள் காணப்பட்டமை.
2. சனத்தொகை அதிகரித்தமை.
3. பண்டங்களுக்கான கேள்வி அதிகரித்தமை.

03) ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கு ஏதுவாய் அமைந்த பின்னணிக் காரணிகள்
1. பிரித்தானியா ஒரு தீவாகக் காணப்பட்டமை.
2. உள்நாட்டு வர்த்தகம் நாடு முழுவதும் பரவியமை.
3. பொதுச்சந்தை ஒன்று உருவானமை.
4. வரி விதிக்கப்பட்டிருந்தமை.
5. முடிவுப் பொருளை விநியோகிக்கும் வர்த்தக நிலையமாக விளங்கியமை.

04) பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி பரவிய மூன்று துறைகளும்
1. நெசவு 2. நிலக்கரி 3. இரும்புருக்கு

05) பிரித்தானியா தவிர்ந்த நிலக்கரி படிவுகள் அதிகளவு காணப்படும் நாடுகள்
- தென்வேல்ஸ், யோக்சயர், லங்காசயர்

06) நெசவுக் கைத்தொழில் தொடர்பான கண்டு பிடிப்புக்கள்
1. 1733 – ஜோன் கேயின் பறக்கும் நுனாழி
2. 1764 – ஜேம்ஸ் ஹகிரீவ்ஸ் இன் ஜெனி இயந்திரம்
3. 1769 – ரிச்சட் ஆக்ரைட்டின் நீர் வலுவினால் இயங்கும் நூல் நூற்கும் இயந்திரம்
4. 1779 – கொரம்டனின் மியூல் இயந்திரம்
5. 1785 – எட்மண்ட் காட்ரைட்டின் நீராவியால் இயங்கச் செய்யும் மியூல் இயந்திரம்

07) இரும்பு உருக்கு கைத்தொழில் தொடர்பான கண்டுபிடிப்புக்கள்
1. 1784 –ஹென்றி கோட்டின் ரோலர் இயந்திரம்.
2. 1856 – ஹென்றி பேஸ்மரின் இரும்பிலிருந்து கழிவுகளை அகற்றி உருக்கு உற்பத்தி செய்யும் முறை.

08) நிலக்கரிக் கைத்தொழில் தொடர்பான கண்டுபிடிப்புக்கள்
1. தோமஸ் நியு கொமனின் சுரங்கத்தைக் குளிரூட்டக் கூடிய நீராவியால் இயங்கும் இயந்திரம்.
2. ஜேம்ஸ் வோட்டின் செயற்றிறன் மிக்க நீராவி இயந்திரம்.
3. ஹம்ரி டேவியின் பாதுகாப்பு விளக்கு.

09) கைத்தொழில் புரட்சி பரவலடைந்த வேறு துறைகள்
1. போக்குவரத்து 2. தொடர்பாடல் 3. விவசாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) நிலக்கரியின் கழிவுகளில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டவை
   1. புடவைகளுக்கு நிறச்சாயமாகப் பயன்படுத்தப்பட்டமை.
   2. மருந்துகள்
   3. நறுமணப் பொருட்கள்
   4. கிருமி நாசினிகள்
   5. களை நாசனிகள்
   6. செயற்கைப் பசளை

11) மெக்கடம் முறை என்பது
   - வலுவான அத்திவாரமிட்டு பெரிய கற்களையும் மண்ணையும் பரப்பி அதன்மேல் கருங் கற்களைப் பரப்பி அவற்றைத் தட்டி மட்டப்படுத்தி பெருந்தெருக்களை அமைத்தல் மெக்கடம் முறை எனப்பட்டது.

12) போக்குவரத்து துறை வளர்ச்சியினை வெளிக்காட்டும் கண்டுபிடிப்புக்கள்
   1. 1811 – ஜோன் என்பவரின் பெருந்தெருக்களை அமைக்கும் மெக்கடம் முறை
   2. 1814 – ஜோர்ஜ் ஸ்டீவன்சனின் புகையிரத என்ஜின்
   3. 1807 – ரொபர்ட் புல்டனின் புகைப்படகு
   4. 1811 – ஹென்றி பெல்லின் புகைக் கப்பல்
   5. 1855 – டெம்லரின் மோட்டார் கார் (வண்டி)
   6. 1903 – ரைட் சகோதரர்களின் ஆகாய விமானம்

13) தொடர்பாடல் துறை வளர்ச்சியினை வெளிக்காட்டும் கண்டுபிடிப்புக்கள்
   1. 1876 – அலெக்சாண்டர் கிரகம் பெல்லின் தொலைபேசி
   2. 1844 – சாமுவேல் மோர்சின் தந்திமுறை
   3. 1895 – குக்லி மார்க்கோணியின் வானொலி
   4. ஜோன் லோகி பெயாட்டின் தொலைபேசி

14) விவசாயத்துறை வளர்ச்சியினை வெளிகாட்டும் கண்டுபிடிப்புக்கள்
   1. ஜென்ரோட்டல் என்பவரின் ஏர் பூட்டப்பட்ட குதிரை மூலம் வரிசையாகப் பயிரிடும் முறை.
   2. ரொபட் பெக் வெல்வின் செம்மறி ஆடுகள் இனப்பெருக்கம் செய்யும் முறை.

15) கைத்தொழில் புரட்சியின் போது விவசாயத்துறை வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்
   1. பாரிய விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டமை.
   2. சுழற்சி முறை, நிலமாற்று முறை பயிர்ச்செய்கை.
   3. விலங்கு வளர்ப்பில் புதிய தொழிநுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டமை.
   4. புதிய விவசாய முறைகளும் நவீன உபகரணங்களின் பயன்பாடும்.

16) ஏர் பூட்டப்பட்ட குதிரைகள் விவசாயச் செய்கையில் பயன்படுத்தப்பட்டதனால் ஏற்பட்ட நன்மைகள்
   - விதைப்பதற்கு தேவையான விதையின் அளவைக் குறைத்துக் கொள்ளல்.
   - அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளல்.

17) முதலாம் உலக மகாயுத்தத்தின் ஆரம்பத்தில் ஜேர்மனி தவிர்ந்த கைத்தொழில் புரட்சி பரவிய நாடுகள் சில,
   - பிரான்ஸ் - பெல்ஜியம் - ஆஸ்திரியா - ஹங்கேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) கைத்தொழில் புரட்சி ஏனைய நாடுகளில் பரவுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்
- உலகம் முழுவதும் சனத்தொகை துரித வளர்ச்சியடைந்தமை.
- ஐரோப்பாவில் போக்குவரத்து துறையில் ஏற்பட்ட வளர்ச்சி.
- பிரான்சிலும் ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டமை.

19) இருபதாம் நூற்றாண்டாகும் போது கைத்தொழில் வளர்ச்சியடைந்த ஆசிய நாடுகள்
- யப்பான், சீனா, இந்தியா, இலங்கை

20) கைத்தொழில் புரட்சி பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய துறைகள்
1. அரசியல் துறை
2. பொருளாதார துறை
3. சமூகத் துறை

21) அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்
1. ஏழை, பணக்கார வகுப்பினர் தோற்றம் பெற்றமை.
2. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் கீழ்மட்டத்தில் இருந்தமை.
3. பொதுவுடமை வாதம் தோற்றம் பெற்றமை.
4. தாராண்மை வாதம் தோற்றம் பெற்றமை.
5. அரசின் தலையிடாக் கொள்கை.
6. குடியேற்ற வாதக் கொள்கை.

22) தலையிடாக் கொள்கை என்பது
- நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்கும் அரசின் தலையீட்டை குறைந்தளவினதாக்கும் கொள்கை அரசு தலையிடாக் கொள்கை எனக் கருதலாம்.

23) பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்
1. பணக்கார வகுப்பினர் தோற்றம் பெற்றமை.
2. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைந்தமை.
3. பாரிய நகரங்கள் தோற்றம் பெற்றமை.
4. நகர மயமாக்கல் வளர்ச்சி.
5. கைத்தொழில் நகரங்கள் பல உருவாகின.
6. சூழல் மாசடைந்தமை.

24) 20ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற இரு செல்வந்த பிரிவினரும்
1. நில உடமைப் பிரபுக்கள்.
2. மத்திய தர வகுப்பினரான வர்த்தகர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், வங்கியாளர்கள், பொறியிலாளர்கள், சட்டத்தரணிகள், ஒப்பந்தகாரர்கள்.

25) சேரிப்புறங்களில் வாழ்ந்த மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள்
1. வறுமை.
2. குறைந்த சம்பளம்.
3. குறைந்த வாழ்க்கைத் தரம்.
4. வேலையின்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26) சேரிப்புற மக்கள் மத்தியில் காணப்பட்ட தவறான பழக்க வழக்கங்கள்
1. மதுபாவனை பயன்பாடு.
2. தவறான செயல்களில் ஈடுபடல்.
3. நெறி பிறழ்ந்த வாழ்க்கை.

27) கைத்தொழில் புரட்சியின் விளைவால் ஏற்பட்ட தீய விளைவுகள்
1. சூழல் மாசடைதல்.
2. நீர் மாசடைதல் (தொழிற்சாலை கழிவுகள் நீருடன் கலத்தல்).
3. வளி மாசடைதல்.

28) இலங்கையில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்
1. பெருந்தெருக்கள் அறிமுகம் செய்யப்பட்டமை.
2. இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்பட்டமை.
3. தொழிற்சாலைகள் தோற்றம் பெற்றமை.
(உ + ம்) கோப்பி விதைகள் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை

29) எட்வெட் பாண்ஸ் காலத்தில் அமைக்கப்பட்ட பிரதான வீதிகள்
- குருணாகல் - கண்டி
- தம்புள்ள - கண்டி
- கொழும்பு - கண்டி

30) 1815 இல் இலங்கையில் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்ட மாவட்டங்கள்
- கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை

## இலங்கையில் பிரித்தானியர் அதிகாரத்தை நிலை நாட்டல்

01) 17ம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் இந்தியாவில் கிழக்கிந்திய கம்பனிகளை அமைத்த பிரதேசங்கள்
- சென்னை, மும்பை, கல்கத்தா

02) 1664 இல் பிரான்சியர் இந்தியாவில் தமது வர்த்தக நிலையங்களை அமைத்த பிரதேசங்கள்
- பாண்டிச்சேரி
- காரைக்கால்
- சந்திரநாகூர்

03) இலங்கை மீது பிரித்தானியரின் கவனம் ஈர்க்கப்பட்டமைக்கான காரணங்கள்
- இலங்கையின் அமைவிடம்
- இலங்கையில் கறுவா உட்பட பெறுமதி வாய்ந்த வர்த்தகப் பொருட்கள் கிடைக்கப் பெற்றமை.

04) திருகோணமலை துறைமுகத்தின்மீது ஆங்கிலேயரின் கவனம் ஈர்க்கப்பட்டமைக்கான காரணங்கள்
- திருகோணமலை துறைமுகம் வங்காள விரிகுடாவை நோக்கி அமைந்திருந்தமை.
- இந்தியாவின் கிழக்குக் கரையோரத்தில் ஆங்கிலேயரின் கடற்படைப் பலத்தை பாதுகாத்துக் கொள்ள இத்துறை முகத்தின் அமைவிடம் முக்கியத்துவமாயிருத்தல்.
- வடகிழக்குப் பருவக்காற்றுக் காலத்தில் கப்பல்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு திருகோண மலைத் துறைமுகத்தை பயன்படுத்திக்கொள்ள முடியுமாயிருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05) ஆங்கிலேயர் ஆசியாவில் மேற்கொண்டிருந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு இலங்கையின் முக்கியத்துவம்

- பல வகையான வர்த்தகப் பொருட்களும் பெறுமதி வாய்ந்த வாசனைத் திரவியங்களும் பெறக் கூடியதாக இருத்தல்
- பிரித்தானியருக்கு அவசியமான பொருட்களுக்கான சந்தையை இலங்கையிலேயே பெறமுடிந்தமை.

06) ஆங்கிலேயருக்கும் கண்டி இராச்சியத்துக்கும் இடையிலான தூதுத் தொடர்புகள்

- 1862ல் ஜோன்பைபஸ் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனைச் சந்தித்தல்.
- 1782ல் ஹியுபொயிட் இராஜாதி இராஜசிங்கனைச் சந்தித்தல்.
- 1795ல் ரொபட் அன்ட்றூஸ் இராஜாதி இராஜசிங்கனைச் சந்தித்தல்.

07) பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றிய விதம்,

- 1795 ஆகஸ்ட் மாதம் - திருகோணமலைத் துறைமுகம் அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு, முல்லைத்தீவு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், மன்னார்
- 1796 பெப்ரவரி மாதம் - கொழும்பு, காலி கோட்டைகள்.

08) 1797 ஆங்கில கிழக்கிந்திய கம்பனிக்கு எதிராக கலகம் ஏற்பட்டமைக்கான காரணங்கள்

- புதிய வரிகளை விதித்தமை. (உ+ம் : உப்புவரி, கள்ளுவரி, புகையிலை, மீன் வரி)
- வரி வசூலிப்பதற்கு அவுமில்தார்களை நியமித்து விட்டு உள்நாட்டு உத்தியோகத்தர்களை நீக்கியமை.
- வரியைப் பணமாக அறவிட்டமை.

09) மியூரன் குழுவினரின் பரிந்துரைகள்

- வரி வசூலிப்பதற்கு சுதேச உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல்.
- தெங்கு வரிகள் உட்பட புதிய வரிகள் நீக்கப்படல்.
- வரி வசூலிப்பதற்கும் நீதி வழங்குவதற்கும் வெவ்வேறான உத்தியோகத்தர்கள் அமர்த்தப் படல்.
- ஒல்லாந்தரின் நீதிமன்ற முறையை மீண்டும் தாபித்தல்.

10) இரட்டை ஆட்சி என்பது - இலங்கையின் கரையோரப் பிரதேச

- பொருளாதார நடவடிக்கைகள் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியாலும் அரசியல் நடவடிக்கைகள் பிரித்தானிய அரசாங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்டமை இரட்டை ஆட்சி ஆகும்.

11) 1803 இல் கண்டி மீதான ஆக்கிரமிப்பதற்கான காரணங்கள்

- கரையோர மக்கள் கண்டி மன்னனையே தமது ஆட்சியாளராக கருதியமை.
- கரையோரத்தில் இடம் பெறும் கிளர்ச்சிகளுக்கு கண்டி மன்னன் உதவுவதாக ஏற்பட்ட சந்தேகம்.
- கொழும்பு - திருகோணமலை தரைமார்க்க தொடர்புகளுக்கு கண்டி இராச்சியம் தடையாக இருந்தமை.
- பிரித்தானியருக்கு எதிராக மன்னன் பிரான்சியரின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் ஆட்சியில் கண்டியில் காணப்பட்ட அதிகாரப் போட்டிகள்
- அரசனுக்கும் பிரதானிகளுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள்.
- அரசனுக்கும் பௌத்த குருமாருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள்.
- பிரதானிகளிடையே ஏற்பட்ட முரண்பாடுகள்
- அரசனுக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள்.

13) கண்டி உடன்படிக்கை என்பது
- 1815 மார்ச் 2ம் திகதி கண்டி அரசசபை (மகுல்மடுவ) மண்டபத்தில் ஆங்கிலேய ஆட்சியின் சார்பாக ஆளுநர் பிரௌன்றிக் கண்டி மக்கள் சார்பாக அதன் பிரதானிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம்.

14) 1818 சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த காரணிகள்
- சுதந்திரத்தை இழந்தமையும் அரசன் இல்லாமை பற்றிய மனவேதனையும்
- சமய, கலாசார பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் உருவானமை.
- மலைநாட்டு மக்களுக்கு ஏற்பட்ட தாக்கம்.

15) 1818 போராட்டத்திற்கான உடனடிக் காரணம்
- சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட வெல்லச பிரதேச மடிகே முஹாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டமை.

16) போராட்டம் பரவலடைந்த பிரதேசங்கள்

1. தும்பறை
2. ஹேவாஹெட்ட
3. ஹரிஸ் பத்துவ
4. மாத்தளை
5. நுவர கலாவிய
6. ஏழு கோறளை
7. சப்ரகமுவ

17) போராட்டத் தலைவர்கள்

1. கெப்பட்டி பொல நிலமே
2. மடுகல்லே திஸாவை
3. பிலிமத்தலாவை
4. கிவுலேகெதர மொஹட்டால
5. பூட்டாவே ரட்டால

18) 1818 போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்
1. போராட்டம் முறையாக திட்டமிடப்படாமை.
2. ஆங்கிலேயர் கையாண்ட கடுமையான அடக்கு முறைகள்.
3. போராட்டத் தலைவர்களிடையே காணப்பட்ட தனிப்பட்ட மனத்தாங்கல்கள்.
4. நீண்ட காலப் போராட்டத்திற்கு தேவையான ஆயுதங்களோ வளங்களோ கண்டியரிடம் காணப்படாமை.
5. அரசனாகத் தோன்றிய துரைசாமி போலியானவன் எனத் தெரிய வந்தமை.

19) 1818 போராட்டத்தின் விளைவுகள்
1. போராட்டத் தலைவர்களான கெப்படிபொல, மடுகல்லே போன்றோர் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு சிரச் சேதம் செய்யப்பட்டமை.
2. எஹெலபொல உள்ளிட்ட இன்னொரு பிரிவினர் மொரீசியஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.
3. 1815 கண்டி ஒப்பந்தம் கைவிடப்பட்டு 1818 கண்டி பிரகடனம் உறுதி செய்யப்பட்டது.
4. கண்டி பிரதானிகளின் அதிகாரங்களும் சலுகைகளும் நீக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) 1848 சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள்
1. கோல்புறுக் அரசியல் சீர்திருத்தங்களின் செல்வாக்கு.
2. அரசின் நிலக் கொள்கை.
3. கிராம சபைகள் செயலற்றுப் போனமை.
4. புதிய நீதிமன்ற முறை.
5. அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பு விலகிச் சென்றமை.
6. அரசின் புதிய வரிக் கொள்கை.

21) ஆளுநர் டொரிங்டனால் விதிக்கப்பட்ட புதிய வரிகள்
- முத்திரை, நாய்வரி, தோணிவரி, துப்பாக்கிவரி, வண்டி வரி, ஆள்வரி, கடைவரி

22) 1848 போராட்டத்திற்கான உடனடிக் காரணம்
- ஆளுநர் டொரிங்டனின் புதிய வரிக்கொள்கை

23) போராட்டத் தலைவர்கள்
1. கொங்காலே கொட பண்டா
2. வீர புரன் அப்பு
3. டிங்கிரால
4. ஹடக பொல தேரர்

24) போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்
1. முறையாக திட்டமிடப்படாமை.
2. கடஹபொல, புரன் அப்பு, டிங்கிரால போன்றோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
3. ஆளுநர் டொரிங்டன் மார்ஷல்லோ எனும் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தமை.

25) போராட்டத்தின் விளைவுகள்
1. ஆளுநர் டொரிங்டன் பதவி நீக்கப்பட்டு இங்கிலாந்திற்கு திருப்பி அனுப்பப்பட்டமை.
2. போராட்டத்தின் முடிவில் அதற்கான காரணங்களை கண்டறிய பேலி என்பவரின் தலைமையில் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டமை.
3. கடைவரி, நாய் வரி, என்பவை நீக்கப்பட்டமை.
4. முத்திரை வரி, துப்பாக்கி வரி, ஆள் வரி என்பவை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.
5. விவசாயத்தையும் நீர்ப்பாசன நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை.

## இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி

01) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை மட்டும் ஆட்சிசெய்த இரு ஐரோப்பிய இனத்தவரும் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்த ஐரோப்பிய இனத்தவரும்
- கரையோரப் பிரதேசம் - போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்
- இலங்கை முழுவதும் - பிரித்தானியர் (ஆங்கிலேயர்)

02) 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தேசிய எழுச்சியை உருவாக்கிய 3 சமயங்கள்
1. பௌத்தம்
2. இந்து
3. இஸ்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) 1848 இன் பின் இலங்கையில் முதன்மை பெற்ற நிகழ்வுகளின் இரு கட்டங்கள்
1. 1850 – 1915 : சமய தேசிய மறுமலர்ச்சி இயக்க நிகழ்வுகள்
2. 1915 – 1948 : அரசியல் போராட்ட நிகழ்வுகள்

04) கீழ் குறிப்பிடப்படும் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த மிஷனரியினர்கள்
1. 1804 – லண்டன் மிஷனரி
2. 1812 – பெப்டிஸ் மிஷனரி
3. 1814 – 1815 வெஸ்லியன் மிஷனரி
4. 1816 – அமெரிக்கன் மிஷனரி

05) மிஷனரியினர் தமது சமயத்தைப் பரப்புவதற்கு தெரிவு செய்த துறைகள்
1. எழுத்து
2. சொற்பொழிவு
3. கல்வி

06) கீழ் குறிப்பிடப்படும் மிஷனரியினர் தமது சமயத்தைப் பரப்பிய பிரதேசங்கள்
1. சேர்ச் மிஷனரி - கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார், கண்டி
2. பெப்டிஸ்ட் மிஷனரி - கொழும்பு
3. அமெரிக்கன் மிஷனரி - யாழ்ப்பாணம், உட்பட வட பிரதேசம்
4. வெஸ்லியன் மிஷனரி - வடக்கு, கிழக்குப் பகுதி

07) I. மிஷனரியினர் எதிர்கொண்ட பிரச்சினைகளும் II. அவர்களிடம் வெளியீடுகள் தொடர்பாக காணப்பட்டதிறன்களும்
I. பிரச்சினை - மொழி
II. திறன்கள் - தேவையான பணம், ஒழுங்கமைப்பு

08) கீழ் குறிப்பிட்ட வெளியீடுகளின் அச்சகத் தாபனங்களும் அவை அச்சிடப்பட்ட காலப்பகுதியும்
1. உரகல - பெப்டிஸ் மிஷனரி – 1842
2. மாசிக்க தேக்க - சேர்ச் மிஷனரி – 1832
3. லங்கா நிதானய - சமய பூஸ்திகா சங்கம் - 1840

09) தமிழ் சிங்களப் பிள்ளைகள் மிஷனரிப் பாடசாலைகளுக்கு சென்றமைக்கான முக்கிய இரு காரணங்கள்
1. ஆங்கில மொழி அறிவைப் பெறுவதற்கு.
2. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அரசாங்கப் பதவியைப் பெறுவதற்கு.

10) பின்வரும் பௌத்த பிரிவெனாக்களைத், தோற்றுவித்தவர்களும், தோற்றுவித்த காலப்பகுதியும்
1. இரத்மலானை பரமதம்ம பிரிவெனா – வலானே சித்தார்த்த தேரர் - 1841
2. மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனா - ஹிக்கடுவ சுமங்கல தேரர் - 1873
3. பேலியகொடை வித்தியாலங்கார பிரிவெனா – தர்மலோக்கதேரர் - 1875

11) பிரிவெனாக்கள் மூலம் கற்பிக்கப்பட்ட மொழிகள்
- சிங்களம், சமஸ்கிருதம், பாளி

12) இலங்கையில் பௌத்தர்களால் அமைக்கப்பட்ட 4 அச்சகங்கள்
1. லங்கா பிதவ விஷ்ரத அச்சகம்
2. கவடகதிக; அச்சகம்
3. சுதர்ஷன அச்சகம்
4. சரசவிசந்தரெச அச்சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) பௌத்தர்களால் வெளியிடப்பட்ட நூல்கள்
1. லக்மின பஹறன 2. லங்கா லோகய 3. சரசவி சந்தரெச
4. சிங்கள ஜாதிய 5. சிங்கள பௌத்தயா

14) பஞ்சமா விவாதங்கள் நடைபெற்ற இடங்களும், அவை இடம் பெற்ற காலங்களும்
1. பத்தேகம - 1864 2. வராகொட - 1865 3. உதன்விட்ட - 1866
4. கம்பளை - 1871 5. பாணந்துறை - 1873

15) பஞ்சமா விவாதங்களுக்கு தலைமை தாங்கியவர்கள்
மீதெட்டுவத்த குணானந்த தேரர், ஹிக்கடுவ சுமங்கள தேரர், வஸ்கடுவே சுபுதிதேரர், பொத்துவில இந்திரஜோதி தேரர், இரத்மலானை தம்மாலோகதேரர்

16) I. பௌத்த பிரம்மஞான சங்கம் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இடம் II. அதன் கிளைகள் உருவாக்கப்பட்ட நகரங்கள்
I. கொழும்பு II. காலி, கண்டி, இரத்தினபுரி

17) பௌத்த பாடசாலைகளை உருவாக்குவதில் முன்னிலையில் செயற்பட்ட நால்வர்
1. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் 2. ஹிக்கடுவ சுமங்களதேரர்
3. இரத்மலானே ஸ்ரீ தர்மலோக தேரர் 4. வஸ்கடுவே ஸ்ரீ சுபுதிதேரர்
5. மீகெட்டுவத்தே குணானந்த தேரர்

18) இலங்கையின் பின்வரும் முக்கிய நகரங்களில் தோற்றம் பெற்ற பௌத்த பாடசாலைகள்
1. கொழும்பு – ஆனந்தா கல்லூரி
2. கண்டி - தர்மராஜா கல்லூரி
3. காலி - மஹிந்த கல்லூரி
4. மாத்தளை - விஜய கல்லூரி
5. கம்பளை - ஜினராஜ வித்தியாலயம்
6. நாவலப்பிட்டி – அநுருத்த வித்தியாலயம்

19) இலங்கை மக்களின் அறிவு வளர்ச்சியடைந்தமைக்கு பங்களிப்பு செய்த மூல காரணிகள்
1. நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியீடுகள் மேற்கொள்ளப்பட்டமை.
2. மக்களின் எழுத்தறிவு மேம்பட்டமை.

20) தேசியவாதத்தையும் தேசியப் பற்றையும் உருவாக்கும் வண்ணம் செயற்பட்ட தலைவர்கள்
1. அநாகரிக தர்மபால
2. பியதாஸ சிறிசேன
3. வலிசிங்க ஹரிச்சந்திர
4. ஜோன்த சில்வா

21) அநாகரிக தர்மபால தேசியப்பற்றை வளர்க்கும் நோக்கில் மேற்கொண்ட செயற்பாடுகள்
1. புதிய சிந்தனைகளை முன்வைத்தார்.
2. பகிரங்க சொற்பொழிவுகளை நிகழ்த்தி சிங்கள பௌத்தயா, மஹா போதி போன்ற சஞ்சிகைகளிற்கு கட்டுரை எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) பியதாஸ சிறிசேன மேற்கத்திய நாகரீகத்தை தழுவிக் கொண்டவர்கள் தொடர்பாக எதன் மூலம் விமர்சனங்களை வெளியிட்டார்?

1. நாவல்கள் 2. சிங்கள ஜாதிய எனும் பத்திரிகை மூலம்

23) 19ம் நூற்றாண்டின் பின் வரலாற்று மூலாதாரங்களைத் தேடிக் கண்டறியும் நோக்கில் தொல்பொருள் அகழ்வு ஆய்வுகளில் ஈடுபட்ட ஐரோப்பிய கல்விமான்கள்,

1. ஜோர்ஜ் டர்னர் 2. T.S. டேவிஸ் 3. H.C.B. பெல் 4. ஹென்றி பாக்கர்

24) கீழ்க் குறிப்பிடப்படும் புனித இடங்களை பாதுகாக்கும் நோக்கில் செயற்பட்டவர்கள்

1. அனுராதபுரத்தின் புனித இடங்கள் - வலிசிங்க ஹரிச்சந்திர
2. இந்தியாவின் புத்தகயா - அநாகரிக தர்மபால

25) இலங்கையில் மதுவின் தீமைகளை எடுத்துக் காட்டியவர்களும் அதற்குப் பயன்படுத்திய ஊடகங் களும்

1. அநாகரிக தர்மபால- பகிரங்க சொற்பொழிவு, பத்திரிகைகளில் எழுதுதல்
2. பியதாஜ சிறிசேன - நாவல்களில் பல்வேறு கதாபாத்திரங்களின் மூலம்
3. ஜோன் த சில்வா - நாடகம்

26) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் இந்து சமயப் பணிகள்

1. இந்துமத கலாசார மறுமலர்ச்சி இயக்கத்திற்கு தலைமை தாங்கினார்.
2. யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அச்சகத்தை நிறுவினார்.
3. "உதயபானு" எனும் பத்திரிகை மூலம் மக்களிற்கு விழிப்பூட்டினார்.

27) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பின் இந்து கலாசார மறுமலர்ச்சி இயக்கத்தினை முன்னெடுத்த இருவர்

1. சேர்.பொன். இராமநாதன்
2. சேர்.பொன். அருணாசலம்

28) M.C.M சித்திலெப்பையின் இஸ்லாமிய மறுமலர்ச்சி செயற்பாடுகள்

1. ஆங்கிலத்தையும் அரபியையும் மாணவர்கள் கற்பிப்பதற்கு ஊக்குவித்தார்.
2. 1882 இல் முஸ்லிம் நேசன் எனும் பத்திரிகையை பிரசுரித்தார்.
3. முஸ்லிம் மாணவர்களின் நலனிற்காக கொழும்பு ஸாஹிரா கல்லூரியை ஆரம்பித்தார்.
4. முஸ்லிம் கல்விச்சபை அமைப்பை தோற்றுவித்தார்.
5. மதரஸா எனும் சமயப் பாடசாலையை புனரமைத்தார்.

29) பின்வரும் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள்

1. 1915 இல் இராணுவச் சட்டத்தினைப் பிரகடனப்படுத்தி பௌத்தர்களுக்கு எதிராக அடக்கு முறையைப் பிரயோகித்தபோது குரல் கொடுத்தவர் - சேர்.பொன் இராமநாதன்
2. 1919 இல் தேசிய சங்கத்தை உருவாக்கி தலைமை தாங்கியவர் - சேர்.பொன்.அருணாசலம்
3. 1833 இல் எகிப்திலிருந்து நாடுகடத்தப்பட்டு இலங்கை வந்து இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக் கத்திற்கு பக்கத்துணையாக செயற்பட்டவர் - ஒராபி பாஷா

30) D.P ஜாயாவின் பணிகள்

1. முஸ்லிம்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அக்கறை காட்டினார்.
2. முஸ்லிம் மாணவர்களுக்காக பாடசாலைகளை அமைப்பதில் முன் நின்று செயற்பட்டார்.
3. அரசியல் துறையிலும் ஈடுபட்டு முதலாவது அமைச்சரவையில் இடம்பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) ஹென்றி ஸ்ரில் ஒல்கொட்டினால் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் கல்லூரிகள்
1. கொழும்பு விசாகா 2. கொழும்பு மியூசியஸ் 3. கரி சங்கமித்தா

32) இலங்கையில் ஆட்சி பீடம் அமைத்த ஐரோப்பிய இனத்தவர்களையும் அவர்களால் பரப்பப்பட்ட மதங்களும்
1. போர்த்துக்கேயர் - கத்தோலிக்கம்
2. ஒல்லாந்தர் - புரட்டஸ்தாந்து
3. ஆங்கிலேயர் - கிறிஸ்தவம் (அங்கிலிக்கன்)

33) இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பிய இனத்தவர்களும், அவர்கள் வருகை தந்த காலப்பகுதியும்
1. போர்த்துக்கேயர்- 1505
2. ஒல்லாந்தர் - 1638
3. ஆங்கிலேயர் - 1796

34) இலங்கை மக்கள் மிஷனரிக் கல்வி முறையை எதிர்த்தமைக்கான காரணங்கள்
1. தாய்மொழிக் கல்வி நிலையங்கள் செயலிழந்தமை.
2. மிஷனரி அமைப்புக்களின் சலுகையால் இலங்கையர்கள் தமது சமயத்தைக் கைவிட்டு கிறிஸ்தவ சமயத்தை தழுவிக் கொண்டமை.
3. பௌத்த இந்து மதங்கள் சிலைகளை வணங்குபவர்கள் என இழிவுபடுத்தியமை.
4. மிஷனரிக் கல்வி முறையால் எமது நாட்டின் பாரம்பரிய கலாசாரம் பாதிக்கப்பட்டமை.

35) பின்வரும் நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்கள்
1. பௌத்த வாலிப சங்கத்தை உருவாக்குவதில் முன்னோடியாக செயற்பட்டவர்
- D.P ஜெயதிலக (1898)
2. பேர்ஸிகாஸ் அடிகளுடன் இணைந்து பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தவர்
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
3. உண்மையை விட சிறந்த சமயம் இல்லை என்பதற்கு இணங்க செயற்பட்டவர்
- ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்

## பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்

01) 1829, 1830ம் ஆண்டுகளில் இலங்கைக்கு வருகை தந்தவர்களும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்வுகளும்
1. 1829 - H.G கோல்புறூக் - இலங்கையின் அரசியல், பொருளியல் செயற்பாடுகளின் ஆராய்வுகள்
2. 1830 - சார்ல்ஸ் H. கமரன் - நீதிமன்றம் மற்றும் சட்ட நடவடிக்கை தொடர்பான பரிசீலனை

02) கோல்புறூக் சீர்திருத்தத்தின்கீழ் இலங்கையின் அரசியல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்
1. சட்டவாக்க, சட்ட நிருவாகக் கழகங்களை அமைத்தல்.
2. மலைநாடும் கரையோரப் பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே ஆட்சிமுறையின்கீழ் கொண்டு வரப்படல்.
3. நாடு 5 மாகாணங்களாகப் பிரிக்கப்படல்.
4. கட்டாய அரச கரும முறை ஒழிக்கப்படல்.
5. அரசின் வர்த்தக ஏகபோக முறை அகற்றப்பட்டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03)கோல்புறூக் சீர்திருத்தத்திற்கமைய இனவாரிப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் உத்தியோகப் பற்றற்றோராக நியமிக்கப்பட்டவர்கள்

1. ஐரோப்பியர் - 03
2. தமிழர் - 01
3. சிங்களவர் - 01
4. பறங்கியவர் - 01

04)1833 இல் அமைக்கப்பட்ட சட்ட நிருவாகக் கழகத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள்

1. குடியேற்றச் செயலாளர்
2. பொருளாளர்
3. கணக்காளர்
4. அளவையாளர்
5. கொழும்பு சுங்க அறவீட்டாளர்

05)சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோக சார்பற்ற ஐரோப்பியர் மூவரினதும் தேவைகளாக கருதப்பட்டவை

பெருந்தோட்டத் துறைக்கான பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், உட்கட்டமைப்பு வசதிகள் யாவற்றையும் மேம்படுத்த வேண்டிய தேவை.

06)ஐரோப்பிய முதலீட்டாளர்களின் போராட்டங்களில் காணப்பட்டவை

1. சட்டவாக்க கழகத்தில் கேள்வி கேட்பது.
2. ஆலோசனை சமர்ப்பிப்பது.
3. பத்திரிகைகளில் கவனயீர்ப்புக் கட்டுரைகள் எழுதுவது
4. போராட்டங்களை மேற்கொள்வதற்கான அமைப்புக்களை தோற்றுவிப்பது.

07)1865, 1889ம் ஆண்டுகளின் முக்கிய நிகழ்வுகளாகக் கருதப்படுபவை

1. 1865 – ஜோர்ஜ்வோல் அவர்களால் இலங்கையர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.
2. 1889 – சட்டவாக்க கழகத்திற்கு உத்தியோக சார்பற்றோர் எண்ணிக்கை 8 ஆக அதிகரிக்கப்பட்டு முஸ்லிம் ஒருவரும் மலைநாட்டு சிங்களவர் ஒருவரும் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டனர்.

08)20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தோடு தொடர்புடைய இரு மாற்றங்களும்

1. பழைய பிரபுத்துவ வர்க்கம் மறைந்தது.
2. புதிய மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றது.

09)புதிய யாப்புச்சீர்திருத்தம் தேவை என குடியேற்ற நாட்டுச் செயலாளரிடம் கோரிக்கை முன்வைத்த சங்கத்தவர்கள்

1. கரைநாட்டு உற்பத்தியாளர் சங்கம்
2. யாழ்ப்பாணச் சங்கம்
3. சிலாபச்சங்கம்

10)அச்சங்கங்களின் முக்கிய கோரிக்கைகள் ஆவன

1. சட்டவாக்க கழகத்தில் உத்தியோகச் சார்பற்றோரின் அங்கத்துவத்தை அதிகரித்தல்
2. இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீக்குதல்
3. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறைக்கேற்ப வாக்குரிமை மூலம் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்.
4. சட்டவாக்க கழகத்தின் அதிகாரங்களை அதிகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11)குறூமக்கலம் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் ஆவன

1. சட்டவாக்க கழகத்திற்கு முதன்முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப் பட்டமை.
2. இலங்கையருக்காக கல்வி கற்ற பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டமை.
3. தொடர்ந்தும் உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மையோராக இருந்தமை.

12)மது ஒழிப்பு இயக்கத்தின் முக்கிய பண்புகள் 4 ஐக் குறிப்பிடுக.

1. அரசாங்கத்தின் மதுவரிக் கொள்கைக்கு எதிராக பொது மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்க முயற்சித்தமை.
2. மத்திய தர வர்க்கத்தினரான ஆங்கிலம் கற்றவர்களுக்கும் சமய கலாசார மறுமலர்ச்சி இயக்கத்தினரும் ஒரே கொள்கை அடிப்படையில் செயற்பட்டமை.
3. கொழும்பில் மது ஒழிப்புச்சபை ஒன்றை அமைத்து நாடு பூராகவும் அதன் கிளைகளைத் தோற்றுவித்து ஒன்றிணைந்த வாய்ப்பு ஒன்றை உருவாக்கிக் கொண்டமை.
4. மது ஒழிப்பு இயக்க மேடைகளில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்தமை.

13)மது ஒழிப்பு இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள்

1. D.S சேனநாயக்க
2. F.R சேனநாயக்க
3. D.P ஜயதிலக
4. அநகாரிக தர்மபால
5. பியதாஸ சிறிசேன
6. ஜோன் த . சில்வா

14)மது ஒழிப்பு இயக்கத்தினூடாக அரசியலுக்கு வந்த தலைவர்கள்

1. D.S சேனநாயக்க 2. F.R சேனநாயக்க 3. D. P ஜயதிலக

15)பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரம்பெறும் நோக்கில் பிரித்தானியருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட இந்திய தேசிய தலைவர்கள்

1. சுரேந்திரநாத் பானர்ஜி
2. பாலகங்காதர திலகர்
3. மகாத்மகாந்தி
4. ஜவர்கலால் நேரு

16)இலங்கை அரசியல் வளர்ச்சியில் இந்திய தேசிய காங்கிரஸின் தாக்கங்கள்

1. இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் இலங்கைக்கு வருகை தந்து சொற்பொழிவுகளை நிகழ்த்தியமை 1927 மகாத்மகாந்தியின் இலங்கை வருகை.
2. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முற்போக்கான அரசியல் யாப்புக் கொள்கை இந்தியர்களுக்கு கிடைத்தமை.
3. இந்தியர்களின் போராட்ட வடிவங்களை இலங்கையர்கள் கற்றுக் கொண்டமை.
4. இந்தியாவில் பல அரசியல் இயக்கங்கள் போராட்டங்களை மேற்கொண்டதை அறிந்து கொண்டமை.
5. தீவிரவாத, மிதவாத கொள்கைகள் ஊடான போராட்ட வடிவங்களைக் கற்றுக் கொண்டமை.

17)20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்தினர் அரசியல் போராட்டத் தில் ஈடுபட்டமைக்கான காரணங்கள்

1. இந்தியாவில் தேசிய இயக்கம் வளர்ச்சியடைந்தமையை முன்மாதிரியாகக் கொண்டமை.
2. வெளிநாடுகளில் உயர்கல்வி பெற்று தாராளவாதம் பற்றிய தெளிவான அறிவு பெற்றிருந்தமை.
3. தமது கல்வித் தகைமைகளுக்கேற்ப அரசியலிலும் சமூகத்திலும் தலைமைத்துவம் பெற எண்ணியமை.
4. தேசிய இயக்கங்களில் தலைமைத்துவம் செலுத்தியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18)இலங்கைத் தேசிய இயக்கம் தாபிக்கப்படும் செல்வாக்கு செலுத்திய காரணங்கள்

1. சமய புனருத்தாரன, மது ஒழிப்பு இயக்கங்களின் செயற்பாடுகள்
2. 1915 சிங்கள முஸ்லிம் கலவரம்
3. 1915 இல் பிரித்தானியர் இந்தியாவிற்கு வழங்கிய மொன்டேகு செம்ஸ் போர்ட் சீர்திருத்தம்.
4. இந்திய தேசிய காங்கிரசின் கொள்கையை பின்பற்றியமை.

19)தேசிய காங்கிரசின் தலைமைத்துவத்தில் காணப்பட்ட 3 பகுதியினர்

1. பழைமை பேணும் பகுதியினர்
2. மத்தியதர வர்க்கத்தினர்
3. தீவிரப் பகுதியினர்

20)இலங்கை தேசிய காங்கிரசின் முக்கியத்துவங்கள்

1. பல்வேறு தலைவர்களைக் கொண்ட பரந்த அமைப்பு.
2. இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரும் தேசிய இயக்கம்.
3. தேசிய இன ஒற்றுமையைக்காட்டி மக்களிற்கு நன்மை பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்பட்டமை.
4. 1920, 1924, 1931 சீர் திருத்தங்களைப் பெற்றுக் கொடுத்தமை.

21)மனிங் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் முக்கிய பண்புகளாவன

1. சட்டவாக்க கழகத்தில் முதன் முறையாக உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மை பெற்றமை.
2. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகமானது.
3. இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் காணப்பட்டது.

22)டொனமூர் யாப்பின் பிரதான அம்சங்கள்

1. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
2. அரசுக்கழகம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
3. இனவாரிப் பிரதிநிதித்துவ முறை முற்றாக ஒழிக்கப்பட்டு பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை விரிவாக்கப்பட்டமை.
4. நிர்வாகக் குழுமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
5. பொதுச்சேவை ஆணைக்குழு அறிமுகப்படுத்தப்பட்டமை.

23)டொனமூர் யாப்பின் மூலம் உருவாக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களும் அவற்றின் தலைவர்களும்

1. உள்நாட்டு அலுவல்கள் - D.P ஜயதிலக
2. காணி விவசாயம் - D.S. சேனநாயக்க
3. உள்ளூராட்சி - C.V பத்துவந்தொடவ
4. சுகாதாரம் - T.P பானபொக்க
5. கைத்தொழில் வர்த்தகம் - பெரிய சுந்தரம்
6. கல்வி - C.W.W கன்னங்கரா
7. போக்குவரத்து - H.M மாக்கான் மாக்கார்

24)பொப்பி மலர் விற்பனையால் பெறப்பட்ட நன்மைகள்

1. ஊர்வலங்கள் கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை.
2. பிரித்தானியர்களுக்கு இலங்கையரால் ஆதரவு தெரிவிக்கப்பட்டது.
3. பொப்பி மலர் மூலம் பெறப்பட்ட பணம் பிரித்தானியாவிற்கு அனுப்பப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25)சூரியமல் இயக்கத்தின் செயற்பாடுகள்

1. பொப்பி மலருக்கு எதிராக சூரியமல் விற்பனை செய்யப்பட்டது.
2. சூரியமல் விற்பனையால் கிடைக்கும் பணத்தை ஏழைகளுக்கு வழங்கப்பட்டது.
3. சூரியமல்லை அணிவித்து சுதந்திரப் போராட்டத்திற்கான ஆதரவை நல்குமாறு கேட்கப்பட்டனர்.
4. 1944 புதிய அரசியல் அமைப்பிற்கான அங்கீகாரமாக அமைந்தது.
5. பொப்பி மலர் அடிமையின் சின்னமாகவும் சூரியமல் சுதந்திரத்தின் சின்னம் எனவும் மக்களுக்கு விழிப்பூட்டியமை.

26) சோல்பரி யாப்பு உருவாக்கத்திற்கான காரணிகள்

1. ஜனநாயகப் பண்பு, சிறுபான்மையினரைப் பாதுகாத்தல்.
2. அதிகாரங்களை ஒழுங்குப்படுத்துவதற்கும் நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும்.
3. பலம் வாய்ந்த சிவில் நிர்வாகத்தைக் கட்டி எழுப்புவதற்கு.
4. பிரித்தானியாவிற்கு சமமான ஓர் அரசியல் யாப்பை உருவாக்க.

27) சோல்பரி யாப்பின் முக்கிய அம்சங்கள்

1. இருசபை கொண்ட பாராளுமன்றம்
2. மகாசேனாதிபதி, மந்திரிசபை
3. சிறுபான்மையினரின் காப்பீடுகள்
4. பொதுச்சேவை, நீதிச்சேவை ஆணைக்குழு

28) சர்வஜன வாக்குரிமை வழங்குவதை எதிர்த்து இலங்கைத் தலைவர்கள் முன்வைத்த கருத்துக்கள்

1. சர்வஜன வாக்குரிமை வழங்கும் போது இலஞ்சம் ஊழல் என்பன பெருகும்.
2. சொத்தற்றவர்கள் நாட்டுப்பற்று அற்றவர்கள்
3. கல்வி அறிவு அற்றவர்கள் வாக்குரிமையை துஷ்பிரயோகம் செய்வார்.
4. சர்வஜன வாக்குரிமையின் வயதெல்லை அதிகரிக்க வேண்டும்.

29) சர்வஜன வாக்குரிமையின் சாதகமான விளைவுகள்

1. சமூக பொது நலன் வேகமாக விருத்தி பெற்றமை - இலவசக்கல்வி
2. பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மக்கள் பலப்படுத்தப்பட்டமை.
3. அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கான தளம் இடப்பட்டது.
4. சாதாரண மக்களுக்கு அரசியல் அறிவு வளர்ச்சியடைந்தது.
5. வங்கிகள், நிதி நிறுவனங்கள் தோன்றியமை.

30) டொனமூர் அரசியல் யாப்பின் மூலம் உருவாக்கப்பட்ட சட்டங்களும் உருவான ஆண்டுகளும்

1. தொழிலாளர் நிவாரணச் சட்டம் - 1934
2. வறியோர் சகாயக் கட்டளைச் சட்டம் - 1939
3. இலவசக் கல்விச் சட்டம் - 1945

31) குறிப்பிட்ட ஆண்டுகளின் சட்டசபை அழைக்கப்பட்ட முறைகள்

1. 1833, 1910, 1920, 1924 - சட்டவாக்கக் கழகம்
2. 1931 - அரசுக்கழகம்
3. 1947 - பாராளுமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக பொருளாதார மாற்றங்கள்

01) நிலத்தை அனுபவிப்பதற்கான இராஜகாரிய முறை என்பது,

- அரச நிலங்களில் பயிரிடுவதற்கான வரியாக தமது உழைப்பை வழங்குவது நிலத்தை அனுபவிப்பதற்கான இராஜகாரிய முறை ஆகும்.

02) கோல்புறுக் ஆணைக்குழுவின் பொருளாதார சீர்திருத்தங்கள்,

- காணி விற்பனைக் கொள்கையை செயற்படுத்தல்
- சிவில் சேவை அதிகாரிகளுக்கு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்குதல்.
- கட்டாய இராஜகாரிய முறையை நீக்குதல்.

03) கோல்புறுக் இலங்கை வரும்போது காணப்பட்ட அரசின் ஏகபோக உரிமை,

- கறுவா மற்றும் உப்பு வர்த்தகம்

04) கோப்பிச் செய்கை விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்,

- ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை.
- கோப்பிச் செய்கை மூலம் அதிக இலாபம் அடைய முடிந்தமை.
- வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்தமை.

05) மலையகப் பகுதிகளில் கோப்பிச் செய்கை வேகமாக வளர்ச்சியடைந்த காலப்பகுதி,

- கி.பி 1837 – கி.பி 1847

06) கோப்பிச் செய்கை வீழ்ச்சிக்கான காரணங்கள்,

- கி.பி 1848 ம் ஆண்டு ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடி.
- பிரித்தானியா பின்பற்றிய சுதந்திர வர்த்தகக் கொள்கை.
- வெளிறல் நோய் ஏற்பட்டமை.

07) கோப்பிச் செய்கை முற்றாக வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம்,

- 1869 இல் கோப்பிப் பயிருக்கு ஏற்பட்ட ஹெமிலியா வெஸ்டாக்ஸ் எனும் இலை வெளிறல் நோய் பரவியமை.

08) கோப்பி வீழ்ச்சியை தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்ட பயிர்கள்,

- சிங்கோனா
- கொக்கோ

09) இலங்கையில் தேயிலைச் செய்கையை ஆரம்பித்த ஆங்கிலேயர்,

- ஜேம்ஸ் டெய்லர் (லுல்கந்துர எனும் இடத்தில்)

10) தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்,

- தலவாக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) தேயிலைச் செய்கை விருத்தியில் பங்களிப்புச் செய்த காரணிகள்,
- உலக சந்தையில் சிறந்த கேள்வி நிலவியமை.
- உலர் வலயம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் தேயிலைச் செய்கைக்கு உகந்ததாக காணப்பட்டமை.
- சிறந்த போக்குவரத்து வசதி காணப்பட்டமை.

12) தென்னை பயிரிடப்பட்ட பிரதேசங்கள்,
- குருணாகல், சிலாபம், கம்பஹா

13) தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்,
- லுணுவில

14) இறப்பர்ச் செய்கை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட காலப்பகுதி,
- கி.பி 1877

15) இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்,
- அகலவத்தை

16) கோல்புறுக் சீர்திருத்தங்கள் மூலம் இலங்கையில் உருவான பொருளாதார முறை,
- முதலாளித்துவ பொருளாதார முறை

17) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தோற்றம்பெற்ற புதிய தொழில் வாய்ப்புக்கள்,
- சட்டத்தரணிகள்
- பொறியியலாளர்கள்
- சிவில் சேவையாளர்கள்
- வைத்தியர்கள்
- நில அளவையாளர்கள்
- எழுதுவினைஞர்கள்

18) கி.பி 1922 – கி.பி 1935 வரையில் நகர்ப்புற தொழிலாளர் சங்கத் தலைவராகச் செயற்பட்டவர்,
- ஏ.ஈ.குணசிங்க

19) இக்காலப்பகுதியில் தோட்டத் தொழிலாளரின் மத்தியில் தொழிற்சங்கங்களை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டவர்,
- கோ.நடேச ஐயர்

20) பிரித்தானியர் ஆட்சி காரணமாக இலங்கையில் ஏற்பட்ட அனுகூலங்கள்,
- ஆங்கில மொழியறிவு பரவியமை.
- போக்குவரத்து, தொடர்பாடல் வளர்ச்சியடைந்தமை.
- பாராளுமன்ற ஆட்சிமுறை உருவானமை.

21) பிரித்தானியர் ஆட்சி காரணமாக ஏற்பட்ட பிரதிகூலங்கள்,
- மதுபானப் பாவனை நாடுமுழுவதும் பரவியமை.
- காணி உரிமையற்ற மக்கள் கூட்டம் உருவானமை.
- உள்நாட்டு கலாச்சார பாரம்பரியம் சீர்குலைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சுதந்திரமடைதல்

01) ஐக்கிய தேசியக் கட்சியை தோற்றுவித்தவர்,
- டி.எஸ்.சேனாநாயக்க

02) 1947 ஆகஸ்ட் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற கட்சி,
- ஐக்கிய தேசியக் கட்சி

03) இலங்கை சுதந்திர தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது,
- பெப்ரவரி 4ம் திகதி

04) சோல்பரி அரசியல் யாப்பின் முக்கிய இயல்புகள்,
- ஆளுநர் நாயகம்
- இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம்
- பிரதமர் தலைமையிலான அமைச்சரவை
- நீதிச் செயற்பாடுகள்

05) சோல்பரி அரசியல் யாப்பில் பாராளுமன்றத்தின் அமைப்பு,
- இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம்
  1. பிரதிநிதிகள் சபை – 101 அங்கத்தவர்கள்
  2. செனற் சபை/மூதவை – 30 அங்கத்தவர்கள்

06) பிரதிநிதிகள் சபையின் பதவிக் காலம்,
- 5 வருடங்கள்

07) மூதவையின் பதவிக் காலம்,
- 6 வருடங்கள்

08) சோல்பரி அரசியல் யாப்பின்படி பிரதமருக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்புக்கள்,
- பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு விவகார அமைச்சுக்களின் பொறுப்புக்கள்

09) ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்படும் நீதிபதிகள்,
- பிரதம நீதிபதிகள்
- உயர் நீதிமன்ற நீதிபதிகள்

10) ஆரம்ப காலத்தில் இரு கட்சி முறை ஆட்சியினைக் கொண்டிருந்த நாடுகள்,
- பிரித்தானியா
- ஐக்கிய அமெரிக்கா

11) பல்கட்சி முறை ஆட்சியினைக் கொண்ட ஐரோப்பிய நாடுகள்,
- பிரான்ஸ்
- ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) பல்கட்சி முறை ஆட்சியினைக் கொண்ட ஆசிய நாடுகள்,
- இந்தியா - இலங்கை

13) இந்நாட்டின் மிகப் பழமையான கட்சி,
- இலங்கை சமசமாஜக் கட்சி

14) இலங்கை சமசமாஜக் கட்சியை தோற்றுவித்தவர்கள்,
- கலாநிதி என்.எம்.பெரேரா
- கலாநிதி கொல்வின் ஆர்.டீ. சில்வா
- திரு பிலிப் குணவர்த்தன

15) இலங்கை சமசமாஜக் கட்சி உருவாக்கப்பட்ட ஆண்டு,
- கி.பி 1935

16) இலங்கை கம்யூனிஸ் கட்சியை ஆரம்பித்தவர்,
- வைத்தியர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க

17) ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தவர்,
- எஸ்.டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா

18) எஸ்.டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா பிரதமராக செயற்பட்ட காலப்பகுதி,
- கி.பி 1956 – கி.பி 1959

19) கி.பி 1959 ல் பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்ட பின்னர் பிரதமராக பதவியேற்றவர்,
- ஸ்ரீமாவோ பண்டார நாயக்க

20) இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பு செயற்பட்ட சிறிய கட்சிகள்,
- தொழிலாளர் கட்சி – ஏ.ஈ. குணசிங்க
- தமிழ் காங்கிரஸ் கட்சி – ஜீ.ஜீ. பொன்னம்பலம்

21) கி.பி 1949 இல் சமஷ்டி கட்சியை ஆரம்பித்தவர்,
- எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

22) அரசியல் கட்சிகளின் முக்கியத்துவங்கள்,
- அவ்வவ் கட்சிகளின் கொள்கை அடிப்படையில் மக்களை ஒன்று திரட்டுதல்.
- பாராளுமன்ற ஜனநாயகம் காணப்படும் எல்லா நாடுகளிலும் காணப்பட வேண்டியது அவசியமாகும்.
- அரசியல்வாதிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவைக் கட்டியெழுப்புதல்.

23) கி.பி 1956ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இணைத்துக்கொண்ட கட்சிகள்,
- புரட்சிகர சமசமாஜக் கட்சி
- பாஷா பெரமுண
- ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியகொல்ல தலைமையிலான சுஜேட்சை குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) கி.பி 1956 தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எப்பெயரில் போட்டியிட்டது?
- மக்கள் ஐக்கிய முன்னணி

25) மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கிய ஐம்பெரும் சக்திகள்,
- பௌத்த பிக்குகள் சங்கம்
- சுதேச வைத்தியர்கள்
- ஆசிரியர்கள்
- விவசாயிகள்
- தொழிலாளர்கள்

26) கி.பி 1956 பொதுத்தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணியின் தொனிப்பொருள்,
- "சிங்களத்தை அரச கரும மொழியாக்கல்"

27) கி.பி 1956 பொதுத் தேர்தலின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள்,
- சிங்களத்தை அரச கரும மொழியாக்கியமை.
- பிரித்தானியாவுடன் கி.பி 1947 ல் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டமை.
- வல்லரசு அணியிலிருந்து விலகி நடுநிலமையான வெளிநாட்டுக்கொள்கையை கைக்கொண்டமை

28) 1970 பொதுத்தேர்தலுக்கு முகம்கொடுப்பதற்காக ஐக்கிய முன்னணியில் இணைந்து கொண்ட கட்சிகள்,
- சுதந்திரக் கட்சி
- சமசமாஜக் கட்சி
- கம்யூனிச கட்சி

29) 1970 பொதுத்தேர்தலில் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டவர்,
- ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க

30) முதலாம் குடியரசு யாப்பு அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு,
- 1972 மே மாதம் 22 ம் திகதி

31) 1972 அரசியல் யாப்பின் அடிப்படை அம்சங்களுள் முக்கியமானவை,
- இதுவரை லங்கா என அழைக்கப்பட்ட இந்நாடு ஸ்ரீ லங்கா என்ற பெயரால் அழைக்கப்பட்டமை.
- பிரித்தானியப் பேரரசுடன் கொண்டிருந்த அரசியல் யாப்பு ரீதியான தொடர்புகளை முடிவுக்குக் கொண்டு வரல்.

32) 1972 அரசியல் யாப்பின் பிரதான அம்சங்கள்,
- அடிப்படை மனித உரிமைகள்
- ஜனாதிபதிப பதவி
- பிரதமர் தலைமையிலான அமைச்சரவை
- நீதி மன்றம்

33) 1972 ம் ஆண்டு யாப்பின் 18வது விதியில் கூறப்பட்ட அடிப்படை மனித உரிமைகள்,
- சட்டத்தை அனுபவித்தல், செயற்படுத்தல், பாதுகாப்புப் பெறல் அனைவருக்கும் பொதுவானதாகும்.
- அனைத்துக் குடிமக்களுக்கும் சிந்திக்கும் சுதந்திரத்திற்கும் மனச்சாட்சிப்படி நடக்கும் சுதந்திரத்திற்கும் உரிமையுண்டு.
- குடிமக்களுக்கு அமைதியாக ஒன்றுகூடுதலுக்கும் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் சுதந்திரமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34) 1972 யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதவி,
- பெயரளவு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவி

35) இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதி,
- வில்லியம் கொப்பலாவ

36) பாராளுமன்றத்திற்குப் பதிலாக 1972 இல் அறிமுகப்படுத்தப்பட்டது,
- தேசிய அரசுப் பேரவை

37) தேசிய அரசுப் பேரவைக்கு உரிய அதிகாரம்,
- இலங்கை தொடர்பான சட்டமியற்றும் பூரண அதிகாரம்

38) தேசிய அரசுப் பேரவையின் பதவிக்காலம்,
- ஆறு ஆண்டுகள்

39) 1972 யாப்பின்படி அமைச்சரவையின் தலைவராக செயற்பட்டவர்,
- பிரதமர்

40) 1972 யாப்பின் கீழ் இயங்கிய நீதிமன்றத் தொகுதிகள்,
- உச்ச நீதிமன்றம்
- மேல் நீதிமன்றம்
- மாவட்ட நீதிமன்றம்
- மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் (நீதவான் நீதிமன்றம்)
- அரசியல் யாப்பு நீதிமன்றம்

41) 1972 யாப்பில் பிரதான நீதிமன்றங்கள்,
- உச்ச நீதிமன்றம் - மேல் நீதிமன்றம்

42) இரண்டாம் குடியரசு யாப்பு அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு,
- 1978

43) 1978 யாப்பின் முக்கிய அம்சங்கள்,
- நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவி
- பாராளுமன்றம்
- நீதிமன்றங்கள்
- ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை
- அடிப்படை மனித உரிமைகள்
- விகிதாசார பிரதிநிதித்துவ முறை
- ஒம்புட்ஸ்மன் பதவி (குறைகேள் அதிகாரி)

44) இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி,
- ஜே. ஆர். ஜயவர்த்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45) நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் பதவிக்காலம்,
- 6 வருடங்கள்

46) ஜனாதிபதிக்கு உரித்தான நிறைவேற்று அதிகாரங்கள்,
- பிரதமரை நியமித்தல்.
- அமைச்சர்களை நியமித்தலும் பொறுப்புக்களை வழங்கலும்
- அமைச்சரவையின் தலைவராகச் செயற்படல்.
- அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளை நியமித்தல்.

47) அமைச்சரவையின் பொறுப்புக்கள்,
- பாராளுமன்றத்தால் பிறப்பிக்கப்படும் சட்டங்களை செயற்படுத்தல்.
- ஒவ்வொரு அமைச்சருக்குமென வரவு – செலவுத்திட்ட மதிப்பீட்டைத் தயாரித்தல்.

48) பாராளுமன்றத்திற்குரிய அதிகாரங்கள்,
- சட்டத்தைப் பின்பற்றுதல்.
- நிதியைக் கையாளுதல்.
- வரவு செலவுத் திட்டத்தை அனுமதித்தல்.
- அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல்.

49) 1978 யாப்பின் படியான நீதிமன்றக் கட்டமைப்புகள்,
- உச்ச நீதிமன்றம்
- மேன்முறையீட்டு நீதிமன்றம்
- மேல்/உயர் நீதிமன்றம்
- மாவட்ட நீதிமன்றம்
- குடும்ப நீதிமன்றம்
- நீதவான் நீதிமன்றம் (மஜிஸ்ரேட்)
- ஆரம்ப/முதல்நிலை நீதிமன்றங்கள்

50) உச்ச நீதிமன்றத்தின் செயற்பாடுகள்,
- அடிப்படை உரிமைகள் பற்றிய வழக்குகளை விசாரித்தல்.
- ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் குற்றப் பிரேரணையை விசாரித்தல்.
- தேர்தல் முறையீடுகள் தொடர்பான வழக்குகளை விசாரித்தல்.

51) 1978 ம் ஆண்டு அரசியல் யாப்பின் 3ம் அதிகாரத்தில் கூறப்பட்ட அடிப்படை மனித உரிமைகள்,
- பேசுவதற்கும் சுதந்திரமாக கருத்து வெளியிடுவதற்குமான உரிமை.
- விரும்பிய தொழிலை செய்வதற்கான உரிமை.
- விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கான உரிமை.

52) 1978 ம் ஆண்டு யாப்பின் வாக்களிப்பு முறை,
- ஜனாதிபதித் தேர்தல்
- விகிதாசார பிரதிநிதித்துவ முறை
- பொதுசன அபிப்பிராயத் தேர்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53) விகிதாசார பிரதிநிதித்துவமுறையின்மூலம் இடம்பெறும் தேர்தல்கள்,
- பாராளுமன்றத் தேர்தல்
- மாகாணசபைத் தேர்தல்
- உள்ளுராட்சி சபைத் தேர்தல்

54) விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் நன்மைகள்,
- கூடிய ஜனநாயகத் தன்மை வாய்ந்தது.
- சிறிய கட்சிகள் பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பு.
- சிறிய கட்சிகள் முக்கியம்பெறுவதுடன் பலமான எதிர்க்கட்சி உருவாகும்.

55) விவசாய குடியேற்ற திட்டங்களை ஆரம்பித்தமைக்கான காரணங்கள்,
- ஈரவலயத்தில் பெருகிச் செல்லும் சனத்தொகை நெருக்கடிக்குத் தீர்வு காணல்.
- உணவு உற்பத்தியைப் பெருக்குதல்.
- வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.

56) புதிய விவசாய குடியேற்றங்களை உருவாக்கும்போது அரசாங்கம் எதிர்நோக்கிய சவால்கள்,
- நீண்ட காலமாக காடாகிக் கிடந்த நிலத்தை விவசாயத்திற்கு உகந்ததாக மாற்றியமைத்தல்.
- நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தல்.
- முதலாவது அறுவடையைப் பெற்றுக்கொள்ளும்வரை உதவி நிதியை வழங்குதல்.

57) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள்,
- உலர் வலயக் காணிகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான நிரந்தர நீர் வசதியை வழங்குதல்.
- அதிகரித்துச் செல்லும் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ளும் வண்ணம் மின் உற்பத்தியை மேற்கொள்ளல்.
- நன்னீர் மீன்வளர்ப்பு
- மீள் காடாக்கம் செய்தல்.
- வெள்ளப்பெருக்கைத் தடை செய்தல்.

58) மகாவலி திட்டத்தின் மூலம் நீரைப் பெற்றுக்கொண்ட குளங்கள்,
- கலா வாவி - திஸா வாவி - நுவர வாவி

59) மகாவலி அதிகார சபை உருவாக்கப்பட்ட ஆண்டு,
- 1979

60) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள்,
- கொத்மலை - விக்டோரியா - ரந்தெனிகல - ரந்தெம்பே
- ரத்கிந்த - உள்ஹிடிய - மாதுறு ஓயா

61) நீர்த்தேக்கங்கள் சிலவற்றிற்கு உதவி வழங்கிய நாடுகள்,
- கொத்மலை - சுவீடன்
- விக்டோரியா - பிரித்தானியா
- ரந்தெனிகல - ஜேர்மனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62) நெல் உற்பத்தியை பெருக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்,

- 1948 இல் நெல்லுக்கு உத்தரவாத விலை அறிமுகப்படுத்தல்.
- விவசாய சேவை மத்திய நிலையங்களை ஆரம்பித்தல்.
- புதிய நெல் இனங்களை அறிமுகப்படுத்தல்.
- நெல் ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்கியமை.
- நவீன நீர்ப்பாசன முறைகளை மேற்கொண்டமை.

63) சுதந்திரத்தின் பின்னர் வர்த்தக விவசாயத்தை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைள்,

- 1972 ம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம்
- 1975 ம் ஆண்டின் நிலச் சீர்திருத்தச் சட்டம்
- 1952 இல் சீன - இலங்கை இரு தரப்பு ஒப்பந்தம்

64) சிறு ஏற்றுமதிப் பயிர்களின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்,

- 1968 ம் ஆண்டு தேயிலை பயிர் செய்யும் நிலங்களில் சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்.
- 1972 இல் சிறு ஏற்றுமதி ஆராய்ச்சி நிலையம் மாத்தளையில் நிறுவப்பட்டமை.

65) 1960 ம் ஆண்டின் பின்னர் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்,

- 1961 இல் மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டமை.
- 1966 இல் தரநிர்ணய சபை ஆரம்பிக்கப்பட்டமை.
- நுகர்வுப்பொருள் உற்பத்தியில் வளர்ச்சியேற்பட்டது.

66) 1948 இன் பின்னர் கல்விப் புலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்,

- அரசாங்கப் பாடசாலைகளை அமைத்தல்.
- கல்விக்கு அதிக பணம் ஒதுக்குதல்.
- விஞ்ஞான ஆய்வுகூட நூல்நிலைய வசதிகள் விரிவாக்கப்பட்டமை.

67) சமூக நலன்புரி நடவடிக்கைகள்,

- கிராமப் பிரதேசங்களில் கல்வி நடவடிக்கைகளை வளர்ச்சியடையச் செய்தல்.
- சுதந்திரம், சமத்துவம், அடிப்படை உரிமைகள் என்பன அரசியல் யாப்பில் இடம்பெற்றன.

68) உயர் கல்விக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்,

- 1942 இல் இலங்கைப் பல்கலைக் கழகம் கொழும்பில் ஆரம்பித்தமை.
- 1952 இல் அது பேராதனைக்கு இடம் மாற்றப்பட்டமை.
- 1972 மொரட்டுவ பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டமை.
- 1974 இல் யாழ்ப்பாண பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டமை.

69) சுகாதார சேவைகள்,

- சுகாதார அமைச்சின்கீழ் கிராமப்புறங்களில் வைத்தியசாலைகளை அமைத்தல்.
- தாய்-சேய் நடவடிக்கைகளை மேம்பாடடையச் செய்தல்.
- வைத்திய முகாம்களை நடாத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் இடம்பெற்ற பிரதான புரட்சிகள்

01) புரட்சி என்றால்,

- ஏதேனும் ஒரு துறையில் குறுகிய காலத்தில் ஏற்படும் மாற்றத்தை அறிமுகம் செய்வதற்கு புரட்சி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

02) உலகில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட பிரதான புரட்சிகள்,

- அமெரிக்க சுதந்திரப் போர்
- பிரான்சியப் புரட்சி
- ரஷ்யப் புரட்சி

03) அமெரிக்க சுதந்திரப் போர் என்றால்,

- அமெரிகக குடியேற்ற வாசிகள் பிரித்தானியப் பேரரசிலிருந்து விடுதலை பெறவேண்டி மேற்கொண்ட போராட்டம் ஆகும்.

04) ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேற்றங்களையமைப்பதில் செல்வாக்குச்செலுத்திய காரணிகள்.

- ஐரோப்பிய நாடுகளில் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக மக்கள் சமய சுதந்திரத்தை எதிர்பார்த்து புதிய இடங்களுக்கு செல்ல விரும்பியமை.
- வர்த்தகத்தின் பொருட்டு புதிய பிரதேசங்களில் நிலங்களை பெற்றுக்கொள்வதன் மூலம் வாழ்வைச் சிறப்பாக்கிக்கொள்ள முடியும் என எதிர்பார்த்தமை.
- புகழையும் செல்வத்தையும் அதிகரிக்கும் நோக்குடன் ஐரோப்பிய நாடுகளின் ஆட்சியாளர் கள் புதிய இடங்களை கண்டுபிடிப்பதற்கு வழங்கிய ஒத்துழைப்பு.

05) வட அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைப்பதற்கு முன்வந்தோரிடம் பிரித்தானிய அரசினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனை,

- பிரித்தானிய ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் தாய்நாட்டு சட்டங்களை புதிய குடியேற்றங்களில் செயற்படுத்த வேண்டும் என்பதாகும்.

06) 1763ம் ஆண்டிற்கு முன்னர் அமெரிக்க குடியேற்ற வாசிகள் எதிர்நோக்கிய பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் இரண்டும்,

- வடக்கில் பிரான்சியர் தமது ஆதிக்கத்தை பரவலடையச் செய்ய முயன்றமை.
- மேற்கில் செவ்விந்தியர்கள் அச்சுறுத்தலாக விளங்கியமை.

07) அமெரிக்க சுதந்திரப் போரிற்கான காரணங்கள்,

- பிரித்தானியர் பின்பற்றிய தாய்நாட்டிற்குச் சாதகமான பொருளாதாரக் கொள்கை.
- அமெரிக்க குடியேற்றவாசிகள் நீண்டகாலமாக பிரித்தானிய தலையீட்டிற்கு மாறாக சுய நிருவாகத்திற்கு பழக்கப்பட்டிருந்தமை.
- குடியேற்றவாசிகளின் எண்ணங்கள், மனநிலைகள், கருத்துகளைப் பிரித்தானிய அரசாங்கம் சரிவரப் புரிந்துகொள்ளாமை.
- சுதந்திரம் தொடர்பாக குடியேற்றவாசிகளிடையே காணப்பட்ட ஆர்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08) குடியேற்றவாசிகளின் இரகசிய வர்த்தக நடவடிக்கைகளை தடைசெய்யும்பொருட்டு 1764, 1765 ஆகிய ஆண்டுகளில் பிரித்தானிய அரசினால் இயற்றப்பட்ட மூன்று சட்டங்களும்,

- சீனிச் சட்டம் (கரும்புச் சட்டம்) - நாணயச் சட்டம் - முத்திரைச் சட்டம்

09) அமெரிக்க சுதந்திரப் போரின் தாரக மந்திரம்,

- பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை

10) பொஸ்டன் தேநீர் விருந்து என்றால்,

- 1773 ம் ஆண்டு பிரித்தானியா கொண்டுவந்த சட்டங்களால் அமெரிக்க தேயிலை வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்குடன் 1773 ம் ஆண்டு டிசம்பர் மாதம் பொஸ்டன் துறைமுகத்தில் தரித்திருந்த கப்பலில் மாறுவேடம் தரித்து, நுழைந்த பொதுமக்கள் 342 தேயிலைப் பெட்டிகளை கடலில் வீசினர் இதுவே பொஸ்டன் தேநீர் விருந்து எனப்படும்.

11) பிலடெல்பியா மகாநாட்டில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்,

- அமெரிக்க குடியேற்றங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்செய்யவோ வரி அறவிடவோ பிரித்தானியப் பாராளுமன்றத்துக்கு அதிகாரமில்லை.
- பிரித்தானியப் பொருட்களை பகிஷ்கரிக்கவும், பாதுகாப்பின் பொருட்டு குடியேற்றவாசிகள் ஆயுதம் தரிக்க வேண்டும்.

12) அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு,

- 1776 ம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் திகதி

13) அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டவைகள்,

- பிறப்பிலேயே மனிதனுக்கு அளவிட முடியாத உரிமைகள் பலவுண்டு எனவும் அவற்றைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு மனிதன் ஆட்சியை அமைத்துக் கொள்கிறான்.

14) அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு,

- 1789

15) அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் ஜனாதிபதி,

- ஜோர்ஜ் வொசிங்டன்

16) அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகள்,

- ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்ற சுதந்திர அரசு உதயமாகியது.
- முழு மனித குலத்திற்கும் சுதந்திரத்தின் மேன்மையை எடுத்துக்காட்டிய சந்தர்ப்பமாக அது அமைந்தது.
- அடிப்படை மனிதவுரிமைகள் பற்றிய உணர்வு உலகம் முழுவதும் ஏற்பட்டது.
- அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு என எழுதப்பட்ட அரசியல் யாப்பு உலகில் முதன்முதல் எழுதப்பட்ட அரசியல் யாப்பாக உருவானது.

17) பிரான்சியப் புரட்சி என்றால்,

- 1789 ம் ஆண்டு பிரான்சிய முடியாட்சிக்கு எதிராக எழுந்த அந்நாட்டு மக்கள், முடியாட்சியை கவிழ்த்து புதிய ஆட்சியை ஏற்படுத்தியமை பிரான்சியப் புரட்சி எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) பிரான்சியப் புரட்சிக்கான அடிப்படை எண்ணக்கரு,
- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

19) பிரான்சிய அரச குடும்பம் சுகபோகமாக வாழ்ந்த மாளிகை,
- வேர்சேல்ஸ்

20) பிரான்சின் ஊழல் நிறைந்த ஆட்சியின் அடையாளமாக விளங்கிய சிறைச்சாலை,
- பஸ்டீல் சிறைச்சாலை

21) பிரான்சியப் புரட்சிக்கான அரசியல் காரணிகள்,
- 16ம் லூயி மன்னனின் சுகபோகமான மற்றும் ஊழல் நிறைந்த ஆட்சி
- மன்னனுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்பு காணப்படாமை.
- மக்கள் தங்கள் குறைகளை முன்வைக்க மக்கள் மன்றமான ஸ்டேட் ஜெனரல் 175 ஆண்டு காலம் கூட்டப்படாமை.

22) பிரான்சியப் புரட்சிக்கான சமூகக் காரணிகள்,
- சமூகத்தில் சிறிய தொகையினராக காணப்பட்ட குருக்கள் மற்றும் பிரபுக்கள் அதிக சலுகைகள் மற்றும் அரசியல் அதிகாரங்களை பெற்றிருந்தமை.
- மத்திய வகுப்பினர் புறக்கணிக்கப்பட்டமை.
- சமூகத்தில் 92% காணப்பட்ட சாதாரண மக்கள் மீது அதிக வரி விதிக்கப்பட்டமை.

23) பிரான்சியப் புரட்சிக்கான பொருளாதாரக் காரணிகள்,
- வினைத்திறனற்ற வரி முறை
- திறைசேரி வெறுமையாக காணப்பட்டமை

24) பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புபட்ட வரிமுறைகள் மூன்றும்,
- டெலி
- கெபல்
- கெப்பிடேஷன்

25) பிரான்சியப் புரட்சிக்கு பங்களிப்புச் செய்த தத்துவஞானிகள்,
- மொன்டஸ்கியூ
- வோல்டேயர்
- ரூசோ

26) பிரான்சியப் புரட்சியின் விளைவுகள்,
- பிரான்சின் முடியாட்சி வீழ்ச்சியுற்றமை.
- பிரான்சிய விவசாய தொழிலாளரான மக்களுக்கு சலுகை கிடைத்தமை.
- பிரான்சில் உறுதியற்ற அரசியல் முறைமை தோன்றியமை.
- அடிப்படை உரிமை தொடர்பாக உலகம் முழுவதும் ஆர்வம் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27) ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள்,
- ரஷ்யாவில் நிலவிய சர்வாதிகார சார் மன்னனின் முடியாட்சி சிலவியமை.
- மானிய சமூக அமைப்பு காரணமாக பிரபுக்களுக்கு நிலம் சொந்தமாக காணப்பட்டது. சாதாரண விவசாயிகள் நில அடிமைகளாக காணப்பட்டனர்.
- 1ம் உலகப் போரினால் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டமை.

28) 1917 ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற புரட்சிக்கான காரணங்கள்,
- 1917.03.03 இல் ரஷ்யாவில் புடவைக் கைத்தொழில் தொழிற்சாலையில் ஏற்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம்.
- சார் மன்னனின் ஆட்சியினால் பாதிக்கப்பட்ட சகல பிரிவு மக்களும் போராட்டத்தில் பங்கு பற்றியமை.

29) 1917 அக்டோபர் புரட்சிக்கான காரணங்கள்,
- மார்ச் மாதம் நடைபெற்ற புரட்சிக்குப் பின் அமைக்கப்பட்ட தற்காலிக அரசாங்கத்தால் பிரச்சனைகளை தீர்க்க முடியாதுபோனமை.
- போலீஷவிக் வாதிகளின் எழுச்சி

30) ரஷ்யப் புரட்சியின் விளைவுகள்,
- சமவுடமை அரசு ஏற்படுத்தப்பட்டது.
- சமவுடமைக் கொள்கை உலகம் முழுவதும் பரவியது.
- ரஷ்யாவில் சிறு விவசாய பண்ணைகள் பாரிய பண்ணைகளாக மாற்றமடைந்தது.
- ரஷ்யா ஒரு பலம்வாய்ந்த நாடாக மாற்றப்பட்டது.

31) சமவுடமை (மாக்சிசம், பொதுவுடமை) கொள்கை என்றால்,
- சமுதாயத்தில் செல்வம் தொடர்பான பொதுவுரிமை அனைத்து பிரஜைகளுக்கும் இருப்பதோடு திறமையை மேம்படுத்த சம சந்தர்ப்பம் வழங்குதல் உற்பத்தியின் பயனை அனைவருக்கும் சமமாக பகிர்ந்தளித்தல் உட்பட அரசியல் சமூக பொருளாதார முறையை ஏற்றுக்கொண்ட ஒரு தத்துவம்.

32) சமவுடமைக் கொள்கையை பின்பற்றி ஆட்சிமுறை நடைபெறும் நாடுகள்,
- சீனா, வடகொரியா, கியூபா

## உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும்

01) முதலாம் உலக மகாயுத்தத்திற்கான உடனடிக் காரணம்,
- ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசனாகிய பிரான்சிஸ் பேர்டினண்ட்டும் அவரது மனைவியும் பொஸ்னியாவின் தலைநகராகிய சராஜிவோ நகரத்தில் சுற்றுலா மேற்கொண்டபோது கொலை செய்யப்பட்டமை.

02) முதலாம் உலக மகா யுத்தத்தில் மத்திய வல்லரசு நாடுகளில் இணைந்து கொண்ட நாடுகள்,
- ஜேர்மனி
- ஆஸ்திரியா
- ஹங்கேரி
- பல்கேரியா
- துருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) முதலாம் உலக மகா யுத்தத்தில் நட்பு நாடுகள் அணியில் இணைந்து கொண்ட நாடுகள்,

- பிரித்தானியா - பிரான்ஸ்
- ரஷ்யா - இத்தாலி
- சேர்பியா - ஐக்கிய அமெரிக்கா

04) முதலாம் உலக மகா யுத்தத்திற்கான காரணங்கள்,

- ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் நடவடிக்கைகளின்போது பிரான்சும் ஜேர்மனியும் பகைமை நாடுகளாக உருவெடுத்தமை.
- ஜேர்மன் பேரரசனாகிய இரண்டாம் வில்லியத்தின் செயற்பாடுகள்
- குடியேற்றங்கள் குறித்த போட்டி
- ஆயுதப் போட்டிகளும் இனவாதம் வளர்ச்சியடைதலும்
- ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசனின் கொலை

05) சரஜிவோ நிகழ்வு இடம்பெற்ற ஆண்டு,

- 1914 ஜீலை 20

06) ஐக்கிய அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டமைக்கான காரணங்கள்,

- அமெரிக்காவின் லூசிடானியா எனும் பயணிகள் கப்பலொன்று ஜேர்மனியின் நீர்மூழ்கிக் கப்பலின் மூலம் மூழ்கடிக்கப்பட்டமை.

07) முதலாம் உலக மகா யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதி,

- கி.பி 1914 – கி.பி 1918

08) முதலாம் உலக மகாயுத்தத்தின் விளைவுகள்,

- யுத்தத்தில் அச்சு நாடுகள் தோல்வியைத் தழுவி நட்பு நாடுகள் வெற்றி பெற்றமை.
- பெருந்தொகையான மனித உயிர்களும் சொத்துக்களும் அழிந்தன.
- வேர்சேல்ஸ் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டமை.

09) வேர்சேல்ஸ் உடன்படிக்கை பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட நாடுகளும் பிரதிநிதிகளும்,

- ஐக்கிய அமெரிக்க அரசுகளின் ஜனாதிபதி - வூட்ரோவில்சன்
- பிரித்தானியப் பிரதமர் - லொயிட் ஜோர்ஜ்
- பிரான்ஸ் பிரதமர் - க்ளெமன் ஷோ
- இத்தாலியப் பிரதமர் - விட்டோரியா ஒலவன்டோ

10) வேர்சேல்ஸ் உடன்படிக்கையின் மூலம் ஜேர்மனிக்கு விதிக்கப்பட்ட கடுந்தண்டனைகள்,

- வெற்றிபெற்ற நாடுகளுக்கும் பெருந்தொகையான பணத்தை நட்ட ஈடாக கொடுக்க வேண்டிய நிலை ஜேர்மனிக்கு ஏற்பட்டது.
- இராணுவத்தை வைத்துக்கொள்ளல் மற்றும் போர்த்தளபாடங்களைத் தயாரிக்கும் விடயத்தில் ஜேர்மனிக்கு வரையறை விதிக்கப்பட்டது.
- ஐரோப்பாவிற்கு வெளியே ஜேர்மனி வசமிருந்த குடியேற்ற நாடுகள் வெற்றிபெற்ற நாடு களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) சர்வதேச சங்கம் உருவாகியதற்கான காரணங்கள்,
- நாடுகளிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைச் சமாதானமாகத் தீர்த்தல்.
- எதிர்காலத்தில் உலக யுத்தம் ஒன்று ஏற்படுவதைத் தவிர்த்தல்.
- சர்வதேசப் புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் கட்டியெழுப்புதல்.
- சிறிய நாடுகளின் சுதந்திரம் சுயாதீனம் என்பனவற்றைப் பாதுகாத்தல்.
- உலக சமாதானத்தைப் பாதுகாத்தல்.

12) சர்வதேச சங்கம் சமாதானத்திற்காக மேற்கொண்ட முயற்சிகள்,
- அகதிகள் புனர்வாழ்வுக்காக நடவடிக்கை எடுத்தமை.
- நாடுகளுக்கிடையேயான யுத்த முரண்பாட்டை தவிர்த்தமை.
- சட்ட விரோத செயற்பாடுகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை.

13) சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்,
- ஐக்கிய அமெரிக்கா சர்வதேச சங்கத்தில் இணையாமை.
- சர்வதேச சங்கத்தில் அங்கம் வகித்த நாடுகளிடையே ஒற்றுமையின்மை.
- உலக சமாதானம் மீறப்பட்டமை.

14) இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கான காரணங்கள்,
- ஜேர்மனியில் ஹிட்லரின் எழுச்சியும் அவரது நடவடிக்கைகளும்.
- இத்தாலியில் முசோலினியின் செயற்பாடுகள்
- ஜப்பானின் நடவடிக்கைகள்
- சர்வதேச சங்கத்தின் பலவீனம்

15) இரண்டாம் உலக மகாயுத்தத்தில் நேச சாடுகள் அணியில் இணைந்துகொண்ட நாடுகள்,
- ஐக்கிய அமெரிக்கா
- பிரான்ஸ்
- பிரித்தானியா
- ரஷ்யா

16) இரண்டாம் உலக மகா யுத்தத்தில் அச்சு நாடுகள் அணியில் இணைந்து கொண்ட நாடுகள்,
- ஜேர்மன்
- இத்தாலி
- யப்பான்

17) ஜப்பான் தனது போர்ப்பலத்தை நிருபித்து கைப்பற்றிய பிரித்தானிய குடியேற்ற நாடுகள்,
- சிங்கப்பூர்
- மலேசியா
- பர்மா
- ஹொங்கொங்

18) இரண்டாம் உலக மகாயுத்தம் இடம்பெற்ற காலப்பகுதி,
- கி.பி 1939 – கி.பி 1945



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) இரண்டாம் உலக மகாயுத்தத்தின் விளைவுகள்,

- ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய அச்சு நாடுகள் அணி தோல்வியைத் தழுவியமை.
- 50 மில்லியனுக்கும் அதிகமான மனித உயிர்கள் கொல்லப்பட்டமை.

20) கெடுபிடிப் போருக்காக பயன்படுத்திய உபாயங்கள்,

- இரகசிய உளவுச் சேவை
- அமைப்புக்களை அமைத்தல்
- உதவும் செயல்திட்டங்களை விரிவுபடுத்தல்

21) ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டதன் நோக்கங்கள்,

- சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்தல்.
- நாடுகளிடையே நட்புறவை வளர்த்தல்.
- மனித மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை உறுதிசெய்து சர்வதேச ஒத்துழைப்பை விரிவு படுத்தல்.

22) ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு,

- பொதுச் சபை
- பாதுகாப்புச் சபை
- சமூகப் பொருளாதார சபை
- நம்பிக்கைப் பொறுப்புச் சபை
- சர்வதேச நீதிமன்றம்
- செயலகம்

23) பொதுச்சபையின் அதிகாரங்களும் செயற்பாடுகளும்,

- நாடுகளின் பொருளாதார, சுகாதார, மனித உரிமைகள் போன்ற துறைகளின் முன்னேற்றத் திற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.
- ஐக்கிய நாடுகளின் வரவு செலவுத் திட்டத்தை ஆராய்ந்து அனுமதி வழங்குதல்.
- செயலாளர் நாயகத்தைத் தெரிவு செய்தல்.

24) ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக எடுத்த முயற்சிகள்,

- சுயஸ் கால்வாய் நெருக்கடி
- வளைகுடா நெருக்கடி
- கியூபாவின் ஏவுகணை நெருக்கடி

25) தற்கால உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்,

- பொருளாதார தடை விதித்தல்
- அணு ஆயுதங்களைக் குறைக்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல்
- சமாதானப் படையை ஈடுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/Vipulananda College SCHOOL LIBRARY TRINCOMALEE

| | | |
|---|---|---|
| **வழிகாட்டலும் ஆலோசனையும்:** | திருமதி.ஜெ.அருள்ானந்தம் (வலயக் கல்விப் பணிப்பாளர்) | |
| **திட்ட அமுலாக்கம்:** | திரு.தே.ஜயந்தன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி) | |
| **திட்ட நெறிப்படுத்தல்:** | திரு.இ.மகாதேவன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - தமிழ்) | |
| | திரு.எம்.எம்.ஹாபிஸ் மரிக்மார் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - வரலாறு) | |
| **வசதிப்படுத்துநர்கள்:** | திருமதி.இ.ரகுந்திரராஜா | ஆசிரிய ஆலோசகர் (தமிழ்) |
| | செல்வி.T.சாரதா | ஆசிரிய ஆலோசகர் (வரலாறு) |
| **திட்ட ஒழுங்கமைப்பும் வளப்படுத்தலும்** | திரு. R.அரியரெத்தினம் | முகாமையாளர், சிறுவர் அபிவிருத்தி நிதியம் (CDF) |
| | திரு.பூ.உதயகுமார் | நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் (கல்வி), சிறுவர் அபிவிருத்தி நிதியம் (CDF) |

**வளவாளர்கள்:**

**பாடம்**

| | | |
|---|---|---|
| **தமிழ்மொழி** | 1. திருமதி.இ.ரகுந்திரராஜா | ஆசிரிய ஆலோசகர் (தமிழ்) |
| | 2. திரு.V.சுந்தரராஜன் | தி/உவர்மலை வி.கல்லூரி |
| | 3. செல்வி.K.தேன்மொழி | தி/ஆத்திமோட்டை தமிழ் வித் |
| | 4. திருமதி.A.சிவனருள்நிதி | தி/இ.க.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இ.க |
| | 5. திரு.S.யூட்பேக்மன் | தி/புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி |
| **வரலாறு** | 1. செல்வி.T.சாரதா | ஆசிரிய ஆலோசகர் (வரலாறு) |
| | 2. திரு.N.ரமணன் | தி/ஆத்திமோட்டை தமிழ் வித் |
| | 3. திரு.S.திலீபன் | தி/கோபாலபுரம் அ.த.க.பா |
| | 4. திரு.S.அலெக்சாந்தர் | தி/பாரதிபுரம் த.வி |
| | 5. திருமதி.T.கெங்காதரன் | தி/உவர்மலை வி.கல்லூரி |
| | 6. திருமதி.S.ஜெயருபன் | தி/புனித சூசையப்பர் கல்லூரி |
| | 7. திருமதி.M.பொன்னம்பலம் | தி/ஸாகிராக் கல்லூரி |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்,
வாக்கினி லேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்.
கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்,
பெரிய கடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்.



Website www.trincozone.sch.lk

YouTube www.youtube.com/trincoeducation

facebook www.facebook.com/TrincoZEO

twitter www.twitter.com/TrincoZEO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org